டிசம்பர் 12 முதல்
சென்னை
பாரகன்·பிரபாத்
சரஸ்வதி மற்றும்
தென்னாடெங்கும்
ஸாஹினியின்
அதிசயதிருடன்
டைரக்ஷன்... P.புல்லையா B.A
ஸ்டுடியோ
விஜயா & வாஹினி
தயாரிப்பு... S.பவநாராயணா · D.B.நாராயணா

REMEMBER "G. K"

The famous place Supplying Timber & Plywood
To Leading ARTISTS & STUDIOS

BHARAT PLYWOOD AND TIMBER PRODUCTS LTD.

Manufacturers of Commercial Plywood,
Block Boards, Lamin Boards, Tea-Chests
and Laminated Furniture.

(SUPPLIERS THROUGHOUT INDIA)

LAMINEX
PLYWOOD

Head Office:
CANNANORE
N. MALABAR.

Sales Depot:
84, SYDENHAMS ROAD,
MADRAS-7.

GORDHANDAS KHIMJI

TIMBER MERCHANTS,

84, SYDENHAMS ROAD — MADRAS-7.

விரைவில் வருகிறது!



சித்ரா மூவீஸ்

அதிகாரி

S.S.ராஜேந்திரன் .. E.V.சரோஜா

விஜயகுமாரி .. முஸ்தபா.. மற்றும் பலர்

டைரக்ஷன் & கேமரா
M.மஸ்தான்

தயாரிப்பு
A.A.லதீப்

வசனம்: தர்மராஜன் • சங்கீதம்: C.N.பாண்டுரங்கன்

விவரங்களுக்கு: 11, நியுகிரிரோட், சென்னை-17.

Leo Movie Corporation.

Financiers & Distributors

115, 1ST MAIN ROAD
C.I.T. COLONY
MYLAPORE MADRAS-4.

BALU BROS

விரைவில் வருகிறது!
நாடும் ஏடும் போற்றத்தக்க
நற்றமிழ்ச் சித்திரம்...!
விஜயா பிலிம்ஸ்
புனர் ஜன்மம்
தயாரிப்பு...
என்.எஸ்.திரவியம்
வசனம்: ஸ்ரீதர் ★ டைரக்ஷன்: ஆர்.எஸ்.மணி
BALU BROS

வருகிறது
பிரபு பிலிம்ஸ் அளிக்கும்
உலகம் சிரிக்கிறது!
நடிகவேள்
M.R.ராதா
பிரேம் நஸீர்
சௌகார் ஜானகி
காகா ராதாகிருஷ்ணன்
முதலாளி கன்னையன்
C.P.கிட்டன். முத்துராமன்
சாந்தி, லக்ஷ்மிகாந்தம்
வெங்கடாசலம் மற்றும் பலர்
கதை வசனம்: துறையூர் K.மூர்த்தி. சங்கீதம்: S.தக்ஷிணாமூர்த்தி
டைரக்ஷன்: R.ராமமூர்த்தி. காமிரா: V.ராமமூர்த்தி
Arts & Coy.

உரிமையாளர்கள்: எம். ஆர். டி. & திருச்சி, தஞ்சாவூர்: ஸ்ரீ சத்திய நாருயண் பிக்சர்ஸ் சென்னை-18. இதர இடங்களுக்கு: பிக்சர் பைனான்ஷியர்ஸ் சென்னை-10. விநியோகிஸ்தர்கள்: மதுரை, ராமனாதபுரம், திருநெல்வேலி & கன்யாகுமரி ஜில்லாக்களுக்கு: மகாத்மா பிக்சர்ஸ், 45-A மேற்கு ஆவணி மூல தெரு, மதுரை. புக்கிங்குகளுக்கு: ஸ்ரீ சத்திய நாருயண் பிக்சர்ஸ், 33, அபிராமபுரம் 4-வது தெரு சென்னை-18.

பொங்கல் வாழ்த்துக்கள்

பாலு சகோதரர்கள் அளிக்கும் கலைப் பொக்கிஷம்

- ★ அகம் காட்டும் காதல்
- ★ புறம் தரும் வீரம்
- ★ நற்றிணையும் நல்ல குறுந்தொகையும் கற்றறிந்தோர் ஏத்தும் கலியும்காட்டும் தமிழ்ப் பண்பு
- ★ தமிழகம் தந்த அரசியல் தலைவர்கள்
- ★ இயற்கைக் காட்சிகள்
- ★ திரையுலக தாரகைகள்

இவர்களின் வண்ண ஓவிய முகப்புகளுடன் தமிழ்ச் சான்றோர்கள் தமிழர் திருநாளைப்பற்றி எழுதிய கருத்து விளக்கங்களுடனும் வெளி வருகிறது.

கருத்தழகும் ஓவியச் சிறப்பும் நிறைந்த இவை போன்ற வாழ்த்துக்கள் தென்னகத்தில் வருவது இதுதான் முதல் முறை

பொங்கல் அன்று உங்கள் நண்பர்களுக்கும் அன்பர்களுக்கும் அளிப்பதற்கு ஏற்ற பொங்கல் பரிசு.

54 வகை டிசைன்களில் இதுவரை யாரும் கண்டும் கேட்டும் அறியாத வகையில் ஐந்து கலர் வரையில் அழகிய ஆர்ட் காகிதத்தில் தயாராகிறது.

✻

விபரங்களுக்கு :

அமிர்தம் ஏஜன்ஸீஸ்

131, தாயார் சாகிப் தெரு, சென்னை—2

வெளியிடுவோர் :
ஓவியன்: அ. பாலு

ஆசிரியர் :
ஓவியன் : அ. சீனு

தூரிகை-1] விளம்பி-கார்த்திகை, டிசம்பர்-'58 [சித்திரம்-7

பொருளடக்கம்

	பக்கம்
எங்களைப் பாருங்கள் (தலையங்கம்) ...	11
இம்மாத செய்திகள் ...	14
நட்சத்திரத்தின் வீட்டில் நட்சத்திரம்	16
சுடர்மணிகள் ...	18
சந்திப்பு (எம். என். ராஜம்) ...	20
செய்திகள் ...	27
இயற்கை வண்ணப் படங்கள் ...	33
போட்டோ: கே. அருணாசலம்	
சாவித்திரி	
குசலகுமாரி	
ராஜசுலோசனா	
எம். என். ராஜம்	
பண்டரிபாய், தேவிகா	
போட்டோ : கோட்டி	
-பி. எஸ். சரோஜா	
மைனாவதி	
ஹாலிவுட் ...	41
ரஷ்யா ...	44
தி. ஆ. பெ. விசுவநாதம் 60ம் ஆண்டு விழா ...	46
வடக்கின் வளர்ச்சி ...	52
கேள்வி பதில் ...	57
மறைந்த நட்சத்திரத்துடன் சந்திப்பு	62
ஸ்டுடியோ அழைக்கிறது ...	66

	பக்கம்
புலவர்கள் பித்தர்களா ? ...	81
நேயர் தபால் ...	86
மக்கள் கவி அரங்கம் ...	90
மேனாட்டறிஞர் கண்ட தமிழகம் ...	92
நம் நாட்டு வீரப் பெண்மணிகள் ...	94
குறளோவியப் படங்கள் ...	97
குறளோவியம் ...	99
முட்டையும் காதலும் ...	101
ஓவியக் கலை ...	104
மனித தெய்வங்கள் ...	107
யேசுநாதரின் வாழ்க்கைச்சித்திரங்கள்	110
பத்திரிகை ஆசிரியர்கள் ...	114
கல்லிலே வடித்த கட்டழகு ...	115
தமிழ் ஒரு வான விளக்கு ...	118
சினிமாவின் கதை ...	120
கட்டபொம்மன் ...	122
போட்டோக் கலை ...	126
மேனாட்டு நடிகரும், நம் நாட்டு நடிகரும் ...	128
தமிழகத்தின் பெருமை ...	131
சின்ன விஷயமல்ல...	132
உழைப்பால் உயர்ந்தவர் ...	134
பல்லவ மன்னன்-நந்திவர்மன் (தொடர் நாடகம்) ...	136
பரிசு பெற்ற கட்டுரைப் போட்டி ...	142
வாழையடி வாழையாய் ...	144

' கலை 'யில் வெளியாகும் கதை, கட்டுரை, சம்பவங்களில் வரும் பெயர்கள் யாவும் கற்பனையே.

போட்டோ : கே. அருணசலம்.

எங்களைப் பாருங்கள் ! →

"உழைப்பு என்பதே அறியாமல் எங்கிருந்தோ, எப்படி எப்படியோ, பொருள் சேர்த்து, ஒருவருக்கும் பயனில்லாமல் நடந்து கொள்ளும் சிலருக்கு ஏழைகள் சொல்லும் சில நல்லுரைகள்.

எப்பொருள் யார் யார் வாய்க்
கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு.

அன்னையும் பிதாவும் முன்னறி
தெய்வம்.
லோகா அமிர்தம் எங்கள்
தெய்வம்.

எங்களைப் பாருங்கள்!

எங்களைப் பாருங்கள்! நாங்கள் வாழப் பிறந்தவர்கள்! அடிநாள் தொட்டு அந்த எண்ணத்துடனேயே எங்களின் வாழ்க்கையைத் துவக்கியவர்கள்! எங்கள் லட்சியம் ‘கவலையற்ற வாழ்வு!’—அதை நாங்கள் தினமும் பெறுகிறோம்! அதனால் கிடைக்கும் திருப்தியால் எங்கள் முகம் மலருகிறது; எங்கள் உள்ளம் பூரிப்படைகிறது! நாங்கள் புதியவர்களாகவே என்றென்றும் காட்சி தருகிறோம்.

பசித்தபோது புசிக்கிறோம்—கிடைத்ததைத் தான்!! அதொன்றுதான் எங்களின் கவலை......இல்லை......தேவை...! அதைப் பெறுவதிலே நாங்கள் அதிக சிரமமடைவதில்லை. கனி, கிழங்கு, பழைய சாதம், மீதமான உணவு இவை போன்றவைகளே எங்களின் பிரச்னையைத்தீர்க்கப் பெரிதும் உதவுகின்றன. இவைகளைப் பெறுவதற்காக நாங்கள் யாரை வஞ்சிக்க வேண்டும்? யாரிடம் பொய் சொல்ல வேண்டும்? எவரை ஏமாற்ற வேண்டும்? எவரிடம் திருட வேண்டும்?—எனவே தான் நாங்கள் கவலையற்று இருக்கிறோம். எங்கள் முகத்திலே களங்கமில்லை-எங்கள் உள்ளத்திலே கள்ளமில்லை. எங்கள் சொல்லிலே செயலிலே பொய்யும் புரட்டுமில்லை! இவைகளுக்கு மாறாக எங்கள் முகத்திலே மலர்ச்சி யுண்டு! நெஞ்சத்திலே நேர்மையும், சொல்லிலே அன்பும் செயலிலே திருப்தியும் நிலவிக் கிடக்கிறது! அடுத்த வேளைக்கு வேண்டுமே என்ற கவலைக்கு நாங்கள் இறையாவது கிடையாது. இருக்க ஒரு இடத்தைப்பற்றியோ, அணிய ஆடைகளைப் பற்றியோ நாங்கள் அதிகமாகக் கவலைப்படுவது கிடையாது! மழையும் குளிரும், வாடையும் கோடையும் எங்களின் நண்பர்கள்! கானலும் கடும் பனியும் எங்களின் கூட்டுத் தோழர்கள்! வறுமை எங்களின் வழி காட்டி! இந் நிலையில் நாங்களோ பரமதிருப்தியாளர்கள்!!

எங்களுக்குள்ளே சண்டை கிடையாது. சச்சரவு கிடையாது! அழிவு எண்ணமும் அகம்பாவ சிந்தையும் எங்களுக்குள்ளே எழுந்ததே இல்லை...அன்பும், கருணையும், ஈகையும், இரக்கமும், அறிவும் அடக்கமும் கொண்டு வாழுகிறோம் நாங்கள்! காலை உணவு கானருவியில் என்றால் மதிய உணவு மலையுச்சியில். ‘இரவு உணவோ கிடைத்தால் புசிப்போம். இல்லை

யேல் சந்தோஷமாகக் கண்ணயர்வோம்! பட்டினி எங்களின் பொக்கிஷம்! மற்றவர்களைப் போல பல லட்சங்களை நாங்கள் அதிலே குவித்து வைத்து அனுபவிக்கவோ, காவல் காத்துக் கிடப்பதில்லை. எங்களின் மனப்பொக்கிஷத்திலே குவிந்துகிடப்பதெல்லாம் வெறும் நம்பிக்கைதான்! உலகை எண்ணம் உருவாக்கியதைப்போல எங்களின் நித்திய வாழ்க்கையை நம்பிக்கைத்தான் உருவாக்கிறது! எனவே தான் திருடாமல், வஞ்சிக்காமல், ஏன்? மானத்தையும் கற்பையும்கூட இழக்காமல் வாழுகிறோம், ஆனால் எங்களைப் போன்ற நிலையிலா நீங்கள் வாழுகிறீர்கள்? சற்றே சிந்தித்துப் பாருங்களேன்! எங்களைத் தீண்ட அஞ்சும் நோய் உங்களிடம் உறவு கொள்ளுகிறது. எவ்வளவு செல்வத்திலே நீங்கள் புரண்டாலும், கவலை ரேகைகள் உங்கள் முகத்திலே படர நாங்கள் காண்பதுண்டு. பணப்பெட்டி நிரம்ப, உங்களின் மனப் பேழையிலே மல்கிக் கிடக்கும் பொய்யையும் வஞ்சத்தையும் நீங்கள் சிலவிடுகிறீர்கள்! ஆயிரம் லட்சமாகி, லட்சம் பல லட்சமாவதே உங்களின் லட்சியம். தட்டை வீடு மாடி வீடாகி, மாடி மாளிகையாக வேண்டுமென்பதுதான் உங்களின் மன நோய்! அதிலேயும் நீங்கள் திருப்திகாணுவதில்லை. உண்ணும் உணவு, உடுக்கும் உடை, வாழும் வீடு, தேடி வைத்திருக்கின்ற செல்வக் குவியல் எதுவுமே உங்களை திருப்தி யுலகிற்கு அழைத்துச் செல்வதில்லை! அது மட்டுமா? சிலருக்குக் கட்டிய மனைவியர்கூட வேம்பாகி, விழி வேட்டைக்குத் தயாராகும் நிலை பிறக்கிறது! சிலருக்கோ குடித்து மகிழ்வதும், கற்பழித்துத் திரிவதும்தான் நித்திய நிகழ்ச்சியாகக் கிடக்கிறது. ஆனால் எங்கள் நிலை அப்படியா? கற்பு, மானம், நேர்மை, கண்ணியம், கடமையுணர்ச்சி இவைகள் தானே அணிமணிகளாகின்றன. எனவேதான் நாங்கள் கவலையற்ற வாழ்வு வாழுகிறோம்.

ஆனால் உங்களுக்கு இரவில்தான் பணம் காத்துக் கிடக்க வேண்டிய வேலையில் தூக்கமிருப்பதில்லை என்றால் பகலிலோ பணம் சேர்க்கப் புறப்படும் வேலையே பெரிதாக இருக்கிறது. செயற்கை அழகைத் தவிர, உங்களிடம் ஆண் பெண் ஈருக இயற்கை அழகும் மணமும் இருப்பதில்லை. சதா கவலை. பணம்...பணம்...இதுதான் உங்கள் இதயகீதம்! திருடியவன் கூட பணத்தைத் தைரியமாக சிலவு செய்கிறான். ஆனால் உங்கள் கள்ளமார்க்கெட்டு லாபமோ எங்கும் சேர்த்துவைக்க முடியாததாகி விடுகின்றபோது நீங்கள் இரவும் பகலும் படும் - கவலைகளுக்கு - வேதனைகளுக்கு எத்தனை நாள் நாங்கள் எங்கள் அனுதாபங்களைத் தெரிவித்திருக்கிறோம் தெரியுமா?

கற்பும், ஒழுக்கமும் எங்களுக்கு உயிர்! உங்களில் சிலருக்கோ அதுதான் வேம்பு! அன்புடன் எங்கள் கணவர்களுடன் நாங்கள் இணைந்து வாழுகிறோம். ஆனால் உங்களின்

குடும்பச் சண்டை கோர்ட்டுக்குப் போனாலும் தீர்வதில்லை. பரிதாபம்! பரிதாபம்! எங்கள் குழந்தைகளுடன் நாங்கள் கொஞ்சுகிறோம். ஆனால் அதற்கு உங்களுக்கு நேரமிருப்பதில்லைதான்! உங்களுக்குக் கொஞ்சவும் குலவவும் குழந்தைகளிருப்பதில்லை. மாறாக உங்கள் குலவுவதலும், தழுவுவதலும் வெவ்வேறிடத்திலே நீங்கள் வைத்திருக்கிறீர்கள்! இறுதியில் மனமுடைந்து நோய்க்கிரையாகிப் போகிறீர்கள் சேர்த்தப் பணம் தேங்கிக் கிடக்கிறது!

நீங்கள் ஒன்றுக்கும் பிரயோசனமில்லாத, பேங்கில் போட முடியாத நோட்டுகளை எண்ணி எண்ணி அடுக்கி வைத்து அவதிப் படுகிறீர்களே, இவ்வுலகில் உங்களுடன் கூடப்பிறந்த நாங்கள் அவதிப்படுவதை எண்ணி எண்ணிப் பாருங்கள். நீங்கள் மகிழ்ச்சியுடன் வாழவேண்டுமானால், களங்கமற்ற முகத்துடன் இருக்க வேண்டுமானால், நமது கடமையை நாம் செய்து விட்டு இவ்வுலகை விட்டு பிரிகிறோமென்று இறுதிகாலத்தில் விரும்பினால் எங்களைப்போன்ற ஏழைகளையும் கவனியுங்கள்.

எனவேதான் 'எங்களைப் பாருங்கள்!' என்று அன்போடு அழைக்கிறோம். ஆனால் நீங்கள் எங்கே எங்களரிகிற்கு வரப் போகிறீர்கள்? வரத்தான் முடியுமா உங்களால்?



பாலு பிரதர்ஸ்
பப்ளிகேஷன்ஸ்
சென்னை-2.

தயாராகிறது!

திருக்குறள்
விளக்கமும், ஆராய்ச்சியும்.

★ ★

குறள் ஓவியங்கள்
பாகம்-1, பாகம்-2, பாகம்-3.

★ ★

KURAL PICTURES
IN ENGLISH
(INTERNATIONAL EDITION)

★ ★

ஆசிரியர் அருண் எழுதிய
அன்றும், இன்றும்;
அந்த நாளில்

★ ★

மனித தெய்வங்கள்
பாகம்-1, பாகம்-2.

பாலு பிரதர்ஸ் பப்ளிகேஷன்ஸ்
131, தாயார் சாகிப் தெரு, சென்னை—2

CURRENT NORTH EAST

இம் மாத

அக்

15 டுனீஷியா–ஈஜிப்ட் இடையேயுள்ள ராஜீய உறவு ரத்து. ஜனாதிபதி நாசருடன் பிளவுஏற்பட்டதென டுனீஷியா அறிவிக்கிறது.

16 900 ஓராசிரியர் பாடசாலை ஏற்படுத்த அங்கீகாரம், இதற்கென 2000 ஆசிரியர்கள் நியமனம். சென்னை சர்க்கார் அறிவிப்பு.

17 துணியின்மீதுள்ள வரி விதிப்பு...மேலும் குறைப்பதற்கு இயலாதென கான்பூரில் மத்யமந்திரி லால்பகதூர் சாஸ்திரி அறிவிப்பு.

18 மோசமான மக்கள் கூட்டத்தினூடே பழகநேரும்போதும் கூட நேச மனப்பான்மையுடனேயே நடந்து கொள்ளவும். மவுண்ட் ஆபூவில் போலீசாருக்கு நேருவின் புத்திமதி.

19 தேசீய புனர் அமைப்பு; சர்வகட்சி மகாநாடு கூட்ட ஜெய்பிரகாஷ் நாராயண் நேருவுடன் சம்பாஷணை.

20 கேரளாவில் போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம். வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்களால் நேர்ந்த கலவரம். இருவர் மரணம்.

21 11,000 ரூபாய் மதிப்புள்ள 10 ரூபாய் கள்ள நோட்டுகள் பிடிபட்டன. இது சம்பந்தமாக 7 நபர்கள் கைது.

22 குமாயிலிருத்து முக்ய நகரைத் தாக்க நோக்கம் அல்ல. டல்லஸ்–சியாங்கே ஷேக் பேச்சுபற்றி அமெரிக்கர் அறிவிப்பு.

23 ரஷ்யா 400 மில்லியன் ரூபில்கள்,அரபுக்கு அஸ்வான் அணைக்கட்டு திட்டத்திற்கு கடனாக கொடுத்துதவப்போவதாக மாஸ்கோவில் குருஷேவ் அறிவித்தார்.

24 இந்தியாவிற்கு ஜப்பானின் புதிய கடனுதவி–ரூபாய் ஒரு கோடிக்கு கையொப்பமாகியதாக டோக்கியோ செய்தி கூறுகிறது.

25 முதல்தர கிரிக்கட் ஆட்டத்திலிருந்து ஓய்வு-பிரபல ஆட்டக்காரரான முஷ்டாக் அலி சென்னையில் தெரிவித்தார்.

26 தேசத்தின் நிலைமையையொட்டி தங்கள் செய்கைகளை மாற்றிக் கொள்ளும்படி டாக்டர் லட்மணசாமிமுதலியார் மாணவர்களைக் கேட்டுக்கொண்டார்.

27 பாண்டி ராஜ்ய சபையைக் கலைக்க அரசாங்கம் முடிவு. விரைவில் தேர்தல் நடக்குமென புது டெல்லி அறிக்கை கூறுகிறது.

28 கார்டினல் ஆங்கிலோ ஜியோப்பி பொன்செல்லி புது போப்பானார். 23வது ஜான் என்ற பெயரைச் சூட்டிக்கொண்டார்.

29 ருஷ்ய எழுத்தாளர் போரிஸ் பாஸ்டர் மாக், நோபல் பரிசை நிராகரித்து விட்டதாக ஸ்டாக்ஹோம் செய்தி கூறுகிறது.

30 ராணுவ அதிகாரி ஜெனரல் நூவின், பர்மாவின் பிரதம மந்திரி பதவியேற்றதாக ரங்கூன் அறிக்கை தெரிவிக்கிறது.

31 இந்தோனேஷிய பத்திரிகை தூதுகோஷ்டி பம்பாய் வந்து சேர்ந்தது. 15 நாட்கள் இந்தியாவில் சுற்றுப்பிரயாணம்.

WEST SOUTH



தினச் செய்திகள்

நவம்

1 அணுசக்தி இல்லா தேசங்களின் உரிமைகளை மதித்து, எல்லா பேரசுகளும் உடனே அணுசக்தி பரீட்சையை நிறுத்தவேண்டு கோள் விடுத்து ஒரு தீர்மானம் ராஜாஜி தலைமையில் நடந்தது.

2 படிக்காத பாமர மக்களுடன் சேர்ந்து அவர்களின் முன்னேற்றத்திற்கு உழைக்குமாறு பரோடாவில் நேரு இளைஞர்களுக்கு புத்திமதி விடுத்தார்.

3 அன்பு, சத்யம் போன்ற நிரந்தர உண்மைகளால் தான் விசோசனம். பாரிசில் யுனெஸ்கோ கட்டிடத் திறப்பு விழாவில் உதவி ஜனாதிபதி ர்ராதாகிருஷ்ணன் புத்திமதி.

4 பஞ்சாயத்து மசோதா சென்னை மேல் சபையில் நிறைவேறியது. இம்முயற்சி வெற்றிபெற மெம்பர்கள் ஆசி.

5 1961ம் ஆண்டுக்குப் பிறகு மின்சார வெட்டு அவசியமில்லையென மந்திரி ராமய்யா தெரிவித்தார்.

6 மந்திரி பக்தவத்சலம் தலையீட்டு காரணமாக, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர் அதிகாரிகளும் தொழிலாளர்களும் சமரசத்திற்கு ஒப்புக் கொண்டனர்.

7 சிறு தூர ரயில் போக்குவரத்திற்கு, டீஸல் வண்டிகள் உபயோகம்– உதவி மந்திரி எஸ். வி, ராமசாமி கோவையில் அறிவிப்பு.

8 தமிழ்—ஆங்கில அகராதி வெளியீடு. ரூபாய் ஒன்றரை லட்சம் தருவதாக கலாசாலை நிதி கமிஷன் சென்னை பல்கலைக் கழகத்திற்கு தெரிவித்துள்ளது.

9 பரம்பிக்குளம் தண்ணீர்பற்றியசென்னை-கேரளராஜ்யங்கள்பேச்சு வெற்றியுடன் முடிந்தது. மந்திரி பந்த் மகிழ்ச்சி.

10 மன்னர் ஹுசேனின் விமானம் சிரியா ராஜ்யத்தின்மேல் செல்லும்பொழுது சுடப்பட்டது. ஐக்ய அரேபியா கட்சிகளின்மேல் மன்னர் குற்றச்சாட்டு.

11 காருண்ய மனப்பான்மை அதிகரிக்க ஒத்துழைக்கவும் ; ஜனாதிபதி பிரசாத் டெல்லியில் கால்கோள் நாட்டு விழாவில் வேண்டுகோள்.

12 தமிழ்ப்புலவர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களின் 60ம் பிறந்த நாளையொட்டி திருச்சியில் 49 பண்டிதர்களைக்கொண்ட 'தமிழக புலவர் குழு' என்ற ஒரு தனிக்கட்சி, முன்னாள் மதுரை கடைச் சங்கம்போல் செயலாற்ற ஏற்பட்டுள்ளதாக திருச்சி செய்தி கூறுகிறது.

13 கே. வி. கே. சாமி கொலை வழக்கு எதிரொலி. தங்கப்பழம் விடுதலை. சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு.

14 பண்டித நேருவின் 69ம் பிறந்த தின விழா. இந்தியாவெங்கும் குழந்தைகளின் தினம் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது

நட்சத்திரத்தின் வீட்டில்





1. ராஜசுலோசனாவின் உயிர்த் தோழி ராகினி, கலோசனாவின் வீட்டிற்கு வருகிறார். அவரை அன்புடன் வரவேற்கின்றனர் சுலோசனாவின் கணவர் பரமசிவமும், குமாரன் ஷியாம் சுந்தரும். 2. பரமசிவமும், ராகினியின் சகோதரர் சந்திரகுமாரும் ரேடியோகிராமுடன் ஐக்கியமாகி விட்டிருக்கின்றனர். 3. ராகினியும், சுலோசனாவும் ஐஸ்கிரீமை பரிமாறிக் கொள்கிறார்கள் வேடிக்கையாக. 4. புகைப்படத்திற்காகக் கொடுத்த குதூகல போஸ். 5. சுலோசனாவுடன் குஷியாக மாலைப் பொழுதைக் கழித்து விட்ட ராகினி விடை பெறுகிறார். 6. ‘டாடா...சீரியோ... .. ஓய்வு கிடைக்கும் சமயம் வருகிறேன்’ என்று பிரியாமல் பிரிகிறார் ராகினி.

புகைப்படம் : ஆனந்தன்.

நட்சத்திரங்கள்.....!







சுடர் மணிகள்

அமைச்சர் எம். பக்தவத்சலம்

"சத்தியின்றி ரத்தமின்றி" மகாத்மா விடுதலைப் போராட்டத்தை நடத்தினார். ஆனால், அதைக் கொண்டு அவர் தம் விடுதலைப் போரில் ஆயுதமே பயன்படுத்தவில்லை என்று எண்ணக்கூடாது. எதிரியை வதைக்காமல், ஆனால், நமக்கு வெற்றியைத் தரவல்ல புதுமையான ஆயுதங்களை அவர் தம் பாசறையிலே வைத்திருந்தார். சட்ட மறுப்பு, ஒத்துழையாமை, தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு என்பவைகளில் தொடங்கி உண்ணா நோன்பு வரை பலவகை அஸ்திரங்களை அவர் லாகவமாகக் கையாண்டார். அவருடைய ஆயுதங்களில் முக்கியமானவை கதரும் கிராமக் கைத்தொழில்களும் ஆகும்.

சுழலும் ராட்டைக்கும் குடிசைத் தொழில்களுக்குமிடையே தொடர்பு உண்டு. இது பற்றி மகாத்மா ஒரு சமயம், தமக்கே உரித்தான முறையில் மிக அற்புதமாக வர்ணித்தார். "ராட்டையும் குடிசைக் கைத்தொழில்களையும் சூரிய மண்டலம் எனக் கொண்டால் ராட்டையே சூரியன். இதன் நியதிக்கு உட்பட்டுச் சுழல்கிற கோள்களே மற்ற கைத்தொழில்கள். பிரிட்டிஷ் ஆட்சியில் இந்தச் சூரியன் ஒளி இழந்தபோது கோள்களும் தங்கள் சக்தி இழந்து கண்ணுக்குத் தெரியாமல் போய் விட்டன. இப்போது சூரியனைப்

பழையபதவியில் இருத்தியிருக்கிறோம். சூரியனுடைய ஆற்றலுக்கு ஏற்பக் கோள்களும் ஒளி பெற்று வருகின்றன" என்று மகாத்மா கூறியதில் எவ்வளவு உண்மை!

மகாத்மாவின் வழிகள் புதுமையானவை மட்டுமல்ல, புரட்சிகரமானவையுமாகும். அவருடைய ஆயுதங்கள் இருபுறம் கூர் உள்ளவை. கதரும், குடிசைத் தொழில்களும் அந்நிய ஆதிக்கத்தை ஒழிப்பதில் உதவும் சக்தி வாய்ந்த ஆயுதங்களாகவும் அவை இன்று விளங்குகின்றன.

இந்தியாவில் 36 கோடி மக்கள் இருக்கிறார்கள். இப்படிக் கோடிக்கணக்கில் இருக்கும் மக்கள் அனைவரையும் யந்திரத் தொழிலில் ஈடுபடுத்துவதென்பது சாத்தியமல்ல. யந்திரத்

தொழிலில் ஈடுபடுத்த முடிய வில்லை என்பதற்காக மக்களைச் சோம்பேறிகளாக இருக்க விடு வதும் கூடாது. வேலை இல் லாமல் இருப்பவர்களுக்கும், வேளாண்மை போன்றவற்றில் ஓரளவுக்கே வேலை உள்ளவர் களுக்கும் துணைத்தொழில் இருந் தாக வேண்டும். ஏராளமான பேருக்கு வேலை வாய்ப்பைத் தரக்கூடியவை கதரும், குடி சைக் கைத்தொழில்களுமே யாகும்.

புதிய பாரதத்தை நிர்மாணிக் கும் பணியில் நாம் வெல்ல வேண்டிய முதல் எதிரி சோம் பல். "சோம்பலை விரட்டு வதற்கு இந்த ராட்டையைத் தவிர வேறு யந்திரமில்லை" என்று மகாத்மா சொன்னார். ஒருவர் பாக்கியில்லாமல் மக்கள் அனைவரும் வேலை செய்யத் தொடங்கி விடுவார்களானால் தொழிலில் ஊக்கம் பிறக்கும்; சோர்வு மறைந்து மனதில் நம் பிக்கை தோன்றும். அப்பால் வாழ்க்கைப் பிரச்னைகளை எல் லாம் சமாளிக்கக் கூடிய தைரி யம் தானாக ஏற்படும்.

யந்திரத் தொழிலில் ஈடுபட் டிருப்பவர்களுக்கு அதிக வரு மானம் கிடைப்பது போலவும், குடிசைக் கைத்தொழிலில் உள் ளவர்களுக்கு குறைவாகக் கிட்டு வது போலவும் தோன்றலாம். ஆனால், யந்திரத்தொழில் பகுதி யில் கிடைக்கும் வருமானத்தி லிருந்து, அங்குள்ள ஜனநெருக் கம், அதனால் ஏற்படும் வசதிக் குறைவுகள், செலவு அதிகரிப்பு முதலியவைகளைக் கழித்துப் பாருங்கள். குடிசைக் கைத் தொழில் உள்ள கிராமப் பகுதி களில் இயற்கை வாழ்வு, வசதி கள், தன்னம்பிக்கை முதலிய வைகளை, அந்தக் குறைந்த வருமானத்துடன் கூட்டிக் கொள்ளுங்கள். நிகர வருமானம் என்ற அளவில் பார்த்தால் அதிக வித்தியாசம் தெரியாது. எது உயர்ந்ததாக சாதாரண மக்களால் கருதப்படுகிறதோ, அந்தப் பிரமை நீங்கிவிடும்.

தேசம் விடுதலையடைந்த பின்பு, கதர், குடிசைக் கைத் தொழில்கள் விஷயத்தில் கூடு தல் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. கதர் அபிவிருத்திக் காக மாநிலத்தில் தனி இலாகாவே இயங்கி வருகிறது. வேலை வசதிகளை அதிகரிக்கவும், மக்களின் தேவைப் பொருள் கள் உற்பத்தியைப் பெருக்கவும் வசதியாக, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதற் கான வேலைத் திட்டங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. 2-வது திட்ட காலத்தில் கதர், கைத் தறி நீங்கலாக இதர சிறு கைத் தொழில்களின் அபிவிருத்திக் கென்று ரூ. 810 லட்சம் ஒதுக் கப்பட்டிருக்கிறது. கதர் அபி விருத்திக்காக 1956–57–ல் ரூ. 2. 87 லட்சம் செலவாகியது. 1958–59–ல் கதர் அபிவிருத்திக்கு ரூ. 69. 33 லட்சம் நிகர செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள் ளது.

கதரும் குடிசைக் கைத் தொழில்களும், இந்தியப் பொரு ளாதாரத்தில் பிரிக்க முடியாத பகுதிகள். மக்களுக்குப் பெரு வாரியான அளவில் வேலை வசதி தந்து அவர்களுக்குத் தொழிலை யும், உணர்வையும், நம்பிக்கை யையும் ஏற்படுத்தும் சக்திகள். அதுமட்டுமல்ல; வறுமை இரு ளைப் போக்குவதில் ஒளி வீசு கின்ற சுடர் மணிகளாவும் அவை திகழுகின்றன.

சந்திப்பு

M.N.ராஜம்

'கலை' செல்வம் .....

எல்லா வகையான பாகத்தையும் ஏற்று சிறப்புடனும், எழில் மிக்க வனப்புடனும், கச்சிதமாக நடிக்கக் கூடிய நல்லதொரு நடிகை எம். என். ராஜம் 1935-ம் வருஷம் ஆகஸ்டு மாதம், 26-ந் தேதி மதுரையில் பிறந்தார். ராஜம் சிறுமியாக இருக்கும்பொழுதே அவர் தந்தை நரசிம்ம ஆச்சாரி இறந்த விட்டார். ஆகவே ராஜத்தின் குடும்பம் சென்னைக்கு வந்தது. இங்கு வந்ததும் எம். கே. ராதாவின் உதவியால் எஸெஸ்கே நாடக சபாவில் சேர்ந்தார். 1946–ல் அவர்கள் தயாரித்த பைத்தியக்காரனில் முதன் முதலாக பாகமேற்றார். பின்னர் டி. கே. எஸ் சகோதர்களின் நாடக சபாவில் சேர்ந்து திறமை மிக்க நடிகையானார் அச்சமயத்தில்தான் அதே நாடக சபாவில் சிறந்த நடிகராக விளங்கிய காலஞ் சென்ற தக்ஷிணாமூர்த்தியை திருமணம் செய்து கொண்டார். பின்னர் கணவரின் முயற்சியால் படங்களில் பாகமேற்கத் தொடங்கினார். "ரத்தக் கண்ணீர்" மூலம் சிறந்த நடிகையானார் இவர் இது வரையில் சுமார் 40 படங்களுக்கு மேல் நடித்துள்ளார். இன்னும் தொடர்ந்து சுமார் 20 படங்களுக்கு மேல் நடிதது வருகிறார். எப்பாகத்திலும் தனது நடிப்பின் உயர்வை பிரதிபலித்து ரசிகர்களின் ஏகோபித்த பாராட்டுகளுக்குப் பாத்திரமாகி வரும் ராஜத்தை சந்தித்தேன்....ஆகவே. மேலே தொடருங்கள்......எனது கேள்வியும். அவரது பதிலும் உங்களை வரவேற்கும்...

○ காலையில் எத்தனை மணிக்கு எழுந்திருக்கிறீர்கள்?

★ ஆறு மணிக்கு. படப்பிடிப்பு இல்லையானால் எனக்கே தெரியாது!

○ எது உங்களை விழிப்படையச் செய்கிறது?

★ கடமை.

○ எழுந்தவுடன் என்ன செய்கிறீர்கள்?

★ ஸ்நானம் செய்து விட்டு கடவுளைத் தொழுவேன்.

○ காலை சிற்றுண்டி என்ன சாப்பிடுகிறீர்கள்?

★ எதுவுமே சாப்பிடுவதில்லை!

○ எந்தவிதமான உடைகள் உங்களுக்குப் பிடித்தமானவை?

★ சுத்தமான... வெண்மையான...எளிய ஆடைகள்...

○ உங்கள் உறவினர், நண்பர்கள் மற்றும் வேண்டியவர்கள் வீட்டில் விசேஷம் நடந்தால் நேரில் போய் கலந்து கொள்வீர்களா?

★ நிச்சயமாக ......கலந்து கொள்வேன்.

○ உங்களிடத்திலுள்ள சிறந்த குணம்?

★ என்னைக் கேட்டால்...! என்னுடன் பழகுபவர்களைக் கேட்டால் தான் தெரியும்.

○ நீங்கள் விரும்பும் பண்பு?

★ நற்பண்பு.

○ நீங்கள் கோபக்காரரா?

★ சமயத்தில் உண்டு! தவறு செய்பவர்களைக் கண்டால் கோபப்படுவேன்.

○ நீங்கள் சினிமாத் தொழிலில் ஈடுபட்டதால் இப்பொழுது என்ன நினைக்கிறீர்கள்?

★ என்ன நினைப்பது... இத்துறையில் பெரிய

நடிகையாகத் திகழ வேண்டும்... அதை என்றும் நிலைநாட்ட வேண்டும்...!

○ மன்னிக்கவும்...! உங்களுக்குப் பிடித்த நடிகர்?

★ கலை சகோதரர்கள் அத்தனை பேர்களும்...!

○ உங்களுக்குப் பிடித்த தமிழ்ப் படம்?

★ அந்த நாள்!

○ உங்கள் அபிப்பிராயப்படி எந்தப் படத்தில் மிகவும் சிறப்பாக நடித்திருக்கிறீர்கள்?

★ பதி பக்தி.

○ எம்மாதிரியான பாகம் தாங்கி நடிக்க நீங்கள் ஆசைப் படுகிறீர்கள்?

★ எப்பாகமாயினும் சரி... திறம்பட... சிறப்பாக நடிக்கவேண்டுமென்பதே என் ஆவல்.

○ உங்களைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளாத படக் கம்பெனி ஒன்றைப் பற்றிச் சொல்ல முடியுமா?

★ இதுவரையில் எதுவுமில்லை!

○ நீங்கள் பள்ளியில் படித்தீர்களா? அப்படியானால் எந்தப் பாடத்தில் அதிக கவனம் செலுத்தினீர்கள்?

★ நான் நாடகப் பள்ளியில் படித்தேன். நாடகப் படிப்பிலேயே அதிக கவனம் செலுத்தினேன்.

○ உங்களுக்குப் பிடித்த புத்தகங்கள்?

★ டாக்டர் மு. வ., அகிலன், காண்டேகர், அண்ணா ஆகியோர் எழுதியவை.

○ நீங்கள் பார்த்து அதிசயித்து மெய்ம்மறந்த ஆங்கிலப் படமொன்று?

★ 'கேஸ் லைட்'

○ நீங்கள் அயல் நாடுகளுக்குச் செல்ல விரும்புகிறீர்களா? அப்படியானால் முதலில் எந்த நாட்டிற்குச் செல்ல விருப்பம்?

★ நிச்சயமாய் செல்ல விரும்புகிறேன்....அமெரிக்கா.

○ உங்களுக்குச் சமைக்கத் தெரியுமா? எந்த விதமான சமையலில் நீங்கள் கெட்டிக்காரர்?

★ நன்றாய் தெரியும்... அசைவ உணவு!

○ நீங்கள் எதைக் கண்டால் பயப்படுவீர்கள்?

★ பொறாமையைக் கண்டால்.

○ யாரைக் கண்டு மிகவும் இரக்கப்படுவீர்கள்?

★ தன்னைத் தானே புகழ்ந்து கொள்பவர்களைக் கண்டு!

○ எதனால் நீங்கள் ஆத்திர மடையக் கூடும்?

★ பொய் பேசுவோரைக் கண்டால்...

○ உங்களுக்குக் குழந்தைகளைக் கண்டால் பிடிக்குமா?

★ நிறைய பிடிக்கும்.

ரசிகர்களிடம் மேலும் எந்த வகையான சிறப்புப் பெயரை நிலைநாட்டலாமென்று சிந்தனை செய்கிறார் போலும் ராஜம்......



பொல்லாத மனிதர்களிடம் நல்லவளாக உறவாடி, நேசிப்பதாக நடித்துதான் வஞ்சக வலை வீச வேண்டுமென்று திட்டமிடுகிறுரோ ராஜம்...... 'தங்கப்பதுமை'யில் நம்பியாரைப் பார்த்ததும்.

○ நம் தேசத் தலைவர்களில் உங்களுக்கு யாரின் தொண்டு மிகவும் சிறந்ததெனத் தோன்றுகிறது ?

★ காந்தி...நேரு....

○ சினிமா நட்சத்திரமாவது சுலபமான காரியமா ?

★ சுலபம் தான்...! அழகும்...திறமையும்...ஆர்வமும்......அத்துடன் அதிர்ஷ்டமு மிருந்தால்...!

○ எந்த நாடக சபாவில்......எந்த நாடகத்தின் மூலம் நீங்கள் புகழ் பெற்றீர்கள்?

★ டி. கே. எஸ். சகோதரர்கள் நாடக சபா மூலம்...இரத்த பாசத்தில் (நாடகம்).

○ உங்கள் கணவரின் முயற்சியால் தான் நீங்கள் முன்னணிக்கு வந்தீர்கள் என்பது உண்மையா?

★ முற்றிலும் உண்மை.

○ அவர் உங்களுடன் உயிரோடு வாழ்ந்த காலத்தில் எந்தவித திருத்தங்களை அடிக்கடி போதிப்பார்?

★ ஒழுக்கம் உயிரினும் மேலாய் ஓம்பப்படும் என்பதை...

○ அவரைப்பற்றிய தங்கள் கருத்தென்ன ?

★ என் கண்கண்ட தெய்வம்.

○ உங்கள் தாயாருக்குப் பிடித்த விஷயமெது?

★ பண்புள்ளவர்களாக இருக்க வேண்டுமென்பது.

○ நீங்கள் படங்களில் பாகமேற்று வரும் சமயங்களில் ஏதாவது ஆபத்து நேர்ந்ததுண்டா ?

★ இதுவரை இல்லை !

○ ஒரே சமயத்தில் அதிகப் படங்களில் நடிக்க ஒப்பந்தமாவதால் ஏற்படும் சிரமத்தைப்பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?

★ இதுநாள் வரைக்கும் ஏற்பட்ட அனுபவத்தில் அப்படியொன்றும் சிரமம் ஏற்பட்டதில்லை.

○ சினிமாப் படங்கள் தயாரிக்கப்படும் அவசியத்தைப்பற்றி நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?

★ மனிதன் செய்யும் நன்மை தீமைகளை எடுத்துக்காட்டும் ஓர் முற்போக்கான சாதனம் சினிமா என்று கூற விரும்புகிறேன்.

○ கச்சா பிலிம் வெட்டைப்பற்றிய உங்கள் கருத்தென்ன?

★ அதனுல் எத்தனையோ ஆயிரக்கணக்கான மக்கள் வேலையில்லா திண்டாட்டத்தால் பாதிக்கப் படுவார்கள் என்பதுதான்.

○ உங்களுடைய புகழை எந்த விதத்தில் நிலைநாட்ட பாடுபடுகிறீர்கள்?

★ நியாயமான எல்லா வழிகளிலும்.

○ உங்கள் நெஞ்சை விட்டு நீங்காத நிகழ்ச்சி ஏதாவதொன்று நினைவிலிருக்கிறதா?

★ திரைவானில் நான் பிரகாசிப்பதற்கு அல்லும் பகலும் உழைத்த என் கணவர் உயிர் நீத்த சம்பவத்தை நினைவூட்டும் நாளை என்னுல் மறக்கவே முடிவதில்லை.

○ உங்கள் செல்லப் பெயரென்ன?

★ என்னை இவ்வளவு தூரம் புகழுக்குக் கொண்டு வந்திருக்கும் இப்பெயரே என் செல்லப் பெயர்.

○ நீங்கள் யாருக்கு மிகவும் கடமைப் பட்டிருக்கிறீர்கள்?

★ என் அன்னைக்கு.

○ எங்கள் கலைக்கும், உங்கள் ரசிகர்களுக்கும் நீங்கள் எந்த வகையில் ஆசிகூற விரும்புகிறீர்கள்?

★ கலை உலகிற்கு சிறப்புடன் நற்சேவை செய்ய கிளம்பியிருக்கும் கலைப் பத்திரிகை வளர்க......எங்களுக்கு பேராதரவு தந்து பெருமையடையச் செய்யும் ரசிக பெரு மக்கள் பெரு வாழ்வு வாழ்க.

தேபருக்குப் பின்!

தேபருக்குப் பின் யார் தலைவர் என்ற பிரச்னை எழுந்துள்ளது. 1885-ம் ஆண்டு முதல் 1958 முடிய 64 காங்கிரஸ் தலைவர்களின் பெயர்களை பார்க்கும் போது இரு தமிழர்களின் பெயர்கள் தான் காணப்படுகின்றன. இது பெருந்தன்மை பொருந்திய தமிழர்களின் உள்ளுணர்வைக் கூட வேதனையுறத்தான் செய்கிறது. ஆகையால் தேபருக்குப் பின் தமிழர் ஒருவர் அப் பதவிக்கு வருவது தான் சிறந்தது. அதற்கு தென்னக சிற்பி திரு கே. காமராஜ் தான் மிகவும் தகுதியுள்ளவர், மக்களிடையே ஒரே தாயகம் என்ற எண்ணம் ஏற்பட வேண்டுமானுல், தமிழர்களின் தனிப்பெரும் தலைவர் திரு காமராஜருக்கு காங்கிரஸ் தலைமைப் பதவி கொடுத்து தென்னகத்தையும் உயர்த்தி, இந்தியாவையும் உயர்த்திக் கொள்ள வேண்டும்.

கலை

சிறந்த சினிமா - இலக்கிய மாத இதழ்

சந்தா விகிதம்

	1 வருடம்	6 மாதம்
இந்தியா, சிலோன்	ரூ. 9-00	4-50
பர்மா, மலேயா	ரூ. 12-00	6-00

விவரங்களுக்கு:
கலை காரியாலயம்,
131, தாயார் சாகிப் தெரு,
சென்னை—2.



ராயப்பேட்டை தந்த ராஜகோபால்

சென்னையிலுள்ள ராயப்பேட்டை ஒரு முக்கிய இடமாகத் திகழ்ந்தாலும், இதற்குப் பின் தோன்றிய மாம்பலம், அடையார், கோடம்பாக்கம் போன்ற இடங்கள் முன்னுக்கு வந்தும், தான் மட்டும் நூறு ஆண்டுகளுக்கு முன் இருந்தது போலவே இன்றும் நிலவக் காரணம், தன்னிடம் சேர்ந்தவர்களை முன்னுக்குக் கொண்டு வந்து விட்டு தான் மாத்திரம் அப்படியே இருந்து விட்டது ஏணியைப்போல...

ராயப்பேட்டையில் திருவி. க. முதல் கலைவாணர் வரையில் அங்கு தான் இருந்தனர். எஸ். எம். எஸ். நாயுடு. எஸ். எஸ். வாசன், ஏவி. எம்., நாராயண அய்யங்கார், ஏ. பி. என்., ராஜகோபால் குரு சகஸ்ரநாமம், டி. கே. எஸ். சகோதரர்கள், சிவாஜி, புரட்சி, ரஞ்சன், நம்பியார், பி. புல்லையா, எம். என். ராஜம், டி. வி. ரத்தினம், டி. எஸ். துரைராஜ், பி. டி. சம்பந்தம், நடராஜ் – சகுந்தலா, ஏ எல். எஸ்., ப. நீலகண்டன், சுப்பு, அகிலன்,வீனஸ் கோவிந்தராஜன், எம். எம். புரொடக்ஷன்ஸ் – முத்து ராமலிங்கம், படாதிபதிகளுக்கு பணம் கொடுத்துதவும் சிங்காரம் செட்டியார் ஆகியவர்களும், ஓவியர் பாலு சகோதரர்கள் உள்பட, சினிமாத் தொழில் சம்பந்தப்பட்ட பெரும் பாலானவர்களும்,அண்மையில் சென்னை ராஜ்யத்திலேயே மிக சிறந்த பதவிகளில் ஒன்றான மேயர் பதவிக்கு போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பவருமான திரு கே. கமலக்கண்ணன் அவர்களும் ராயப்பேட்டையில் தான் வசிக்கிறார்கள்.

ஆகவே, எல்லோருக்கும் புகழைக் கொடுக்கும் ராயப்பேட்டை தந்த நகைச்சுவை இளவரசன் ராஜகோபால், இன்னும் சில வருடங்களிலேயே கலைவாணரைப் போல் புகழ் பெறுவார் என்பது உறுதி. புதுமணையுடன் புது வாழ்வும் வாழ ஆசிகள் கூறுகின்றோம்.

கருத்துக் கதம்பம்

மனம் :— மனம் ஓர் மாளிகை. இன்பத்தைத் துன்பமாக்குவதும், துன்பத்தை இன்பமாக்குவதும் மனம் தான். — மில்டன்.

ஒழுக்கம் :— ஒழுக்கம் தவறியவன் பக்தியில் பிரவேசித்து விட்டால், அவனை விட சிறந்த பக்தர் கிடைக்க மாட்டார். — ஜான்சன்.

அன்பு :—என்னும் கோயிலுக்கு நீதிதான் அஸ்திவாரம். ஆனால், நீதியை விட்டுவிட்டு அன்பை மாத்திரம் அடைய முடியாது. —ரஸ்கின்.

மானம் :— ஒவ்வொருவரும், உயிரை மேன்மையாகவே மதிக்கின்றனர். ஆனால், வீரர்கள் உயிரைவிட மானத்தையே சிறந்ததாக எண்ணுகின்றனர். — ஷேக்ஸ்பியர்.

பெருமை :— நமது மனதில் தான் உண்மையான பெருமை உண்டாகிறதே தவிர மற்றவருடைய கருத்தில் இல்லை. — கோல்ரிட்ஜ்.

நாணம் :— தவறு இழைத்தால் நாணுதல் சரியே. ஆனால், அத் தவறை ஒப்புக்கொள்ள எப்போதும் நாணுதல் கூடாது. — ஆவ்பரி.

நாணயம் :—சொத்துக்களை இழந்து விட்டால், திருப்பப் பெறுவதற்கு முடியும். நாணயத்தை இழந்து விட்டால் ஒருபோதும் திரும்பிப் பெற இயலாது. — மில்டன்.

வீரம் :—வீரனுடைய சொற்கள் தெளிவாக இருக்கும்; உண்மையோடு கலந்து நிற்கும். — அரிஸ்டாட்டில்.

கோழைத்தனம் :—இது தான் செய்யத் தகுந்தது என்று தெரிந்திருந்தும், அதைசெய்யாதவனே கோழையிலும் முதல் கோழையாவான். — கன்பூஷியஸ்.

முயற்சி :— முயற்சியே வாழ்க்கையின் தெய்வீக சக்தி. முயற்சி செய்யாது சோம்பல் கொள்வது தற்கொலை செய்து கொள்வதே யாகும். — மாஜினி.

முன்னேற்றம் :— மத எதிர்ப்பாளர்களின் வாழ்க்கை சரிதங்களே முன்னேற்றத்தின் வரலாற்றை தெரிவிப்பது. — இங்கர்சால்.

நாம் உலகில் அறிய வேண்டிய பெரிய விஷயம் எங்கு இருக்கிறோம் என்பது அல்ல; எதை நோக்கிப் போகிறோம் என்பது தான். — ஹோம்ஸ்.

செயல் :— விரும்பியபடி செய்வதற்கு முடியாவிட்டாலும், முடியும் வரை செய்தல் வேண்டும். — டிராக்ஸ்.

மனைவி :— உண்மையுள்ள மனைவி கணவனுடைய வீட்டில் அடிமை; அவனது மனதில் அரசி ஆவாள். — ரஸ்கின்.

செய்திகள்

ஸ்ரீ ஏவி. மெய்யப்பனின் சாதனை :

சினிமாப் படங்களை ஜப்பானும், இந்தியாவும் பண்ட மாற்று முறையில் பரிவர்த்தனை செய்து கொள்ள ஜப்பானிய சலனப் படத் தயாரிப்பாளர் சம்மேளனத் தலைவர் ஸ்ரீ ஷிரோ கிடோவுடன் ஒப்பந்தம் வெற்றிகரமாய் செய்து கொண்டுள்ளதாக ஸ்ரீ ஏவி. மெய்யப்பன் சமீபத்தில் அறிவித்தார். அந்நிய நாணய செலாவணி சிரமங்களின் காரணமாக ஒரு நாட்டுப் படங்களை மற்றொரு நாட்டில் திரையிட முடியாமல் போய்விடுகிற தென்றும், இந்த சங்கட நிலைமையை போக்கவே படங்களைப் பரிவர்த்தனை செய்து கொள்ள ஒப்பந்தம் செய்து கொள்ளப் பட்டதாக ஸ்ரீ ஏவி. எம். கூறியுள்ளார்.

தலைவர் ராஜினமா :

இந்திய சலனப் படத்தயாரிப்பாளர் சங்கத் தலைவர் பதவியிலிருந்து ஜே. பி. ரூங்டா ராஜினமா செய்து விட்டார். கச்சா பிலிம் விநியோகம் சம்பந்தமான பிரச்னையில் காரசாரமான விவாதம் நடந்ததைத் தொடர்ந்து அவர் ராஜினமா செய்ய நேரிட்டது.

'டைனமேஷன்' என்ற புதிய முறை :

'மிக்கி மவுஸ்' போன்ற கார்ட்டூன் சித்திரப் படங்களை நாம் பார்த்து வருகிறோம். இந்த கார்ட்டூன் படங்களிலெல்லாம் முழுக்க முழுக்க பொம்மைப் படங்களாக எழுதி, இவைகளையெல்லாம் ஆடிப் பாட பேச வைக்கும் தந்திரம் கையாளப் படுகிறது. சாதாரணமாகத் தோன்றும் மனித உருவங்களை இதில் சேர்க்கப்படுவதில்லை. ஆகவே, அமெரிக்காவில் இப்போது ஒரு புதிய பிலிம் தயாரிப்பு முறைப்படி பொம்மை கார்ட்டூன் சித்திரங்களையும், மனித உருவங்களையும் சில காட்சிகளில் சேர்த்துக் காட்ட முயற்சிகள் நடைபெற்று வருகின்றனவாம். ஒரு நிஜ மனிதனும், சித்திர மனிதனும் பயங்கரமாய் கத்திச் சண்டை யிட்டு சித்திர மனிதன், நிஜ மனிதனை தோற்கடிப்பதாக தயாரிக்கப் போகிறார்களாம். 'சின் பாத்தின் ஏழாவது யாத்திரை' என்ற

ஜெமினி கணேசன், காலேஜ் மாணவிகளுடன் கல்யாணப் பரிசு செட்டில் உரையாடுகிறார்.

கற்பனைக் கதைப் படத்தில் இப் புதிய முறைகள் கையாளப்படு மாம். இம்மாதிரியான புது பிலிம் தயாரிப்பு முறைக்கு 'டைனமேஷன்' என்று பெய ரிட்டுள்ளார்களாம்.

பஞ்சதந்திரக் கதைகள் :

குழந்தைகளுக்காகப் பஞ்ச தந்திரக் கதைகளை அடிப்படை யாகக் கொண்ட சினிமாப் படம் ஒன்றையும், நாட்டின் முக்கியமான சில ஸ்தலங்களுக் குச் சுற்றுப் பிரயாணம் செய்த குழந்தைகள் கோஷ்டி யொன் றின் அனுபவங்களை அடிப்படை யாகக் கொண்ட சினிமாப் படம் ஒன்றையும் தயாரிப்பதென்று டில்லியில் கூடிய குழந்தைகளுக் கான சினிமாப் பட சங்கத்தின் நிரந்தரக் கமிட்டி முடிவு செய் தது. அக் கூட்டத்திற்கு சங்கத் தலைவர் ஆர். ஆர். திவாகர் தலைமை வகித்து, நடை முதல் வருஷத்தில் மூன்று முழு நீளப் படங்களைத் தயாரிக்க தீர்மா னிக்கப் பட்டது. அதில் ஒன் றுக்கு சகாயத் தொகை தரப் படுமாம். இரண்டு துண்டுப் படங்களும் தயாரிக்கப்படுமாம். குழந்தைகளுக்கான முழு நீளப் படங்கள் சுமார் 6,000 அடி நீள மும், துண்டுப் படங்கள் ஆயி ரம் முதல் இரண்டாயிரம் அடி வரையிலும் இருக்க வேண்டு மென்றும் முடிவு செய்யப்பட் டது. இத்துடன் சில சிறந்த வெளி நாட்டுப் படங்களையும் இந்திய பாஷைகளில் 'டப்பிங்' செய்யவும் தீர்மானிக்கப்பட் டது.

புதிய லாபரட்ரி :

சென்னையிலுள்ள கோல்டன் ஸ்டுடியோ வெகு துரித மாக அபிவிருத்தியடை ந்து வருகிறது. இந்த ஸ்டுடியோவில் ஏர்கண் டிஷன் லாபரட்ரிக்காக வேண்டிய வேலைகள் யாவும் பூர்த்தியாகி விட்டன. இதில் பல நவீன சாதனங்களை யெல்லாம் அமைத் திருப்பதுடன், 5 செட்டு களுடன் கூடி காட்சி யளிக்கிறது ஸ்டுடியோ. ஒரே சமயத்தில் மூன்று படங்களைக் கூட இங்கு தயாரிக்கலாமாம்.



'பிர் - சுபஹ் ஹோகி'யில் மாலா சின்ஹாவின் கவர்ச்சி கர்மானத் தோற்றம்.

தியேட்டர்களில் புகை பிடிக்கக்கூடாது ! :

சினிமாத் தியேட்டர் களிலும், மற்ற அடைப்

புள்ள அரங்குகளிலும் புகைப் பிடிப்பதைத் தடுப்பதில் போலீஸார் இன்னும் கண்டிப்பாக இருக்க வேண்டுமென்று போலீஸ் மந்திரி ஸ்ரீ எம். பக்தவத்சலம் போலீஸ் படையினருக்கு வேண்டுகோள் விடுத்தார். புகை பிடிக்காதவர்களுக்கு அதிக கெடுதி உண்டாக்கக் கூடியதாகையால் அதை தடுக்க வேண்டுமென்று சமீபத்தில் நடைபெற்ற தீயணைப்பு வார விழாவில் கூறினார்.

அவசர பிரேரணையை

அசெம்பிளி நிராகரித்தது :

கச்சா பிலிம் வெட்டை நீக்கி விடுமாறு யூனியன் சர்க்காரிடம் வற்புறுத்திச் சொல்ல ராஜ்ய சர்க்கார் தவறிவிட்டதென்றும், இது குறித்து சபையில் விவாதிக்க வேண்டும் என்றும் கோரி தி. மு. க. மெம்பர் அன்பழகன் சமீபத்தில் அசெம்பிளியில் பிரேரித்த அவசரப் பிரேரணையை சபா நாயகர் டாக்டர் யு. கிருஷ்ணராவ் நிராகரித்து விட்டார். சினிமாத் தொழில் பெரிய தொழிலென்றும், லட்சக்கணக்கான தொழிலாளர் இதனால் பிழைக்கிறார்கள் என்றும் அன்பழகன் எடுத்துக் கூறினார். ஆனால், சர்க்கார்கட்சித் தலைவர் சி. சுப்ரமண்யம் பதிலளிக்கையில் அரசியல் சட்டப்படி ராஜ்ய சர்க்காருக்கு இவ்விஷயத்தில் பொறுப்பு எதுவும் கிடையாதென்றும், கச்சா பிலிம் சம்பந்தமாக மத்திய சர்க்காரிடம் சென்னை சர்க்கார் வேண்டிய முறையீட்டை செய்துள்ளதென்றும், எனவே அன்பழகன் கூற்று தவறு என்றும் கூறினார்.

ஹாலிவுட்டில் எரால் பிளின் போன்றவர்கள் அதிகம் உண்டு. இந்தியாவிற்கோ ஒரே எரால் பிளின் தான் உண்டு. அவர் தான் திராவிடத்தின் திரைக் கதாநாயகர்களில் மூத்தவர். தான் பேசி வருவது போல் செயலிலும் காட்டி வரும் பண்பு மனம் படைத்தவர். கலை வளர்த்த மதுரை, அவரைப் பாராட்டி, கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டின் பிரதிபிம்பமான நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் மூலமாக தங்க வாள் அளித்து பெருமை கொண்டது. வாழ்க நமது எம்ஜியார் !





நேருவைப் போல் நமது காமராஜருக்கு குழந்தைகளின் முன்னேற்றத்தில் அதிக ஆர்வமுண்டு. நேரு பிறந்ததினத்தில் சென்னை கார்ப்பொரேஷன் ஸ்டேடியத்தில் குழந்தைகளின் அணிவகுப்பைப் பார்வையிடுகிறார்.

புதிய படங்கள்

● குப்தாஸ் கலாமந்திர் என்ற புதிய படத் தயாரிப்பு ஸ்தாபனம் 'சகுந்தலா'வை முழு நீள வர்ணப் படமாக தயாரிக்கப் போகிறார்கள். இதில் முக்கிய பாகத்தில் ஜெமினி கணேசனும், வைஜயந்திமாலாவும் நடிக்கப் போகின்றனர்.

● சீர்காழி கோவிந்தராஜன், பி. எஸ். செட்டியார், ஆர். ஆர். சந்திரன் ஆகியமூவரும் சேர்ந்து இசை மணி பிலிம்ஸ் என்ற படத் தயாரிப்பு ஸ்தாபனத்தை ஆரம்பித்துள்ளனர். 'கடவுள் எங்கே?' என்பது இவர்களின் முதல் தயாரிப்பாகும். இதில் எஸ். எஸ். ராஜேந்திரன், ராஜசுலோசனா ஆகியோர் முக்கிய பாகங்களில் நடிப்பார்கள்.

● சிவகாமி பிக்சர்ஸார் 'ஏழுமைத்துனிகள்' என்ற பெயரில் தங்களின் இரண்டாவது தயாரிப்பான இக்கதையைப் படமாக்கப் போகிறார்கள். முக்கிய பாகங்களில் எம். ஆர். ராதா, டி. ஆர். மகாலிங்கம் ஆகியோர் நடிப்பார்கள்.

● ஸ்ரீகணேஷ் மூவிடோன்ஸார் தாங்கள் தயாரிக்கப் போகும் படத்திற்கு 'வைஜயந்திமாலா' என்று பெயரிட்டிருக்கிறார்கள். இப்படம் தமிழ், தெலுங்கு, கன்னடம், ஹிந்தி ஆகிய நான்கு பாஷைகளிலும் தயாராகுமாம். எம். ஆர். ராதா, மனோகர், மாலினி ஆகியோரெல்லாம் நடிப்பார்களாம்.

● கலைமகள் பிக்சர்ஸார் 'கனவு பலித்ததம்மா' என்ற பெயரில் ஒரு படத்தை துரிதமாக தயாரிக்கப் போகிறார்கள். இதற்கான ஆரம்ப விழா பாரமவுண்ட் ஸ்டுடியோவில் சமீபத்தில் நடைபெற்றது.

● எஸ். எஸ். ஆர். பிக்சர்ஸார் சி. என். அண்ணாதுரை எம். எல். ஏ., வசனம் எழுதும் 'கலிங்க ராணி'யை முழு நீள வர்ணப் படமாக தயாரிக்கப் போகிறார்களாம். இப்படம் கிருஷ்ணன் – பஞ்சு டைரக்ஷனில் உருவாகும்.

● எம். ஏ. வி. பிக்சர்ஸார் தங்களின் அடுத்த தயாரிப்பிற்கு 'தலைவெட்டி முனியப்பன்' என்று பெயர் வைத்திருக்கிறார்களாம். நடிகர்கள் தேர்தலும் நடைபெறுகிறதாம்.

● ஸ்ரீ ஏ. பி. நாகராஜன் 'நல்ல தாரம் மனைக்கு அலங்காரம்' என்ற பெயரில் ஒரு படத்தை தயாரிக்க திட்டமிட்டுள்ளாராம். இதில் எம். ஆர். ராதா, சௌகார் ஜானகி, வி.கே. ராமசாமி ஆகியோரெல்லாம் நடிப்பார்களாம்.

● அன்னபூர்ணா பிக்சர்ஸார் தங்கள் படத்திற்கு 'மஞ்சள் மகிமை' என்று பெயரிட்டு வளர்த்து வருகின்றனர். இதில் நாகேஸ்வர ராவ், சாவித்திரி, ராஜசுலோசனா, தங்கவேலு ஆகியோரெல்லாம் நடிக்கின்றனர்.

● பதிபக்தி தயாரிப்பாளர்களில் ஒருவரான ஜி.எஸ்.வேலுமணி சரவணா பிக்சர்ஸ் என்ற பெயரில் புதிய படத் தயாரிப்பு ஸ்தாபனமொன்றை ஆரம்பித்துள்ளார். தயாரிக்கப்போகும் படத்திற்கு இன்னும் பெயர் வைக்கவில்லை. இதில் சிவாஜி கணேசன், எம். ஆர். ராதா, சாவித்திரி ஆகியோரெல்லாம் முக்கிய பாகமேற்பார்களாம்.

● காமிராமேன் மஸ்தான் 'பெண் தெய்வம்' என்ற பெயரில் படமொன்றை தானே தயாரித்து டைரக்டும் செய்யப் போகிறார். இதில் எம். ஆர். ராதா, மாதுரிதேவி ஆகியோர் முக்கிய பாகமேற்பர்.

● மோகன் பிலிம்ஸ் என்ற புதிய படத் தயாரிப்பு ஸ்தாபனத்தார் 'அன்பளிப்பு' என்ற படத்தை அன்புடன் உருவாக்கப் போகின்றனர். இதில் ஜெமினி கணேசன், பி.சரோஜா தேவி, எம். என். ராஜம் ஆகியோர் நடிப்பார்களாம்.

திடீர் மரணம் :

மிகப் பெரிய ஹாலிவுட் படத் தயாரிப்பாளர்களில் ஒருவரான ஸாம்ஷிம் பாலிஸ்ட் என்பவர் 'பென் ஹர்' என்ற படப் பிடிப்பு ரோமில் நடைபெறும் சமயம் திடீரென மாரடைப்பினால் மரண மடைந்தார். இவர் எம். ஜி. எம்மில் ஆபீஸ் பையனாகப் புகுந்து, படிப்படியாக முன்னேற்ற மடைந்த நல்ல முயற்சியாளர்.

இதுமட்டுமல்ல ஹாலிவுட் சிறந்த நட்சத்திரமான, உலக மக்களின் பாராட்டுகளுக்கு பாத்திரமுமான திறமை மிக்க நடிகர் டைரோன் பவர் தமது 45-வது வயதில் திடீரென மரண மடைந்தார்.

தனது வரப்போகும் சிறந்த படமான 'நவ்ரங்'கிற்கு புதிய மெட்டில் இசை அமைக்க சங்கீத டைரக்டர் வசந்த் தேசாயுடன் டைரக்டர் சாந்தாராம் கலந்தாலோசிக்கிறார்.

இப்படித்தான் இருந்தனரோ! இப்படித்தான் இயற்றினரோ!

அடுத்து வரும் வண்ணப் படங்களுக்கு விளக்கம் :

1. வான் அரம் பொருத கோள்நேர் எல்வளை
   அகன்தொடி செறித்த முன்கை, ஒள்நுதல்,
   குவளை உண்கண் மகிழ்மட நோக்கே

   (சரோஜாதேவி) — நற்றிணை.

2. கொம்பென்றால் அவள் மெய்யைத் தார் வருந்தும்
   கொடி என்றால் அவளிடையை மின் வருந்தும்
   அம்பென்றால் அவள் விழியை மீன் வருந்தும்
   அலைஎன்றால் அவள் குழலை முகில் வருந்தும்
   செம்பென்றால் பொன்ஈயும் வாழ்வு வாய்ந்தாள்.

   (பத்மினி) — பாரதிதாசன்.

3. கிளிக்கழுத்தின் பொன்வரிபோல் அரும்புமீசை
   கீழ்க்கடலின் மாலைவெயில் கலந்த நீல
   ஒளித்திரைபோல் தலைமயிர் சிங்கத்தின் தோற்றம்
   உயிர்ப்பரிதி வான்போன்ற மேனிவாய்ந்தான்.

   (ஜெமினி கணேஷ்) — பாரதிதாசன்.

4. அன்னத்தின் தூவி அனிச்ச மலரெடுத்துச்
   சின்ன உடலாகச் சித்திரித்த மெல்லியலே
   மின்னல் ஒளியே, விலை மதியா ரத்தினமே
   கன்னல் பிழிந்து கலந்த கனிச் சாறே

   (ஜமுனா) — பாரதிதாசன்.

5. சிறுகுடிக் குறவன் பெருந்தோட் குறுமகள்
   நீர் ஓரன்ன சாயல்
   தீ ஓரன்ன என் உரன் அவித்தன்றே

   (ராஜசுலோசனா) — கபிலர்.

" பரியுடை நல்மான் பொங்கு உளை அன்ன
அடைகரை வேழம் வெண்பூப் பகரும்,
தண்துறை ஊரன் பெண்டிர்,
துஞ்சு ஊர் யாமத்தும், துயில் அறியலரே "

சாவித்திரி

—ஐங்குறுநூறு.

" தாமரை அன்று முகமே ; ஈதிங்கிவையும்
காமருவண்டல்ல ; கருநெடுங்கண்—தேமருவு
வல்லியின் அல்லள் ; இவள் என் மனங்கவரும்
அல்லி மலர்க் கோதையாள் "

குசலகுமாரி

—தண்டியலங்காரம்.

"மின்னலிடை, கன்னல்மொழி, இன்னும் சொன்னால்
விரியுலகில் ஒருத்திநீ, அழகின்உச்சி
விழிபார்க்க எண்ணிடுமே உன்னை! யாரும்
விலை பார்க்க இயலாத முத்தே—"

பி. எஸ். சரோஜா —பாரதிதாசன்.

மாடர்ன் தியேட்டர்ஸ் "கண்ணகி பேத்தி வண்ணக்கிளி"

“ தேனைப்போல் மொழியுடையாள் அன்றலர்ந்த
செந்தாமரை மலர்போல் முகத்தாள் ”

தேவிகா —புரட்சிக்கவிஞர்.



“ ....கெண்டை
மீனைப்போல் விழியுடையாள் விட்டதிர்ந்த
மின்னைப் போல் நுண்ணிடையாள் ”

பண்டரிபாய் —புரட்சிக்கவிஞர்.



மைனவதி

மாடர்ன் தியேட்டர்ஸ் 'கண்ணகிபேத்தி வண்ணக்கிளி'

" முட்டுவேன் கொல் ? தாக்குவேன் கொல் ?
ஓரேன், யானும் ஓர் பெற்றி மேலிட்டு
'ஆஅ ! ஒல்' எனக் கூவுவேன் கொல் ?
அலமரல் அசைவளி அலைப்ப, என்
உயவு நோய் அறியாது துஞ்சும் ஊர்க்கே "

—குறுந்தொகை.

" மருந்து எனின் மருந்தே ; வைப்பு எனின் வைப்பே
பெருந்தோள் நுணுகிய நுசுப்பின்
கல்கெழுகானவர் நல்குறு மகளே "

எம். என். ராஜம்

—குறுந்தொகை.

ஹாலிவுட்

பிரபல ஹாலிவுட் நடிகர் காலம் சென்ற டைரன் பவர்

(சென்ற மாதத் தொடர்ச்சி)

மெக்ஸிகோ நகரத்திற்கு சுமார் 400 மைல் தூரத்திலுள்ள மொரீலியா என்ற இடத்தில் 'தி சன் ஆல்சோ ரைஸ்' என்ற படத்தைச் சில இயற்கைக் காட்சிகளுக்குத் தகுந்த முறையில் தத்ரூபமாய்த் தயாரிக்க சகல ஏற்பாடுகளையும் செய்திருந்தனர் பாக்ஸ் கம்பெனியார். ஸ்பெயின் தலைநகரான மாட்ரிட் நகரத்தில் வசித்து வந்த அவாவுக்குப் படப் பிடிப்பைப் பற்றியும், அவர் கலந்து கொள்ள வேண்டிய அவசியத்தைப் பற்றியும் குறிப்பிட்டுச் செய்தி அனுப்பி யிருந்தனர். ஆனால், அவா வரவில்லை. இருப்பினும் பாக்ஸ் கம்பெனியார் மொரீலியாவில் வீணாக நாட்களை கடத்திக் கொண்டிருக்க விரும்பாமல், அவா தேவைப் படாத காட்சிகள் உள்பட, அவர் லாங் ஷாட்டில் தோன்றும் காட்சிகள் வரையில் தயாரிக்க ஆரம்பித்து விட்டனர். அத்துடன் டைரோன் பவர், எரால்பிலின், மெல்பெரர் ஆகியோர்கள் தோன்றும் காட்சிகளையும் படமாக்கி முடித்து விட்டனர். இனி அவா இல்லாமல் ஒரு காட்சியையும் படமாக்க முடியாது என்ற நிலை நேர்ந்தது. ஆகவே, அவாவை ஆவலுடன் எதிர்பார்த்தனர்... பொறுமையையும் இழந்தனர்.

செலவோ ஏகமாக வளர்ந்து கொண்டே இருந்தது. இந்நிலையில் ஒரு நாள் அவர் புறப்பட்டு விட்டார் என்ற செய்தி கிடைத்தது. உடனே பல வித துரித ஏற்பாடுகளை யெல்லாம் செய்தனர் கம்பெனியார். அவா மெக்ஸிகோ விமான நிலையத்தை வந்தடைந்த உடனேயே படப்பிடிப்பு நடைபெறப் போகும் மொரீலியா என்ற இடத்திற்கு எவ்வித காலதாமதமுமின்றி நேராக அவரைக் கொண்டு வந்து சேர்க்க பிரத்தியேகமாக விமானமொன்றையும் ஏற்பாடு செய்திருந்தார்கள். ஆனால் அவாவின் விமானம் சுமார் 12 மணி நேரம் தாமதமாக மெக்ஸி



ஹாலிவுட் சினிமா அழகி மார்லின் மன்ரோ என்றால் அழுத பிள்ளை வாய் மூடாது. ஆனால் அமெரிக்க வயோதிகர்கள் கூட வாயைப் பிளப்பார்கள் உலகிலேயே இப்போது சிறந்த சினிமா அழகி என அழைக்கப்படுகிறாள் இக் கட்டழகி.

கோவை வந்தடைந்தது. அவா விமானத்திலிருந்து இறங்கிய உடனே தயாராக இருந்த அடுத்த விமானத்தில் புறப்படு வதற்குப் பதிலாக "நான் முத லில் இங்குள்ள ஒரு ஒட்டலுக் குச் செல்ல வேண்டும்!" என் ருர். இவரை அழைக்க வந் திருந்தவர்களுக்கு தூக்கி வாரிப் போட்டது. பின்னர் ஏதும் பய னின்றி அவாவின் கட்டளையை பூர்த்தி செய்தனர். ஒரு நாள் முழுவதும் மெக்ஸிகோ ஹோட் டலில் தங்கியதோடில்லாமல், மறு நாள் சுமார் ஆறு மணி நேரம் வரையில் நகர வெளிப் புறங்களை நிம்மதியாக சுற்றிப் பார்க்கக் கிளம்பி விட்டார். அதன் பிறகே அவர் மொரீலியா விற்கு புறப்பட சம்மதித்தா ராம்.

படப்பிடிப்பிற்காக முகாமிட் டிருந்த இடத்தை அடைந்த வுடன், அவா தங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப் பட்டன. ஆனல், அவா அந்த இடம் தனக்கு உள்ளதாக இல்லை யென்று மறுத்து விட்டார். ஆகவே, அந்நகரத்தைச் சேர்ந்த தனவந்தர் ஒருவரின் உல்லாச மாளிகையில் தங்க வசதிகள் செய்யப்பட்டதாம். இதற்காக அந்தச் செல்வந்தரையும், அவ ரின் மனைவி மக்களையும் பாக்ஸ் கம்பெனியார் தங்கள் செலவி லேயே ஒரு நல்ல ஹோட்டலில் தங்கச் செய்தனராம். சுமார் நான்கு வாரங்கள் வரைக்கும் தன் கூட வந்திருந்த ஆறு நபர் களுடன் அந்த தனவந்தர் மாளிகையில் தங்கியிருந்தார் அவா. அச் சமயத்தில் மாளிகை யில் ஏற்கெனவே பணி புரிந்து வந்த வேலையாட்களை தனக்குப் பிடிக்க வில்லை யென்று கூறி வேறு நபர்களை நியமிக்கும்படி செய்தாராம். 'பஞ்ச்'

(தொடரும்)



பிரஞ்சு நாட்டு திரை அழகி



ரஷ்ய சினிமா

B.R.K. மூர்த்தி B.COM.

ஒருநாள் ஈஸ்டோனியக் குடியரசைச் சேர்ந்த டால்பின் என்ற நகரத்தில் 'ரஷ்யன் டிராமா தியேட்டர்' கம்பெனியார் பிரபல எழுத்தாளர் ஏ. அஸ்ட் ரோவ்ஸ்கியின் 'கில்டி வித்தவுட் கில்ட்' என்ற நாடகத்தை நடத்திக் கொண்டிருந்தார்கள். இந்த நாடகத்தின் முக்கிய பாத்திரமான நெஜ்னமோவ் என்ற பாகத்தை ஏற்று மிகவும் போற்றத்தக்க முறையில் நடித்தார் ஒரு இளைஞர். இவரின் நடிப்புத் திறமையையும், உணர்ச்சிகர போக்கையும் கண்டு வியந்த படாதிபதியொருவர், இவரை நெருங்கி, "நீங்கள் சினிமாப் படத்தில் நடிக்க விரும்புகிறீர்களா?" என்று கேட்டார். இதைக் கேட்ட அந்த இளைஞர் ஆச்சரியமடைந்து தனது கனவு நினைவாகப் போவதை எண்ணி மனமகிழத் தொடங்கினார். அடுத்தே எவ்வித காலதாமதமுமின்றி தன் மனப்பூர்வமான சம்மதத்தையும் தெரிவித்தார். உடனே 'தி காட்பிளை' என்ற படத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டார். சிறந்த நடிப்புத் திறமையையும் ஆர்வத்தையும் பெற்றுள்ள இந்த இளைஞர் யார் தெரியுமா...? இவர்தான் 'பர்தேசி' மூலம் நம்மிடையே அறிமுகமான ஒலேக் என்பவராகும். இவரின் முழுப் பெயர் ஒலேக் ஸ்டிரிஜெனோவ்.

பின்னர் நடிப்புத் தொழிலை மேற்கொள்ள விரும்பிய இவர், மாஸ்கோவிலுள்ள 'ஜூகின் தியேட்டர் ஸ்கூல்' என்ற நடிப்புப் பள்ளியில் சேர்ந்து சில வருடங்கள் வரை மேலும் பயிற்சி பெற்று, *1953*-ம் வருடம் தேர்வும் பெற்றார். இந்தப் பள்ளியில் நாடகக்கலையைப் பயின்று வந்த சமயம், இவருக்குப் பல நாடகங்களில் நடிக்கும் வாய்ப்பும் ஏற்பட்டது. பிரபல ஆங்கில நாடக ஆசிரியர் மகா கவி ஷேக்ஸ்பியர்

அவர்களின் ஒப்பற்ற காதல் காவியமான 'ரோமியோ அண்ட் ஜூலியத்' நாடகத்தில் இவர் கதாநாயகன் ரோமியோவாக நடித்தார். நடிப்புப் பயிற்சி முடிவுற்றதும் மேலே குறிப்பிட்ட நாடகக் கம்பெனியில் சேர்ந்து பல நாடகங்களிலும் மீண்டும் பாகமேற்று நடித்தார். பிறகு சினிமாவிலும் ஒப்பந்தமானூர். அனுபவம் நிறைந்த நாடக மேதைகள்கூறுவதுபோல, சினிமாவில் நடிப்பதற்கு போதிய அஸ்திவாரம் சில வருடங்களிலேயே நாடகங்கள் மூலம் இவருக்குக் கிடைத்துவிட்டது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

தன் முதல் முயற்சியிலேயே இவர் மகோன்னத வெற்றியைப் பெற்ருர். 'தி காட்பிளை' படத்தில் இவருக்கு கதாநாயகன் பாகம் அளிக்கப்பட்டது. தனக்களிக்கப்பட்ட பாத்திரத்தை தத்ரூபமாக நடிக்க வேண்டி இவர் பலவித சிரமங்களையும், கஷ்டங்களையும் மேற்கொண்டார். அப்படத்திற்காக அதே பெயரில் இ. ஒய்னிச் எழுதிய நாவலை முழுதும் ஊக்கமுடன் படித்து அறிந்து கொண்டு அத்துடன் கதையின் காலத்தில் கதைப்படி அக்கால இத்தாலியின் கலாசாரம், மக்களின் பழக்க வழக்கங்கள், மத போதனைகள் போன்ற அக்கால பண்பாடுகளைச் சித்தரிக்கும் படங்கள் பலவற்றையும் பார்த்து, தான் நடிக்கப்போகும் பாத்திரத்தின் பாகம் எப்படி அமைய வேண்டுமென பல நாட்கள் வரையில் ஆராய்ச்சி செய்து, பின்னர் முடிவுக்கு வந்து, ஏற்கப்போகும் பாகமாகவே பலவிதப் பயிற்சிகளுடன் தன்னை மாற்றிக் கொண்டாராம். இதற்காக அவர் ஆர்வமுடன் மேற்கொண்ட சிரமங்கள் பலவாம்.

அடுத்து இவர் வி. காப்ளினே விஸ்கியின் தயாரிப்பான 'தி மெக்ஸிகன்' என்ற படத்தில் ரிவேரா என்ற பாகத்தை ஏற்று நடித்தார். ஜாக் லண்டன் என்பவரின் கதையை ஆதாரமாகக் கொண்ட இந்தப் படத்தில் ஒலேக், முதல் படத்தில் பாகமேற்றதுபோல அல்லாமல், முற்றிலும் மாருன பாகத்தை ஏற்று நடித்தார்.

இதற்குப் பிறகு இவர் 'தி பார்ட்டி பஸ்ட்' என்ற படத்தில் நடித்தார். இதில் ராணுவ அதிகாரியாக ஒரு ஆங்கிலேயரின் பாகத்தை ஏற்ருர். சிறந்த முறையிலும் நடித்தார். காதல் காட்சிகளில் இயற்கைபோன்றே மிகவும் கச்சிதமாக நடிப்பதில் கைதேர்ந்தவர் எனக்கூறுகிருர்கள். கானேஸில் நடைபெற்ற சினிமாப் படங்களின் வருடாந்திரப் பரிசளிப்பு விழாவில் 'தி பார்ட்டி பஸ்ட்' என்ற படம் இரண்டாவது பரிசைப் பெற்றது. 1956-ம் வருடத்திய குணசித்திர நடிகரென மாஸ் பிலிம் ஸ்டுடியோவால் ஒலேக் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சுமார் மூன்று வருடங்களுக்குள்ளாகவே தன் திறமையை வெளிப்படுத்தி. சிறந்த நடிகரென புகழ்பெற்றுவிட்ட ஒலேக், நல்ல வசீகர தோற்றத்தையும் பெற்று, ரஷ்ய பெருமக்களின் நல்லாசிகளுக்கும், ஆதரவுகளுக்கும் பாத்திரமாகி ஒப்பற்ற புகழோடு விளங்கி வருவது குறிப்பிடத் தக்கதாகும். இவர் தற்சமயம் ரஷ்ய நாட்டில் இலக்கிய சக்ரவர்த்தி புஷ்கின் அவர்களின் கதையான 'தி காப்டன்ஸ் டாட்டர்' என்ற படத்தில் நடித்து வருகிருர்.

முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் 60ம் ஆண்டு விழா

11-11-58

1

2

3

தமிழன்னையின் தவப்புதல்வரான திரு கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களுக்கு "அறுபதாம் ஆண்டு மணி விழா நடத்தி, தமிழகத்தின் தலைநகரான திருச்சி நகரம் தன்னை உயர்த்திக் கொண்டது.

தமிழகத்திலே பல்வேறு தலைவர்கள் உண்டு. ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையினரால் ஏற்றிப் போற்றப்படுவர். ஆனால் நம்முடைய தமிழ்ச் செல்வமவர்களோ, திருக்குறள் எவ்வாறு எல்லோராலும் பாராட்டப்படுகின்றதோ அதே போன்று, கட்சி, மொழி, மதம் இவைகளை எல்லாம் கடந்து அனைவராலும் பாராட்டப்படுகின்ற தமிழர் தலைவர்.

தமிழர்களின் நலத்தையும்; தமிழின் வளர்ச்சியையுமே தம் மூச்சாகக் கொண்டவர். எனவே தான் தமிழுக்கு இழுக்கு என்றதும் அவருடைய நாடிகள் முறுக்கேறி நரம்புகள் துடிக்கின்றன. மறுகணம் தமிழைப் பழித்தவனை என் தாய் தடுத்தாலும் விடேன் என்று களம் காண வந்து விடுகிறார்.

இன்னா செய்தாருக்கும் நன்மையே செய்யும் பண்புள்ளம்.



எதனையும் நுணுகி ஆராய்ந்து சுவை படஎழுதும் எழுத்தாற்றல்; "ஆன என் செந்தமிழ் நாட்டிற்கு ஊண் உடல் கேட்பினும் உவப்புடன் நான் சேர்ப்பேன்" என்று வீர முழக்கமிடும் தமிழ்ப்பற்று; 'ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்' என்று வள்ளுவர் வகுத்த இலக்கணத்திற்கு இலக்கியம் போன்ற ஒழுக்கமுடைமை. இவையே நம்முடைய திருச்சி கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள்.

வாழ்க நூறாண்டுகள் நமது தமிழ்ச் செல்வம் !!

---

(1) திருச்சி சென் ஜோசப் கல்லூரி ரெவரெண்டு அதிசயம் வாழ்த்துகிறார். (2) திருச்சி ஜமால் முகமது கல்லூரி முதல்வர் ஜனாப் சையது அகமது வாழ்த்துகிறார். (3) திருச்சி தேசியக் கல்லூரி முதல்வர் வரதாச்சாரியார் வாழ்த்துகிறார். (4) யானைகளுடன் வரவேற்பு. (5) ஓ. பி. ராமசாமி ரெட்டியார் தலைமை உரை ஆற்றுகிறார். (6) டாக்டர் ஈ. மதுரம் அறுபதாம் ஆண்டு வாழ்த்து மடலை வழங்குகிறார்.



தமிழ் நாட்டு சினிமாவிற்கு இரு கண்கள் போன்றவர்கள் சிவாஜி யும் பத்மினியும்; சிவாஜிக்குப் பிடித்த நடிகையும், பத்மினிக்குப் பிடித்த நடிகரும் ஓர் சோகக் கட்டத்தில் தங்களது உயர்ந்த நடிப்பைச் சித்தரிக்கும் காட்சி. ('விஜயா பிலிம்ஸ் புனர்ஜென்மம்')

தென்னாடு தந்த நாட்டிய ராணி, அகில இந்திய அழகி, வட நாட்டில் தன் புகழை நாட்டி வரும் வைஜயந்திமாலா.



மாடர்ன் தியேட்டர்ஸ் உன்னத தயாரிப்பான ‘ தலைகொடுத்தான் தம்பி ’யில் காதல் காட்சியில் காண்பவர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் கவர்ச்சி மிக்க தோற்றத்துடனிருப்பவர் மாலினி.

வடக்கின் வளர்ச்சி

டைரக்டர் சாந்தாராம் கடந்த இரு வாரங்களாக இடது கண் வலியினால் மிகவும் கஷ்டப் படுகிறார். தலை சிறந்த டாக்டர்கள் சிகிச்சை செய்கிறார்கள். அவசியம் ஏற்பட்டால் ஆபரேஷனுக்காக (Holland) ஹாலந்து செல்ல வேண்டியிருக்கும் என்று தெரிகிறது.



வட நாட்டின் புகழ் மோஹன் சைகால் 'கலை'யை வாழ்த்துகிறார்.

இதனால் ராஜ்கமல் ஸ்டுடியோவில் வேலைகள் நின்று விடவில்லை. 'நவ் ரங்' படப்பிடிப்பைத் தவிர மற்றவை வெகு ஜரூராக நடைபெறுகிறது. அவர் உடம்பு சௌகர்யப்பட்டவுடன் படப்பிடிப்பு ஆரம்பிக்கப்படும்.



“ஷராபி” படத்தில் மதுபாலா பண மாலை அணிந்துள்ளார்.

துல்ஹன் (Dulhan)

இப்படத்தின் படப்பிடிப்பிற்காக ஒரு சுடுகாட்டு காட்சி ரஞ்ஜித் ஸ்டுடியோவில் அமைக்கப்பட்டிருந்தது. கட்டையின் மேலே குமாரி (பேபி) நந்தா என்றும் மீளா நித்திரையில் ஆழ்ந்திருந்தார். நிருபா ராய், ராஜ் குமார், ஜாகீர்தார் முதலியவர்களின் கண்களில் கண்ணீர் வழிந்தது. உணர்ச்சிகரமான பாட்டு ஒன்று மேலும்

அந்த சூழ்நிலையில் எல்லோருடைய கண்களிலும் நீர்வழியச் செய்து விட்டது. டைரக்டர் வியாஸ் குலுங்கக் குலுங்க அழுதார். புஷ்பா பிக்சர்ஸ் தயாரிக்கும் இப்படம் வெகு விரைவில் திரைக்கு வருகிறது.

டிரங்க் கால்' (Trunk call)

அது ஒரு பெரிய ஹோட்டல். அங்கு இளவயது மங்கை நான்கு ஆண்களுடன் 'ராக் அண் ரோல்' நடனமாடி எல்லோரையும் மகிழ்வித்துக் கொண்டிருந்தாள். பிரான் தனது நண்பருடன் அந்த நாட்டியத்தை ரசித்துக் கொண்டிருந்தார். மது அருந்தினர். பிறகு

மோகசி புகழ் ரஞ்ஜனி சுக்லாவின் தோற்றம்

வெளியே சென்று விட்டார். அந்தச் சமயம் பார்த்து போலீஸ் இன்ஸ்பெக்டர் அபி பட்டாச்சாரியா மிக ஜாக்கிரதையாக, பிரான் அருந்திய மது கிண்ணத்திலுள்ள கைரேகையை படம் பிடித்தார். எல்லாம் முன் ஏற்பாடாக திட்டிய திட்டம். மேலே விவரித்த காட்சி பேமஸ், மஹாலக்ஷ்மி ஸ்டுடியோவில் படமெடுக்கப் பட்டது இத் துப்பறியும் கதை.

தயாரிப்பாளர்கள் ; மேபேர் பிலிம்ஸ்.

நடிகர்கள் : சியாமா, அபிபட்டாச்சாரியா, ஷம்மி, ஹெலன், பிரான் முதலியோர். சங்கீதம் : ரவி. டைரக்டர் : பால்ராஜ் மேதா.

"ராணி பேட்டி" (Rani Beti)

பெண்களுக்கு முதன் முதலாக "காதல்" நோய் பிடிக்கப்பட்டால் என்ன செய்வார்கள்? ஒருவரும் இல்லாத சமயம் பார்த்து தங்களது உணர்சிகளை, அன்பை, ஆடிப் பாடி, உணர்த்துவார்கள்.



இப்படித்தான் அன்று நிம்மி ராஜேந்திர குமாரை சந்தித்த பிறகு, மாடர்ன் ஸ்டூடியோவில் ஆடி பாடி மகிழ்ந்தாள். இக்காட்சி சித்ராநிகேதன் தயாரிக்கும் ராணி பேட்டியில் வருகிறது.

ராஜேந்திரகுமார், நிம்மி, ஷம்மி, ஜானிவாக்கர் நடிக்கும் இப் படத்தை மேகிரேஷ் டைரக்ட் செய்கிறார்.

புது முகம் சாரதா பாடினார்.

அன்று செம்பூர் அருகே ராஜ் கலா தயாரிக்கும் "ஏக் பாத் ஏக்" (Ek Baat Ek) என்ற படத்திற்காக வெளி புறக் காட்சியில் சாரதா இனிமையாக பாடினார்.

மேபேர் பிலிம்ஸ் 'டிரங்கால்' ஹிந்திப் படத்தில் ஹெலனின் எழில்தோற்றம்.

பிரதிப் குமார், 'கலை'யை புகழ்ந்தார்.

அன்று 'ராமன் ஸ்டுடியோ வில் 'நயா ஸன்ஸார்' படபிடிப்பில் கலந்து கொண்ட பிரதீப் குமாரை சந்தித்தேன். 'கலை' யை வாங்கிப் படித்தார். பிரமித்து விட்டார், "இவ்வளவு தலை சிறந்த புஸ்தகத்தை இது வரையில் நான் பார்த்ததே இல்லை, இதில் எழுதியிருக்கும் (தமிழில்) கலை நுணுக்கங்களையும், விஷயங்களை படிக்க இயலவில்லையே என்று வருத்தமாய் இருக்கிறது. "கலை"க்கு எனது மனமார்ந்த நல் வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன் என்று கூறினார்.

பாஷை அறியா விட்டாலும், பம்பாயில் ஒவ்வொரு பிரபல நடிக நடிகைகள் கையில் எப்பொழுது பார்த்தாலும், 'கலை' அலங்கரிக்கிறது. எங்கு சென்றாலும் அமோக வரவேற்பு 'கலை'க்குக் கிடைக்கிறது.

—எஸ். நரசிம்மன்.

(நமது விசேஷ பம்பாய் நிருபர்)

புகையிலையிலேயே
மிகச் சிறந்தது
செடி மார்க்
சிவபுரி புகையிலை
சிவபுரி புகையிலை
பிரைவேட் லிட்,
சிதம்பரம்.
BEE BEES

திரைப் படத்தின் தலைப்புகள்

(இப்படி இருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை)

அகதிக்கு தெய்வமே துணை.
அடக்கம் ஆயிரம் பொன் தரும்.
ஆனைமேலேருவேன், வீரமணி கட்டுவேன்.
ஆரியக் கூத்தாடினாலும், காரியத்தின் மேல் கண்.
ஆணில்லாத மங்கைக்கு அழகு பாழ்.
இடுவது பிச்சை பெறுவது மோக்ஷம்.
இட்டாருக்கு இட்ட பலன்.
இளமையிற் கல்வி சிலையில் எழுத்து.
இளைத்தவன் பெண்டாட்டி எல்லோருக்கும் மைத்துனி.
இருந்தகால் மூதேவி நடந்தகால் சீதேவி.
இருவரும் ஒத்தால் ஒருவருக்கும் பயமில்லை.
இல்லாது பிறவாது அள்ளாது குறையாது.
ஈனரை அடுத்தால் மானம் அழியும்.
உத்தியோகம் புருஷ லக்ஷணம்.
உண்ட களைப்பு தொண்டருக்கு உண்டு.
கட்டோடே போனால் கனத்தோடே வரலாம்.
முத்திலும் சொத்தையுண்டு, பவழத்திலும் பழுதுண்டு.
நற்குணமே நல்ல ஆஸ்தி.
அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது.
காய்ந்த மரம் வளைந்து நிற்கும்—நற்குண முடையவர் தணிந்து நிற்பர்.
ஆதாயமில்லாத செட்டி ஆற்றைக் கட்டி இறைப்பானா.
பாத்திரம் அறிந்து பிச்சை இடு.
பள்ளிக் கணக்கு புள்ளிக்குதவாது.
பெண்டாட்டி கால் கட்டு, பிள்ளை வாய்க்கட்டு.
பெண்ணுக்கு மாமியார் பிள்ளைக்கு வாத்தியார்.
மண்ணுங்கட்டி மாப்பிள்ளைக்கு எருமுட்டை பணியாரம்.
மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
மூத்தது மோழை இளையது காளை.
மூத்தோர் சொல்வார்த்தை அமிர்தம்.
மேழிச் செல்வம் கோழை படாது.
விளையும் பயிர் முளையிலே தெரியும்.
போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து.
உற்ற சிநேகிதன் உயிருக்கு அமிர்தம்.
பொன்னாபரணத்தைப் பார்க்கிலும் புகழாபரணமே மேல்.
மனசாட்சியை விட மறு சாட்சி வேண்டாம்.
நத்தையின் வயிற்றில் முத்து பிறக்கும்.
அங்கத்தைக் கட்டி தங்கத்தைச் சேர்.
நூற்றுக்கொரு பேச்சு, ஆயிரத்திற்கொரு தலை யசைப்பு.
தாழ்ந்து நின்றால் வாழ்ந்து நிற்கலாம்.
பொன் குடத்திற்கு பொட்டு எதற்கு ?
கள்ளைக் கொடுத்தால் உள்ளத்தைச் சொல்லுவான்.
பெண்ணிற்கு பொன்னிட்டுப் பார், சுவர்க்கு மண்ணிட்டுப் பார்.

கேள்வி பதில்

★ ஏ. எல். பாபு, சிவானந்தன், அரு. மணிவண்ணன்
—திருவையாறு.

பத்மினி, சாவித்திரி, பானுமதி இவர்களின் நடிப்பை வரிசைப் படுத்திக் கூறுக?

மூவரும் மூன்றுவித குணகோண பாகத்தை ஏற்று நடிப்பதில் சிறந்தவர்கள் தான் என்றாலும், பானுமதியின் நடிப்பின் சிறப்பைப் பற்றி பலரும் ஒத்துக்கொண்ட விஷயமாகும்.

★ ஜி. சுப்ரமணியம்
—புதுக்கோட்டை.

காரியவாதிகள் யாவர்?

அரியணையில் அமர்ந்த நரியை சிங்கமென்று வர்ணிப்பவர்கள்.

★ எம். ஏ. ராஜ்குமார்
— கொழும்பு.

இலங்கையிலுள்ள தமிழ் நடிகர்களைப் பற்றி தங்கள் அபிப்பிராயம் என்ன?

அவர்கள் முன்னுக்கு வர வேண்டுமென்பது என் விருப்பமானாலும், அவர்களைப் பற்றிய அறிமுகம் மறைமுகமாகவே இருந்து வருகிறது.

★ என். பரமேஸ்வரன்—பரளி.

சிவாஜி கணேசனுக்கு எந்தப் பெண் நட்சத்திரத்துடன் நடிப்பதற்கு அதிகப் பிரியம்?

ஊரைச் சொன்னாலும் பேரைச் சொல்லக்கூடாது என்பது எல்லோரின் கொள்கைதான் என்றாலும், ஜூலை மாத 'கலை' இதழ் சந்திப்பைப் பாரும்...அவரே பதில் தந்துள்ளார்.

★ டி. பி. வெங்கடதாஸ்—
மாயூரம்.

கனவு காட்சிகள் இல்லாமலும், ஆபாசமான நடனங்கள் இல்லாமலும் படமெடுத்தால் என்ன?

இப்பொழுதுள்ள கச்சா பிலிம் வெட்டை ஆதரிப்பதாக இருக்கும்!

★ ஜஸ்றஸ்—பீர்மேடு.

கச்சா பிலிம் நெருக்கடி விரைவில் தீரும் என தாங்கள் கருதுகிறீர்களா? அல்லது தென்னகத்

பிலிமாலயாவின் படப்பிடிப்பின்போது திலீப்குமார் சக நடிகைகளுடன் உரையாடுகிறார்.



மங்கையர் திலகமாக விளங்கும் பத்மினி, இடைவேளையில் கேள்விகளுக்கு 'போனி' லேயே பதில் சொல்லுகிருர் போலும்!

தின் கலையுலகிற்கு இது தீரா வியாதியாகத் தொடருமா?

தீரும் வியாதியாக நேர்ந்தாலும், அந்நிய ரத்தம் எப்பொழுதும் சொந்த ரத்தத்தைப் போல் பயன்படாது!

★ வி. எஸ். ராமு—சிலோன்.

அரசியல் மேடைக்கும், கலை மேடைக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

முன்னதில் ஆவேசமும், பின்னதில் ஆர்வமும் கொப்பளித்தாலும், கலை என்னமோ நல்ல கருத்திற்கும், காரியசித்திக்கும் உற்ற துணையாகப் பொலிவுடன் நிலவத் தவறுவதில்லை.

★ எஸ். ராகவன்—சிவகாசி.

உலகில் மனைவியை விடச் சிறந்த பொருள் ஒன்று உண்டா?

உண்டு! அவளே ஈரைந்து மாதங்களாய் இன்னலையும் பொருட்படுத்தாது சுமந்து பெற்ற தாய்.

★ எஸ். என். கிருஷ்ணமூர்த்தி—வேலூர்.

பெண்களின்பண்பு என்ன?

இரும்பு போன்ற மனிதனைப் புடமிட்டு உருக் காக்கும் அக்கினியே அவர்கள் பண்பு.

★ எஸ். மாணிக்கம்—சென்னை—1.

தற்போது வெளிவரும் திரைப் படங்களெல்லாம் ஒரே நகைச்சுவை மயமாகவே இருப்பதற்குக் காரணமென்ன?

அர்த்தமற்ற நகைச்சுவையை ஆதாரமற்ற முறைகளில் கையாளுவதால்......படம் பார்க்கும் பொழுது தூக்கம் கெடுகிறதாக்கும்!

★ அ. ராமலிங்கம்—புதுக்கோட்டை

இயற்கையும், செயற்கையும் ஒன்ரு?

எப்படி ஒன்ருக முடியும்! இயற்கை யில்லாத இடமே இல்லை. ஆனல், செயற்கை யில்லாத இடம் உண்டு. ஆகவே, இயற்கையி

னின்றும் செயற்கை தோன்றக் கூடுமே அல்லாமல் இயற்கையின்றி செயற்கை உண்டாவதில்லை.

★ சி. ராகவேந்திரன்—
சென்னை—1.

வ. லோக நாதன் — வேலா யுதபாளையம்

கட்டபொம்மனாக நடிப்பதில் கணேசன் பெருமை கொள்கிருர். கணேசனைப் பெற்றதால் தமிழகம் பெருமை கொள் கிறது. அவர் நடிப் பின் சிறப்பைப் பார்த்து நாம் பெருமை கொள்கிருேம்.

ஆர். குருசாமி—
ஜாப்னு.

தங்கள் கலையில் சினிமாப் பட விமர்சனம் ஏன் எழுதுவதில்லை ?

பட விமர்சனத்தால் பயனெதுவும் பிறக்கப் போகிறதாக எனக்குத் தோன்றவில்லை. அன்றியும் இப்பகுதியால் என் மீது ஒரு சிலர் காட்டும் அபரிதமான அன்பே போதுமானது.

★ வே. கோதண்டன்—
ஸ்ரீவில்லிபுத்தூர்.

சிவாஜி கணேசன் தி. மு. க. கட்சியிலிருந்து விலகிய காரணம் என்ன ? தி. மு. க. கட்சியிலிருந்து வெளிவந்தவுடன் நடித்த முதல் படமெது ?

தனது குடும்ப நிலையின் காரணமாக கட்சியை விட்டு விலகி விட்டதாக கூறியுள்ளார். இருப்பினும் அந்தக் கட்சியை விட்டு வெளிவந்த உடனேயே ஒப்பந்தமான படம் 'ரங்கோன் ராதா'.

★ மணி வண்ணமலர்—
இலங்கை.

நடிகர் திலகம் சிவாஜி கணேசனும், பத்மினியும் சேர்ந்து நடித்த முதல் படம் எது ?

மதருஸ் பிக்சர்ஸ் 'பணம்'.

★ மாத்தூரான்—இ. மாத்தூர்.

உலகம் என்ற கடை வீதியில் மிக மிக மலிவாகக் கிடைக்கக் கூடிய பொருள் எது ?

பொய்......! ஏனெனில் அது தான் பேரமற்ற விலையில் உலகில் மலிவாக உலாவுகிறது !

★ ச. ஜலநாதன்—தக்கோலம்.

நேயர்களிடமிருந்து வரும் எல்லா கேள்விகளுக்கும் தாங்கள் பதில் அளிக்கிறீர்களா ?

எப்படி முடியும்...? எனக்கு வரும் கேள்விகளோ ஏராளம். அத்தனைக்கும் பதிலெழுத என் கை வலிக்காது என்றாலும், உங்கள் 'கலை'யில் போதிய இடமில்லையே என்கிறபோது எனக்கு மனம் வலிப்பதும் உண்டு !

★ அன்பு சேக்—
வத்தலகுண்டு.

கலை ஒரு போட்டிப் பத்திரிகையா ?

இல்லை......! பூரிப்பைத் தர, புதுமைப் புகழுடன் பிறந்திட்ட மற்ற பத்திரிகைகளின் அன்புச் சகோதரி.

பிராங்போர்ட் நகரைச் சேர்ந்த கிரீடல் மேயர் என்பவருக்கு இரு நாக்குகள் இருந்தும் பேசாமடந்தையாய் இருப்பது ஆச்சரியம்தான். ஆனால் அதைவிட ஆச்சரியம், கலையுலகிலேயே முக்கிய இடத்தைப் பெற்றிருக்கும் சினிமா உலகில் கண்ணியம் நிறைந்த கனவான்களும், கடமையையுணர்ந்த கலைஞர்களும், கட்டுப்பாடுடன் வேலை செய்யும் உழைப்பாளிகள் இருந்தும், ஒரு சிலர் இன்று ஒன்று சொல்லுவது, நாளை, " நான் அதைச் சொல்லவில்லை என்றும், நான் பணம் கொடுப்பதாகச் சொல்லவில்லை " என்றும் நா கூசாமல், ஒரு நாக்குடன் இரு நாக்காகப் பேசுபவர்கள் இருந்து கொண்டு சினிமா உலகிற்கே அவகேடு உண்டாக்குகிறார்கள். பாவம், இரண்டு நாக்கும் இருந்தும் பேசா மடந்தையாக உள்ளது ஒரு விதத்தில மகிழ்ச்சியே !

இம்மாத வெளியீடு!
கோபி பிரதர்ஸ்
அளிக்கும்
ஓடாதே! நில்!!
வசனம்:
சிவ - சுந்தரம்
(கோபி சகோதரர்கள்)
கதை · டைரக்‌ஷன்:
S. பாலசந்தர்

கற்பனை உலகில் மறைந்த நட்சத்திரங்களின் ... சந்திப்பு ...

'தாரா'

[கலைவாணர் என். எஸ். கே. ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருக்க அங்கே நாதஸ்வர வேந்தர் இராஜரத்தினம் வந்து சேருகிறார்.]

இராஜரத்தினம்:—"அண்ணே! என்ன யோசனை? புதுசா கிந்தனார் நாடகம் எதாச்சும் தயாரிக்கிறீங்களா!"

கலைவாணர்:—(தம்முடைய ஆழ்ந்த சிந்தனையில் இருந்து திடுக்கிட்டு விழித்தவராக) "யாரு அண்ணுச்சியா! வாங்க... வந்து உக்காருங்க. நம்ம பழைய இடத்தைப் பத்தி யோசிச்சுக்கிட்டிருந்தேன்."

இராஜ:—"ஓ, தமிழகத்தைப் பத்தி நெனைச்சுக்கிட்டு இருந்தீங்களா?"

கலை:—"தமிழகமா! அப்படி ஒன்றும் உலகத்திலே இல்லையே அப்பா!"

இராஜ:— (திடுக்கிட்டவராக) "என்னண்ணே இது?"

கலை:—"ஆமாண்ணே! பூகோளப் படத்திலே இன்னும் சென்னை மாகாணமுன்னு இருக்கே தவிர 'தமிழகம்', அப்படீன்னு இல்லியே?"

இராஜ:—"ஓ, நீங்க அதைச் சொல்றீங்களா? சுதந்திரம் வந்து பத்து வருஷமாச்சு. இன்னும் இந்த சின்ன விஷயத்தைக் கூட மாற்ற முடியல்லியே!"

கலை:—(சற்று ஆத்திரத்துடன்) "எப்படி மாற்ற முடியும்? ஆளுக்கொரு கட்சி; நாளுக்கொரு கொள்கை என்று இருந்தால் அங்கே ஒற்றுமை எப்படி இருக்கும்? ஒற்றுமை இல்லாத இடத்தில் முன்னேற்றம் எப்படித் தோன்றும்"

(அப்போது பி.யு. சின்னப்பா அங்கே வந்து சேருகிறார்)

பி. யு. சின்னப்பா:— "ஏம்பா முன்னேற்றம் இல்லாமே? தமிழ் நாட்டு சினிமா உலகம் தான் இப்போ ரொம்ப முன்னேறிப் போச்சே".

கலை:—"யாரு ராஜ... பார்ட்டா! என்னப்பா அப்படி முன்னேற்றம்".

பி. யு. சி.:—"என்னவா? மிந்தியெல்லாம் நானே பாடனும்; காடு மேடு, மலை எப்படி இருந்தாலும் நானே துணிஞ்சு குதிரை சவாரி பண்ணனும்; கத்திச் சண்டை நானே போடனும்; சிலம்பம் ஆடனும், எல்லாம் நானே செய்யனும். ஆனா இப்போ அப்படியெல்லாம் இல்லையாமில்லே. சீர்காழி பாட, ஸ்டண்டு சோமு குதிரைச் சவாரி செய்ய, நம்பியார் கத்திச் சண்டை போட,

'ஹீரோ 'வுக்கு உதவு கிறார்களாமே. எனக்கு இந்த வசதி இருந்திருந்தா ஒரு நாளைக்கு மூணு என்ன, நாலு 'கால் சீட்' கூட ஓர்க் பண்ணி யிருப்பேம்பா'',

(அப்போது... அங்கு வந்த கிட்டப்பா அவர்களும் உரையாடலில் கலந்து கொள்ளுகிறார்கள்.)

கிட்டப்பா:—சின்னப்பா! கால் ஷீட் ஓர்க் பண்றது இல்லே பெரிசு. படம் பார்க்கிறதுக்கு நல்லா இருக்கனும். நீ ஒரு நாளைக்கு, ஒரு கால்ஷீட் தான் நடிச்சே. அதனாலே உன்னாலே கஷ்டப்பட்டு நடிக்க முடிஞ்சுது. நீ நடிச்சு வெளிவந்த படங்களெல்லாம் 20 வாரம் 25 வாரமுன்னு ஓடிச்சு. சின்னப்பா நடிச்ச படமுன்னாலே இன்னைக்கி கூட அதுக்கு ஒரு 'மௌசு' இருக்கத்தான் செய்யுது.

சின்னப்பா:—அது என்னமோ வாஸ்தவம் தான். சிவாஜி கணேசன் என்னைவிட சிறந்த நடிகர்தான். ஏன் உலகத்திலேயே அவரைப் போல சிறந்த நடிகர் இல்லேன்னு கூட சொல்லலாம். ஆனா அவர் நடிச்ச உத்தம புத்திரனுக்கும், காத்தவராயனுக்கும் கூட, நான் நடிச்ச உத்தம புத்திரனுக்கும், ஆரியமாலாவிற்கும் கிடைச்ச வரவேற்பு கிடைக்கல்லே!

ராம்நாத் :—எப்படி வரவேற்பு இருக்கும்! ஒரே நாளுலே மூணு கால்ஷீட். அதுவும் ஒரே படத்திலே கூட இல்லே. வேறே வேறே படத்திலே. ஒன்னுலே காதல் காட்சி; மற்றொன்றிலே சோகக் காட்சி; இன்னொன்றிலே வில்லன் வேஷம். இப்படி இருந்தா அவர்கள் என்ன செய்வார்கள் ?

கலைவாணர்: இதுக்கு நடிகர்கள் என்னப்பா செய்வாங்க. பட முதலாளிங்க பெரிய நடிகர்களை விட்டாத்தானே. அவுங்க வேண்டாமுன்னு ஒதுக்குனா கூட இந்த முதலாளிங்க, மூணு வருஷம் கழிச்சாவது வந்து நடிங்க; ஒப்பந்தம் மட்டும் செஞ்சுக் கிருங்கன்னு, அவுங்க தலையிலே 'அட்வான்ஸ்' பணத்தை கட்டிட்டுத்தானே பங்களாவை விட்டு வெளியே போறேன்றுங்க.

மொய்தீன் :— நாங்கள் என்னப்பா பன்றது. ஸ்டார் வேல்யூ இருந்தாத்தானே டிஸ்ட்ரிபியூட்டர்கள் பணத்தை கொடுக்கிறேன்றுங்க. கையிலே முதல் இல்லாமே படம் எடுக்க வந்திருக்கிற முக்கால்வாசி 'புரொடியூசர்கள்' அதனாலே தான், பெரிய நடிகர்களின் பின்னாலே ஓடிக்கிட்டிருக்காங்க.

காளி என். ரத்தினம் :—நடிகர்களுக்குமட்டுமில்லீங்க...பொதுவாக இந்தத் துறையிலே இருக்கிற எல்லோருக்குமே ஒரு படம் 'சக்சஸ்' ஆச்சுன்னா கொஞ்சம் தலை ஆடித்தான் போகுது. அடுத்த படத்துக்கு எல்லாம் தாங்கள்தானுன்னு படத்தை ஒரு வழியா 'டப்பா' ஆக்கிடுறுங்க.

கலை :—படங்களிலே 'காமிக்' வரைக்கும் நானே டைரக்ட் செய்துகிட்ட போது கூட, எவ்வளவு நாளைக்குப் பிறகு டைரக்டருன்னு பெயர் போட்டேன் தெரியுமா ?

(தொடரும்)

தெரிந்து கொள்ளுங்கள்

வினா ?

1. அமெரிக்காவின் முதல் ஜனாதிபதி யார்? எப்போது தேர்ந்தெடுக்கப்பட்டார்?

2. அமெரிக்கா எப்போது சுதந்திரம் அடைந்தது?

3. சீனாவின் பெருஞ் சுவர் எப்போது ஏற்பட்டது?

4. இந்தியாவில் ஆங்கிலக் கோட்டை முதன் முதல் யாரால் எப்போது கட்டப்பட்டது?

5. மார்க்கோபோலோ தென் இந்தியாவிற்கு எப்போது விஜயம் செய்தார்?

6. சூயஸ்கால்வாயை வெட்டி இந்தியாவுக்கு குறுக்கு வழி செய்தது யார்?

7. ஈ. வே. ரா. பிறந்த வருடம் எது?

8. இரத்தினக் கற்கள் எப்படி உண்டாகின்றன?

9. 'டீசல் இன்ஜின்' யாரால் கண்டு பிடிக்கப்பட்டது?

10. காகிதம் செய்யும் முறையை ஐரோப்பியர் யாரிடமிருந்து அறிந்தனர்?

11. தேம்பாவாணி எழுதியவர் யார்?

12. வீரபாண்டியனுக்கு தூக்கு தண்டனை அளித்த ஆங்கில தளபதி யார்?

விடை !

1. 1784ம் ஆண்டு ஏப்ரல் 30ம் தேதி ஜார்ஜ் வாஷிங்டன் முதல் ஜனாதிபதியாக ஆனார்.

2. 1776-ம் ஆண்டு ஜூலை 4-ம் தேதி அமெரிக்காவின் சுதந்திரப் பிரகடனம், பிடெல்பியாவில் வெளியிடப்பட்டது.

3. 255 B. C.ல் ஏற்பட்டது.

4. 1803-ம் ஆண்டில் கொச்சியில் வாஸ்கோட காமாவால் கட்டப்பட்டது.

5. 1293-ம் ஆண்டில் சைனாவிலிருந்து திரும்பும் போது விஜயம் செய்தார்.

6. பெர்டினன் - டி - லெஸ்ஸெப்ஸ் (Ferdinand-de-Lesseps) என்ற பிரெஞ்சு இன்ஜினீயரால்.

7. 1879-ம் ஆண்டு செப்டம்பர் 17-ம் தேதி.

8. கல்லை உருக்கக் கூடிய வெப்பமுள்ள பூமியின் உட்பகுதியில் கிடைக்கும் கற்களோடு சில நற்பொருள்கள் சேருவதால்.

9. எண்ணெயைக் கொண்டு இயங்கக் கூடிய இது ருடால்ப் டீஸல் (Rudolph Diesal) என்பவரால் 1894-ல் கண்டு பிடிக்கப்பட்டது.

10. அராபியரிடமிருந்து அறிந்தனர்.

11. வீரமாமுனிவர் ஆவர்.

12. பானர்மென் என்ற தளபதி.

அழகுக்கும் அழகு செய்ய...
Remy
ரெமி
தயாரிப்புகள்

100 நாட்களுக்கு குறையாமல் ஓடக்கூடிய படங்களுக்கு வசனங்களைத் தீட்டி வரும் ஸ்ரீதர், வீனஸ் பிக்சர்ஸாரின் "கல்யாணப் பரிசை" டைரக்ட் செய்யும் காட்சி.

வண்ணக்கிளி:

பிரேம் நஸீரின் தங்கை வண்ணம் (பி. எஸ். சரோஜா). அவளை அன்புடனும், முகம் கோணா முறையினாலும் வளர்த்து இன்புற்று வந்ததுடன், நல்ல லட்சியவாதி ஒருவனிடமும் அவளை ஒப்படைத்து தன் பொறுப்பை தீர்த்துக்கொள்ள முடிவு செய்கிறார் பிரேம். ஆனால், விதியின் வழி வேறு விதமாக இருந்தது. முரட்டுத்தனத்துடன் தப்பான பாதையில் தலைகால் புரியாமல் கொள்ளைக் காரனாய் உலாவிவரும் மனோகர், எப்படியோ வண்ணத்தின் மீது கன்னம் வைத்திருந்து தன்னிருப்பிடத்திற்கு இழுத்துச் சென்றதுடன், தாலியையும் கட்டி விடுகிறார். இந்த எதிர்பாரா நிகழ்ச்சிகளால் வெதும்பி, உடைந்த உள்ளத்துடன் ஊசலாடும் வண்ணத்தை சகோதரன் பிரேம் சந்தித்து, உன்னை இந்நிலைக்கு ஆளாக்கிய அந்த கொடியவனை கொலை செய்து விட்டு இப்பொழுதே அழைத்துச் செல்லுகிறேனென்று மனக்கொதிப்புடன் கூறுகிறார்...ஆனால், வண்ணமோ நல்ல மாண்புடைய மங்கை நல்லாள். கல்லானாலும் கணவன் என்ற உயர்வு முறையோடு கூடிய சகல நீதிகளையும் தவறின்றி அறிந்தவள். ஆகவே, "அண்ணா...! என் மஞ்சள் குங்குமமும், சூட்டிக் கொண்டுள்ள மலரும் மறைந்து விட வேண்டுமென்றா விரும்புகிறாய். சுவற்றிலே பூசப்பட்ட சுண்ணாம்பு ஒரு காலும் திரும்பப் போட்டுக் கொள்ள பயன்படப் போகிறதில்லை. ஆகவே, என் வாழ்க்கையின் விசித்திர வழிகள் இப்படி அமைந்து விட்டாலும், எனக்கொரு நல்ல காலமும் வராமலாபோய் விடப் போகிறது..." என்று கண்களிலே நீர் தாரை தாரையாக

வழிய மனம் நொந்து வருத்தப் படுகிருள். இதைக் கண்ட பிரே மும் சோகச்சிலேயாகி, உணர்ச்சி வசமிழந்தவராய் கண்களிலே நீரைப் பெருக்குகிருர். இப்படி யொரு உணர்ச்சிப் பிழம்பான சிறந்த காட்சி யொன்றையும்... மனேகரை ஒரு பாழடைந்த பிரமாண்டமான இடத்தில் சந்தித்து 'அடிக்கும் கைதான் அணேக்கும்' என்ற நல்ல அர்த் தப் பொலிவுள்ள பாடலேப் பாடி, சோகபிம்பமாக மாறி, நல்ல நீதியுள்ள வழிகளேயும், முறைகளேயும் வகுத்து, தன் முரட்டு, கொள்ளேக்கார கண வனே ஒரு கண்ணிய மனித ஞக்கி, தன் காலிலே விழுந்து மன்ருடும் அளவுக்கு மாற்றி, குணச்சித்திர பண்புள்ள பெண்ணுக வண்ணம் காட்சி யளித்து கண்ணீர் விட்டதைக் கண்ட.... அதாவது படப்பிடிப் பின் போது அங்கிருந்த அத் தனே பேர்களுமே நிஜமாகவே உணர்ச்சி வசப்பட்டவர்களாய் மாறி கண்ணீர் விட ஆரம்பித்து விட்டார்கள். இத்தகைய உணர்ச்சி மயமான மற்ருெரு காட்சியையும் தத்ரூபமாய், இயற்கையைப் போன்றே சிறப் புடன் படமாக்கினுர் டைரக் டர் ரகுநாத். மாடர்ன் தியேட் டர்ஸாரின் உன்னத முயற்சி யும், ஒப்பற்ற தயாரிப்புமான இப்படத்தில் மற்றும் மைனு வதி, டி. ஆர். ராமச்சந்திரன், முத்துலக்ஷ்மி, டி. பாலசுப்ர மணியம் ஆகியோரெல்லாம் நடித்து வருகிருர்கள். எல்லா குடும்பங்களும் விரும்பி பார்க் கக் கூடிய அளவில் உன்னத முயற்சியாக உருவாகிவரும் இப்படம் 1959–ம் ஆண்டின் சிறந்த சித்திரமாக விளங்கப் போகிறது என்பதில் எவ்வித சந்தேகமுமில்லே.

நல்ல தீர்ப்பு

நடன நளின சுந்தரி ஒருவள் கொலே செய்யப் படுகிருள். சந் தேகக் கண் கொண்ட போலீ ஸார் சங்கர் என்ற வாலிபனின் தகப்பனுரைக் கைது செய்து சிறையில் அடைக்கின்றனர். அதனுல் சங்கரே தனது நண் பன் உதவியுடன் உண்மைக் குற்றவாளியைக் கண்டுபிடிக்க துப்பறிகிருன். இதனுல் வந்து

'கடவுள் எங்கே?' ஆரம்ப விழாவில், மேயர் ஸ்ரீமதி தாராசெரியன் அவர்களுடன், சீர்காழி கோவிந்தராஜன், பி. எஸ். செட்டியார், நாகி ரெட்டியார், ஆர். ஆர். சந்தி ரன் முதலியவர்கள்.



இப்படத்தை விஜயா பிலிம் ஸார் தயாரித்து வருகின்றனர். அமியா சக்ரவர்த்தியின் மூலக் கதையான இதற்கு ஸ்ரீதர் வசன மெழுதுகிறார். இதில் மற்றும் பத்மினி, ராகினி தங்கவேலு, டி. ஆர். ராமச்சந்திரன், வி.கே. ராமசாமி, கண்ணும்பா, சுந்தரி பாய் ஆகியோரெல்லாம் நடிக்கின்றனர். டைரக்ஷன் ஆர். எஸ். மணி. தயாரிப்பு என். எஸ். திரவியம்.

ஜீவபூமி :

ஜனதா பிக்சர்ஸாரின் இப் படக் கதை சாண்டில்யனுடையதாகும். ஏ. பி. நாகராஜன் சிறப்புடன் வசன மெழுதும் இச்சித்திரத்தில் சிவாஜி கணேசன், எம். ஆர். ராதா, ஸ்ரீராம், சரோஜாதேவி, வி. ஆர். ராஜ கோபால், டி. கே. பகவதி, சாரங்கபாணி ஆகியோரெல்லாம் நடிக்கின்றனர். டைரக்ஷன் கே. சோமு.

மரகதம் :

பக்ஷிராஜாவின் ஒப்பற்ற தயாரிப்பான இப்படம், பிரசித்திப் பெற்ற நாவலான 'கருங் குயில் குன்றத்துக் கொலை' என்ற நாவலாகும். வெகு துரிதமாய் கோவை பக்ஷிராஜா ஸ்டுடியோவில் தயாராகி வரும் இப்படத்தில் சிவாஜி கணேசன், பத்மினி, பாலையா, எம். கே. ராதா, பாலச்சந்தர், டி. எஸ். துரைராஜ், பி. எஸ். ஞானம், சந்தியா, முத்துலக்ஷ்மி ஆகியோரெல்லாம் நடித்து வருகின்றார்கள். வசனம் – மாறன் எம். ஏ., தனக்கே உரித்தான சிறப்புப் பாதையிலே திறமையுடன் டைரக்ட் செய்து வருகிறார் எஸ். எம். எஸ். நாயுடு. சங்கீதம் – சுப்பையா நாயுடு.

ஆஸ்திக்கொரு ஆணும், ஆசைக்கொரு பொண்ணும் :

தினகரன் பிக்சர்ஸாரின் இப் படம் சிறந்த தத்துவ அடிப்படையின் நுணுக்கக் கருத்துக்களை விளக்கிடும் நல்ல குடும்பக் கதையாகும். இதில் பிரேம்நஸீர், எம். என். ராஜம், வி. கே. ராமசாமி, கண்ணும்பா, டி. கே. ராமச்சந்திரன், வி. ஆர். ராஜகோபால், முத்துலக்ஷ்மி, பொன்னுசாமி பிள்ளை ஆகியோரெல்லாம் நடிக்கின்றனர். கதை, வசனம் – ஏ. பி. நாகராஜன், டைரக்ஷன் — கே. சோமு, தயாரிப்பு – தினகர் ராஜ், தர்மராஜ்.

ஜி. ஆர். பி. எஸ். புரொடக்ஷன்ஸாரின் "மகனே மருமகன்" ஆரம்ப விழாவில் மந்திரி பக்தவத்சலத்துடன் ராமையாதாஸ் முதலியவர்கள்.



அல்லி பெற்ற பிள்ளை :

ஒரு லாடக்காரரின் மகள் பாவாயி. பலவேசம் என்ற ஆசாமி ஒருவன் லாடக்காரருக்கு கடன் கொடுத்திருக்கிறான். ஆகவே, ஒரு நாள் லாடக்காரர் இல்லாத சமயம் பார்த்து கடன் கேட்க பாவாயிடம் நெருங்கி ஏதேதோ வெல்லாம் பேச முற்படுகிறான். அச்சமயம் பார்த்து பாவாயி தேள்...! தேள்...!! என்று கூக்குரலிடுகிறாள். இச்சப்தத்தைக் கேட்ட பலவேசம் அலறி அடித்துக் கொண்டு அங்குமிங்கும் ஓட முயற்சிக்கிறான். அப்பொழுது மைதாமாவு டப்பா ஒன்று கீழே விழ, அவன் முகமெல்லாம் மாவு மயமாகி விடுகிறது. அதேசமயம் பாவாயியின் அப்பனும் அங்கு வந்து சேர, அவரும் தேள்...! என்ற வார்த்தையைக் கேட்டு அலறி மைதாமாவு டப்பாவின் மேல் போய் விழுந்து உடலெல்லாம் மாவாக்கிக் கொள்கிறார். இப்படிட பட்டதொரு நல்ல ஹாஸ்ய காட்சியை எம். எம். புரொடக்ஷன்ஸார் சமீபத்தில் படமாக்கினர். இதில் பாவாயியாக முத்துலக்ஷ்மியும், பலவேசமாக கருணாநிதியும் பாகமேற்றனர். மற்றும் சாரங்கபாணி, வி. கே. ராமசாமி, ராஜேந்திரன், எம். என். ராஜம், சகஸ்ரநாமம் ஆகியோரெல்லாம் நடிக்கின்றனர். இதன் மூலக் கதையை முக்ராம் சர்மா எழுதியுள்ளார். திரைக் கதை வசனத்தை உயர்வுடன் அமைத்துள்ளார் ஏ. பி. நாகராஜன். டைரக்ஷன் – கே. சோமு.

அவள் யார் :

சுதர்சனம் பிக்சர்ஸாரின் இச்சிறந்த சித்திரம் வெகு துரிதமாய் வளர்ந்து வருகிறது. அன்பிலும், பண்பிலும், அருளிலும் சிறந்த ஒப்பற்ற குலகவதியொருவளின் சிறப்பு மிக்க ஏடு இது. இக் கதைக்கு பூரிப்புமிக்க பொலிவு வசனத்தை உணர்ச்சி மிளிர்ச்சி யுடன் வாரி வழங்கி இருக்கிறார் வித்துவான் வே. லட்சுமணன். இதில் சிவாஜி கணேசன், பண்டரிபாய், சௌகார் ஜானகி, சகஸ்ரநாமம், சந்தியா, ரங்காராவ், டி. கே. ராமச்சந்திரன் ஆகியோரெல்லாம் நடித்து வருகின்றனர். டைரக்ஷன் – கே. ஜே. மஹாதேவன்.

அசோகாவின் "பெண்குலத்தின் பொன் விளக்கில்" ஸ்ரீரஞ்சனியுடன் வசனகர்த்தா முகவை ராஜமாணிக்கம், தயாரிப்பாளர் முதலியோர்கள்.



INSIST ON Klein & Peyerl BLOCKS

MOUNT ROAD : : MADRAS-2.


ஸ்ரீ புரொடக்ஷன்ஸ்.......
நல்ல தீர்ப்பு
காட்சிகள்...
BALU BROS

மறைந்த கலைஉலக மேதைகளுக்கு

அஞ்சலி

காவியம்: வித்வான் வே. இலட்சுமணன்

கலைத்தாயின் தலைமகனாய் விளங்கி நின்று
கலையினிலே கருத்தூட்டி வாழவைத்தோன்;
நிலைபெற்ற தமிழகத்தின் புகழை ஏற்றி
நீங்காது நிறைந்திட்ட கலையின் வேந்தன்!

சின்னப்பா என்றாலே உள்ளந்துள்ளும்;
செம்மை ஒளி படர்ந்து காணும்;
வண்ணப்பா ஒலி ஆர்க்கும்; வண்டமிழ்
வாழ மட்டும் இவன்புகழ் வாழுமன்றோ!

'சிந்தாமணி' கண்டார் சொர்க்கம் கண்டார்;
சிந்தாகுலம் தீர்ந்தார், இசைத்தார் எங்கும்;
கொந்தார் மலர்க்குழலாள் அசுவத்தம்மா
கொண்ட அவ்வேடம்தான் மறைந்திடுமோ?

பண்ணிசைத்தாள் பாறையும் நெக்குருக;
படம்நடித்தாள் மாந்தரினம் மனம் மகிழ;
எண்ணறியா நாதப் பெரு வெளியில்
இணைந்திட்டாள் வசந்தகோகிலமே!

BALU BROS

பண்பு மிகு நடிப்பினிலே மாமேதை;
படக்கலையைப் படைத்திட்ட விஞ்ஞானி;
திண்மையுளம் கொண்ட வீரன், ராஜா
சாண்டோவின் நிகராவார் யாருமுண்டோ?

←

மக்கள் மனங்கவரும் சுவைமிக்க 'பானம்' தந்த
காபி மன்னன், உழைப்பாலே உயர்ந்திட்ட
கொள்கை வேந்தன், தென்னாட்டுத் திரையுலகின்
வெற்றிக்கு பொன்னான நிலையம் கண்ட
எங்கள் நரசு →



வெண்திரையில், மேடையினில் நகைவிளைத்து
வீரமிகு வித்தகன் காளி என். ரத்தினம்
மண்மகளும் இவன்கலையால் மகிழ்ந்திட்டாள்,
மங்காத கலைமகளும் களித்திட்டாளே!

←

காந்தம் போல் மக்கள் உள்ளம்
கவர்ந்திட்ட கலையரசி
சாந்தம் தவழ் சந்தான
லட்சுமிக்கு நிகருண்டோ?

[மற்றவர்கள் அடுத்த இதழில்] →

இந்தியாவிலேயே
சிறந்த இடம்

பிரசாத் பிராசஸ் (பிரைவேட்) லிட்,

சந்தமாமா பில்டிங், சென்னை-26.

BALU BROS.





வீனஸ் பிக்சர்ஸ்

கல்யாணப்பரிசு

...காட்சிகள்...


K.M.D.V.N. புரொடக்ஷன்ஸ்...
மனைவியே மனிதனின் மாணிக்கம்
......காட்சிகள்......

கோபி பிரதர்ஸ்
ஓடாதே!...நில்!!
காட்சிகள்...
BALU BROS



மேகலாவின் குறவஞ்சி (காட்சிகள்)

புலவர்கள் பித்தர்களா?

தெ. பிரேம குமாரி
IV B .A. எத்திராஜ் மகளிர்கல்லூரி.

புலவர்கள் பித்தர்கள்; பைத்தியக்காரர்கள்; அதுமட்டுமல்ல அவர்கள் விசித்திரவாதிகள்; விந்தை மனிதர்கள், உண்மையில் சொல்லப்போனுல் நடைமுறை வாழ்விலே நாம் தினம் தினம் சந்திக்கும் சாதாரண மனிதர்களினின்று மாறுபடுகிறுர்கள்; மிக மிக வேறுபடுகின்ருர்கள்.

கவிஞர்கள் பித்தர்களைப் போன்று கற்பனையுலகிலேயே சஞ்சரித்துக் கொண்டிருக்கின்ருர்கள்; மனைவி மக்களைப் பற்றிய கவலை அவர்களுக்கில்லை; மற்றய வற்றை குறித்த மனத்துயர் அவர்களுக்கு இல்லை; தங்களது இலட்சியங்களை உயர்ந்த எண்ணங்களை, கற்பனை உலகிலே தாங்கள் கேட்டதை, கண்டதை, அனுபவித்ததை யெல்லாம் குறித்து கவிதை இயற்ற வேண்டும், இயற்ற வேண்டும் என்று துடிதுடித்து உண்மையிலேயேகவிதைப் பித்தர்களாகி விடுகின்றனர்கள் ஒரு மனிதன் சாதாரணமாக நடை முறை மனிதனின்று சிறிது மாறுபட்டு இருந்தாலும் அவனை பித்தன், விந்தை மனிதன் என்று கேலி பேசிடும் இந்த விந்தை உலகம்.

சாதாரண மனிதன் காணுததையெல்லாம் புலவன் காணுகின்ருன்; சாதாரண மனிதன் சொல்லாததை யெல்லாம் புலவன் புகல்கின்ருன். சாதாரண மனிதனுக்குத் தோன்ருததெல்லாம் கவிஞனுக்குத் தோன்றுகின்றது; கவி நடை முறையினின்று மாறுபடுகின்ருன்; அவனது அறிவுமாறுபடுகின்றது. எனவே கவிஞன்பித்தனுகிவிடுகின்ருன்; பொய்மையே புலமையாகி விடுகின்றது.

பித்தன் தனக்குத் தானே ஏதோ பேசிக் கொள்கிருன். தனக்குத்தானே ஏதோ சிந்தித்துக் கொள்கின்ருன். தன் முன் இல்லாத ஒன்றை விளித்து அத்துடன் பேசுகின்ருன்; புலவர்களும் அப்படித்தான். எதையோ சிந்திக்கின்ருர்கள்; அவர்களுடைய கற்பனைக் குதிரை, கடிவாளங்களை அறுத்துக் கொண்டு எங்கோ ஓடிவிடுகின்றது. இல்லாத உலகைப் பற்றி அவர்கள் பாடுகிருர்கள்; அதைப்பற்றி அவர்கள் காவியம் இயற்றி விடுகின்ருர்கள். பரந்த வானவெளியிலே விரிந்த மணல் பரப்பிலே அவர்கள் எதை எதையோ— சாதாரண மனிதனின் கண்களுக்கு தெரியாத எதை எதையோ காண்கின்ருர்கள்; பேசுகின்ருர்கள்; விந்தையான பித்தர்கள்!

பித்தர்கள் தான் எப்போதும் கனவு கண்டு

கொண்டே இருக்கின்றார்கள்; அதே போல்தான் இந்த கவிஞர்களும் ஓயாது கனவு கண்டு கொண்டே இருக்கின்றார்கள். அவர்களது கனவுகளிலேதான் எத்துணை எத்துணை விசித்திரங்கள்! ஆண்டாள்—சூடிக் கொடுத்த நாச்சியார் கண்ட அழகிய கனவுதானே திருப்பாவை. சாதாரண மனிதனின் கனவுகளுக்கும் இவைகளுக்கும் எத்துணை மாறுபாடு! இந்த மாறுபாடுதான் கவிஞர்களை பித்தர்களாகக் காட்டுகின்றது; ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்று கனவு காண்கின்றது கணியன் பூங்குன்றனாரின் பரந்தமனம். ஆனால் சாதாரண மனிதனின் மனமோ குறுகலான பாதையிலேயே செல்கின்றது.

கவிஞன் ஒரு பொருளைபார்க்கும் விதமே வேறு; தாமரையைப் பார்க்கிறான் கவி; தாமரை பெண்ணின் அழகிய முகமாகத் தெரிகின்றது அவனுக்கு; மல்லிகையைக் கண்ட அவனுக்கு பெண்களின் முத்துப் பற்கள் நினைவுக்கு வருகின்றன. வள்ளுவன் காட்டும் காவியத் தலைவியின் பாதமோ மெல்லிய அணிச்ச மலர் பட்டால் சிவந்துபோகுமாம். ஆயின் கம்பன் தன் காவியத் தலைவியை இன்னும் சிறந்த முறையில் படம் பிடித்துக் காட்டுகிறான். சீதை, தோழிகள் தன் பாதங்களை பஞ்சு கொண்டு வண்ணக் கலவையால் அழகுறச் செய்யவேண்டும் என்று பேசுவதைக் கேட்டே தன்பாதங்கள்சிவக்கப் பெறுவாளாம். என்னே இந்தக் கவிஞர்களின் விந்தையான மனப்போக்கு! நீல வானிலே வரும் வண்ண நிலவும், தாரகைகளும் கவிஞனின் கண்களுக்கு அழகிய, நங்கையாகவும் அந்த நங்கை அணிந்த தங்கப் பூப் பட்டுடன்கூடிய நீலத் துகிலாகவும் தோன்றுகின்றது. ஆனால் நம்மைப்போன்ற மக்களோ—சாதாரண மக்களோ, வானை பார்ப்பதே அபூர்வம்; அத்திபூப்பதுபோல அப்படிப் பார்த்தாலும் ஐயோ! மேகங்கள் உள்ளனவே; மழை வந்து விடுமே; வெளியே போக வேண்டுமே என்றுதான் நினைப்போம். இங்கேதான் கவிஞன் மாறுபடுகின்றான்

மனித மனநிலையில் எந்தத் தன்மையானாலும் அது அளவுடன் இருக்கவேண்டும்; அளவுக்கு மிஞ்சிப் போகுமானால் அது பித்த நிலையில்தான் கொண்டு போய் சேர்க்கும். கவிஞர்கள் எதையுமே அதிகமாக பார்க்கின்றார்கள்; அதிகமாக உணர்கின்றார்கள் அதிகமாகச் சிந்திக்கின்றார்கள் ஏனவேதான் அவர்களது உளநிலை மாறுபடுகின்றது. புலமை பொய்மை ஆகிவிடுகின்றது. அல்ல அல்ல அந்த பித்த நிலையிலிருந்துதான்; அந்த கனவு காணும் விசித்திர நிலையிலிருந்துதான் நமது உள்ளங்களைக்கவர்ந்து, நீங்காதுநிறைந்திருக்கக்கூடிய ஆயிரமாயிரம் அழகுக் கவிதைகள் தோன்றுகின்றன என்பது மறுக்கமுடியாத உண்மை!

ஆச்சரியம் ஆனால் உண்மை!

1. எழுத்துலகில் அதிக காலம் ஈடுபட்டிருப்பவர் டக்லஸ் போஸோ (Dowgles Fowcett) என்பவர் ஆவர். "ராத் ஆப் அணு" என்ற பாடலை இயற்றும் போது அவரின் வயது 13. 90 வயதாகும் இவர் இன்றும் பாடல்களை இயற்றிக் கொண்டிருக்கிறார். 77 வருடங்களாக இவர் கவிதை புனைகிறார்.

2. கை குலுக்குவதில் ஒரு புதிய' ரிக்கார்டை' உண்டாக்கியவர் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதியாய் இருந்த டியேடர் ரூஸ்வெல்ட் ஆவர். 1907-ம் ஆண்டு புது வருட ஆரம்ப தினத்தின்போது, 8513 பேர்களின் கைகளை குலுக்கினார்.

3. அக்பர் முதல் முதல்சமுத்திரத்தைப் பார்க்கும்போது அவரின் வயது 30 ஆகும். 1572-ல் அவர் குஜராத்து விஜயத்தில் இது நிகழ்ந்தது.

4. கிருஸ்து பிறப்பதற்கு 1500 ஆண்டுகளுக்கு முன்பே இந்தியாவில் இரும்பு கண்டு பிடிக்கப்பட்டது. டெல்லியிலுள்ள இரும்புத்தூண் 360-ம் ஆண்டு கட்டப்பட்டாலும், இன்றும் துருப்பிடிக்காமல் சுத்தமாக இருக்கிறது.

5. ஆங்கில பாஷைகளில் 1760 பத்திரிகைகளின் மொத்தப் பிரதிகள் 5⅓ கோடி அச்சடிக்கப் படுகின்றன. ஐக்கிய அமெரிக்காவில் உள்ள 'நியூ யார்க் நியூஸ்' என்ற தினசரி பத்திரிகையின் தினசரி பிரதிகள் 21¼ லட்சம் ஆகும். இதன் ஞாயிறு இதழ் மாத்திரம் 35½ லட்சம் பிரதிகள் விற்பனையாகின்றது.

6. இலக்கியத்திற்கும், கலைக்கும் சிறந்த போஷகராக இருந்த அக்பர் மகாசக்ரவர்த்தி உண்மையிலேயே கல்வி அறிவில்லாதவராக இருந்தார். அவருக்கு, படிக்கவும்கையொப்பம் போடவும்கூடத் தெரியவே தெரியாது.

7. பியூடன் ஜார்க் (Buiten Zorg) என்ற ஜாவாவில் உள்ள ஊர்தான் உலகிலேயே எப்போதும் அதிக இடி மின்னல் உடைய ஊராகும். வருடத்தில் சராசரி இங்கு 322 நாட்கள் இடியும் மின்னலுமாகவே இருக்கும்.

8. இந்தியரின் சத்து உணவான அரிசி கிருஸ்து பிறப்பதற்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பே அதர்வண வேதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

9. உலகில் உள்ள பெரிய மணி, மாஸ்கோவில், உள்ளது, இது 1733-ல் செய்யப்பட்டது. இதன் மொத்த எடை 193டன் ஆகும். இதன் குறுக்களவு 22 அடி 8 அங்குலம் ஆகும். விளிம்பின் கனம் 2 அடி ஆகும். இம்மணியில் 11 டன் எடையுள்ள ஒரு பாகம் உடைந்து விழுந்து விட்டது. தற்போது இம்மணி மாஸ்கோவில் உள்ள கிரெம்லினில் ஒரு மேடையில் வைக்கப்பட்டிருக்கிறது.

பொறுப்பு யாரிடம் இருக்கிறது ?

நான் 300 ரூ. சம்பளம் வாங்குகிறேன். சம்பளம் வாங்கு முன்பே ஒவ்வொன்றுக்கும் எவ்வளவு என்று ஒதுக்கிவிடுவேன். சம்பளம் வாங்கிய அன்றே சேமிப்பு பணத்தை முதலில் சேமிப்புக்கு அனுப்பிவிட்டு, கொடுக்கவேண்டியவர்களுக்கெல்லாம் கொடுத்துவிடுவேன். ஒரு விருந்தாளி வந்து 10 ரூபாய் அதிகம் எதிர்பாரார்து சிலவானல் அடுத்த மாதம் சினிமா கேளிக்கை சிலவுகளில் சரிசெய்துவிடுவேன். ஆதலால் கடன் படுவதே இல்லே.

நேரப்படி வேலே செய்ய வேண்டியதுதான். ஆனல் எதிர்பாராமல் அவசரமாக ஏதாவது வேலேயிருந்தால் நான் உடன் செய்வேன். நான் சட்டப்படி உட்கார்ந்திருந்தால் அவர்களும் சட்டப்படிதான் நடந்துகொள்வார்கள். எனக்கு இப்போது ஏதாவது ஆபத்தென்ருல் சட்டத்தைமீறி பணம் உதவி செய்கிருர்கள். லீவு கொடுக்கிருர்கள். இதற்கு பொறுப்பில்லாதவர் பெயர் வைத்திருப்பது காக்காய் பிடிப்பது என்று. ஒரு நாள் காரில் அவசரமாக எங்கள் அச்சகத்திற்கு பேப்பர் வந்திறங்கியது. துரையும் பக்கத்தில் வந்து உதவி செய்தார். நான் இடை வேளேயையும் பாராமல் பேப்பரைத் தூக்கி உள்ளே போட்டேன். உழைப்பைவிட, பொறுப்புதான் முக்கியமென்று கருதுபவன் நான்.

நான் இன்ஷ்யூர் செய்திருக்கிறேன். ''பிரீமியம்'' கட்டத் தவறுவதில்லே. என் மனேவிபெயரிலும், குழந்தைகளுக்காகவும் தனித்தனி 'பாலிஸி' எடுத்திருக்கிறேன். 'வாழ்க்கை வாழ்வதற்கே' என்பதை நன்ருக அறிந்தவன் நான். நான் மட்டும் நன்ருக இருந்தால் போதுமா? என்னே நம்பியவர்கள்—என் குழந்தைகள் எல்லோரும் நன்ருக இருக்கவேண்டாமா? ஒரு வேளே நான் இறந்துவிட்டால் அவர்களாவது நிம்மதியாக இருப்பார்கள் அல்லவா? நான் உறுதியுள்ள உடலுடன் நோயற்ற நிலேயில் இருக்கும் காலத்தில் உழைத்துப் பொருள் திரட்ட முடியும். ஒய்ந்து முதுமை கண்ட நாட்களில், ''பிராவிடண்ட் பண்டு'' எனக்கு உதவுமே! அதை நான் கைகுவித்து வரவேற்கிறேன். ஒரணுவுக்கு இரண்டணு பிடித்தாலும் என் மனம் அதற்கு இசையவே செய்யும்!

உழைப்பு யாரிடம் இருக்கிறது?

நான் 60 ரூ. சம்பளம் வாங்குகிறேன். சம்பளம் வாங்கியஉடன் கடன் கொடுக்கவேண்டியதை மறந்து விடுவேன். அன்றைய தினம் ரொம்பத் தொந்திரவு செய்பவர்களுக்கு, பாதிக்குப் பாதி கொடுத்துவிட்டு ஏதாவது ஒரு சினிமாவுக்கு 2-8-0 அல்லது 1-14-0 டிக்கட் வாங்கி எல்லோரும் போவோம். சம்பளம் வாங்கியவுடன் இரண்டு நண்பர்களைச் சேர்த்துக்கொண்டு, புதுமுறையில் வந்துள்ள ஹோட்டலில்சென்று சாப்பிடுவோம். பில் குறைந்தது 10 ரூபாய் ஆகும். வீட்டில் கேட்டால் ஏதோ சம்பளத்தில் பிடித்துவிட்டார்கள் என்பேன். ஒரு வாரத்திற்கு தாராளமாக சாமான்கள் வாங்கிச் சாப்பிடுவோம். 20-ந் தேதிக்குப்பின் கஷ்டம்தான். கையில் பணம் இருக்கும்போது எதையாவது வாங்கும் கெட்ட பழக்கம் எங்களிடம் இருக்கிறதே.

நேரமென்ருல் நேரம்தான். மணி அடித்தபிறகு ஒரு ஆபத்தான அல்லது, அவசர வேலையாயிருந்தாலும் கிட்டே நெருங்கமாட்டேன். ஒருநாள் அவசரமாக பேப்பர் வந்தது. காரில் துரையும் நின்றுகொண்டிருந்தார். நான் உட்கார்ந்து கொண்டுதான் இருந்தேன். 500 ரூபாய் வருமானமுள்ள Salesmanதான் பேப்பரைஉள்ளே எடுத்துப் போட்டார் **'காக்காய் பிடிப்பது' நமக்குப்** பிடிக்காது.

நான் பணத்தைச் சேமிக்க வேண்டுமென்பதில் இவர்களுக்கு என்ன அக்கரை பாருங்கள்! "இன்ஷ்யூர் செய்" என்று ஒரு கத்தைக் காகிதத்துடன் படையெடுக்கிருர் ஒருவர். "**சிட். பண்டு** ஆள் நான்! பணத்தைக் கொஞ்சங் கொஞ்சமாகக் கட்டிஞல் மொத்த மாகக் கிடைக்கும்—லாபத்துடன்" என்று வருகிருர் ஒருவர்! "சேமிப்பு நிதி" நோட்டுகளைக் காட்டிப் பணம் கட்டும்படி கவர்மெண்டிலும் ஆசை காட்டுகிருர்கள். போதாக் குறைக்கு 'பிராவிடண்ட் பண்டு' வேறே! ரூபாய்க்கு ஒரணு சேர்த்துத் தருகிருர்களாம்! எப்போது? காலமெல்லாம் கடந்துபோய்—வேலையும் தீர்ந்துபோய், வீட்டுக்குத் திரும்பும் கடைசி நாளில்!... கடைசி நேரத்தில்! யாருக்கு வேண்டும் இது! நன்ருக ஓடியாடும் பருவ காலத்தில் பணம் தேவையா? ஓய்ந்து போன பிறகும், செத்த பின்பும்தேவையா?

என்னிடம் 'இன்ஷ்யூர்' பற்றிப் பேச வந்தவர்என் அநுதாபத்திற்கு உரியவராகி 1000 ரூபாய்க்கு முடித்துக்கொண்டு போனுர். பணம் கட்டியதில் 60 சதவீதம் 'லோன்' வாங்கிவிட்டேன். எப்படி என் சாமர்த்தியம்! 'பிராவிடண்ட் பண்'டிலிருந்தும் கொஞ்சம் வாங்கி விட்டேன்! நானு சேமிப்பேன்; நடக்குமா என்னிடம்?

நேயர் தபால்

காஞ்சி. நடராசன், கோவை.

கலை அரசியலுக்கும், அதிகார வெறிக்கும் அப்பாற் பட்டது. அவ்வாறே 'கலையரசி'யும் அரசியல் சூதாட்டத்திற்கு வளைந்து கொடுக்காமல், கலை மனிதனுக்காக என்ற உன்னத இலட்சியத்திற்காக பணி புரிவது கண்டு பெருமை கொள்ளுகிறேன்.

●

அன்பெழில், கொழும்பு.

'கலை' தீபாவளி மலர் கண்டோம். உள்ளமெல்லாம் இனித்தது. கண்கள் எல்லாம் குளிர்ந்தன. எண்ணமெல்லாம் கருத்து விருந்துண்டன. எப்படிப் புகழ்வது என்றே தெரியவில்லை. தீபாவளி மலர்களிலேயே முதல் தரமானது கலை தீபாவளி மலர்தான்.

●

பி. எம். ஜோஸபின், இலங்கை.

'கலை மங்கை' உருவம் கண்டு, காதல் கொண்டு கனியாத, மனித உள்ளம் எங்கே உண்டு.

●

மு. சங்கரன், ஷோலாப்பூர்.

''என் நன்றி கொன்றார்க்கும்
உய்வுண்டாம் உய்வில்லை
செய் நன்றி கொன்ற மகற்கு'',

அன்புள்ள பாலு சகோதரர்களுக்கு,

வணக்கம்.

தங்கள் தீபாவளி மலரைத் தீபாவளித் திருநாளன்று பெற்று, பெரு மகிழ்ச்சியுற்று ரசித்தேன்.

●

G. ராமநாதன், மலேயா.

கலை மலரைப் படிக்கப் படிக்கச் சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிவது போலிருந்தது. பல துறைகளையும் அடக்கி வெளிவரும் பத்திரிகை கலை ஒன்றுதான். சகல முக்கிய விஷயங்களையும் உள்ளடக்கி வருவதால் இரண்டல்ல இரு நூறு ரூபாய்கள் கூட கொடுக்கலாம்.

●

எஸ். காந்தி ஐயா, லண்டன்.

அழகே உருவான தங்களுடைய மலரைக் கண்டேன். தமிழர்களின் கைவண்ணம் கண்டு களி கொண்டேன். கல்வி கற்பதற்காக தாய் நாட்டைத் துறந்து தூர தேசத்தில் வாழுகின்ற என் போன்றோர்களுக்கு, தமிழ் மனங் கமழும் தங்களுடைய மலர் ஓர் அரிய கலைப் பொக்கிஷம் என்றால் அது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை.

●

''அகிலன்'' சென்னை.

தங்களுடைய தீபாவளி மலர் கண்களுக்கும் விருந்து, கருத்துக்கும் விருந்து. பொழுது போக்கவும் விருந்து. நாட்டிற்கும், மொழிக்கும் உழைக்கும் சிந்தனையாளர்களின் கருத்துக்களையும், படங்களையும் வெளியிட்டு மிக மிகத் தேவையான தொரு புதிய மாற்றத்தைச் செய்திருப்பதற்கு என் மனம் நிறைந்த பாராட்டுதல்கள்.

நல்லவற்றை வரவேற்கும் பண்பு எப்போதுமே தமிழ்ப் பெரு மக்களிடம் உண்டு. அதனால் கலைக்கு மென்மேலும் பேராதரவு பெருகுமென்பது திண்ணம்.

●

முரசொலி. மாறன். எம். ஏ.

அழகில் முழு மதியையும், அமைப்பில் தாஜ் மகாலையும் நிகர்த்த கலை இதழ் கண்டு மகிழாதார் யார்? கலையின் உண்மைக் கண்ணாடியாக இருக்கும் கலை இதழ் மேலும் மேலும் வளர வேண்டுமென்று வாழ்த்துகிறோம்.

அன்புள்ள ஆசிரியருக்கு

வணக்கம்.

அரசாங்கச் செய்திப் படங்களில் தென்னாட்டிற்கு உரிய முக்கியத் துவம் கொடுப்பதில்லை என்று அகில பாரத புத்திரர்களே புலம்பும் அளவிற்கு நிலமை நாளுக்கு நாள் மோசமாகி வருவது அனைவரும் அறிந்ததே. அதே போல் வட நாட்டு சினிமா பத்திரிகைகளிலும் தென்னகத்தின் செய்திகள் அதிக மாக வெளி வருவதில்லை. அப்படி வெளி வந்தாலும், அச் செய்தி களுக்கு நியாயமாக கொடுக்கப்பட வேண்டிய பகுதி ஒதுக்கப் படுவ தில்லை.

சினிமாத் துறையில் உலகிலேயே இந்தியா மூன்றும் இடம் வகிக்கி றது. இதில் சிறந்த வசதிகள் கொண்டது தென்னக படப்பிடிப்பு நிலயங்கள்தான். அப்படிப்பட்ட இடத்திலிருந்து வரும்படங்களுக்கு, வட இந்திய செய்தித்தாள்கள் போதிய விளம்பரம் கொடுப்ப தில்லை. கொடுக்கப்படும் செய்தி களும் நேர்மையுடன் வெளியாவ தில்லை. 24-10-58-ல் வெளி வந்த Filme Fare ல் சிலோன் நண்பர் கேட்ட கேள்விக்கு மமதையான பதில் வந்துள்ளது. கீழே கேள்வி யும் பதிலும்.

கேள்வி :

உலக சினிமா விழாவிற்கு தமிழ்ப் படங்கள் ஏன் தேர்ந்தெடுக்கப்படு வதில்லை?

பதில் :

நமக்கு வேண்டியது பரிசு, தண் டனை அல்ல.

இந்த பதிலில் உள்ள மமதையை தமிழன்பு கொண்ட எவரும் உணரு வர். தாங்கள் வெளியிடும் எந்த குப்பைப் படத்தையும் புகழ, டப்பா சங்கீதத்தைக் கேட்டு மகிழ, ஒரு முட்டாள் கூட்டம் உள்ளது என்ற நினைப்பில் வட நாட்டு முதலாளிகள் எல்லாப் படங்களையும் இங்கு வெளி யிடுகின்றனர். எந்த அளவு இருட் டடிப்பு செய்தாலும் தங்கள் பத்தி ரிகைகள் தென்னகத்தில் விலையா கிறது என்ற எண்ணத்தில், வட இந்திய பத்திரிகையாளர்கள் தென்னகப்படங்களை இழிவு படுத்தி எழுதியுள்ளார்கள். இப்படி இழிவும் இருட்டடிப்பும் செய்தும் கூட இங்குள்ள தமிழன்பு அற்ற அறிவிலிகள், அப்படங்களுக்கும் பத்திரிகைகளுக்கும் அமோக ஆதரவு தருகின்றனர். இதே நிலை நீடித்தால், தென்னகத்தவர்கள் உணர்ச்சி அற்றவர்கள் என்று ஆதார பூர்வமாக நிரூபிக்க வழி ஏற் படும். ஆதலால், இனியாவது தென்னக படமுதலாளிகள் வட இந்திய நடிகர்களுக்கு ஆதரவு காட் டாமல் இருப்பார்களாக.

தென்னக பத்திரிகையாளர்க ளும் வட இந்திய படச் செய்திகளை வெளியிடாமல் இருப்பார்களாக. ரசிகர்கள் வட இந்தியப் படங்க ளுக்கு, மொழி புரியாமல் இருந்தும் கூட,சென்று பணத்தை வீணாக்கும் இழிசெயல் செய்யாது இருப்பார்க ளாக. இப்படிஎல்லாம்வட இந்தியச் சரக்கை உதாசீனம் செய்தால்தான் ஓரளவாவது அவர்கள் கொண் டுள்ள செருக்கு அழிந்தொழியும். இதை உணர்ந்தாவது தென்னக மக்கள் ஒன்று பட்டு மதியாதவரை மதிக்காமல் இருக்கக் கற்றுக்கொள் வார்களாக.

இப்படிக்கு

திருவண்ணாமலை. கு. இராமன்

கம்பாஸிட்டர் தட்சணாமூர்த்தி

கம்பாஸிட்டர் தட்சணாமூர்த்தி தனது 56 வயதையும், 40 ஆண்டுக்கால தொழிலனுபவத்தையும், வெறும் அச்சுக் கோர்க்கும் தொழிலாளியாக மட்டும் கடந்து வரவில்லை; நல்லதொரு தியாகியாகவும் நாட்டின் விடுதலை இயக்கம் அமைத்தஅறப்போர்கோட்டத்திற்கு தானுமொரு முன்னோடும் பிள்ளையாகவுமிருந்து வந்திருக்கிறார்! 1942-ல் நிகழ்ந்த ஆகஸ்டு போராட்டமும், அலிப்பூர் சிறையும், 6 மாத சிறைத் தண்டனையும், அவர் வாழ்க்கையில் மறக்கமுடியாத நிகழ்ச்சிகளாகும்!

40 ஆண்டுகளுக்கு முன்னாலே வேலைக்குப்போன முதல் மாதம் அவருக்குக் கிடைத்த சம்பளம் வெறும் இரண்டே இரண்டு அணாக்கள்தான். 1932-ல் தான் ஒரு நிலையான பிரஸில் வேலைக்குச் சேர்ந்தார். அந்த பிரஸ் இன்று சென்னையிலேயே மிகவும் பிரபல்யமானது. ஒரு பிரபல ஹாஸ்ய பத்திரிகைக் காரியாலயத்தையும் தன் கைத்தே கொண்டது. அதில் தான் அவர் 1932-ல் மாதம் 20 ரூபாய் சம்பளத்தில், நாலைந்து இளம் கம்பாஸிட்டர்களுக்கு ஒரு இன்சார்ஜாகச் சேர்ந்தார்! இன்றோ மாதம் 60 ரூ. சம்பளம் +47½ ரூ. அலவன்ஸ், மற்றும் எல்லா வைத்திய—இன்ஷூரன்ஸ் வசதிகளையும் அவர் பெற்று வருகிறார்!

"எங்கள் முதலாளி தங்கமுங்க; அவரைப் போல இந்தியாவிலேயே தொழிலாளிகளை கவனிப்பவர்கள், வெகுக் குறைவு! இல்லை என்றே கூட சொல்லுவேன்.

அவரிடம் எங்களனைவருக்குமே நல்ல அன்பும் மதிப்பும் மரியாதையும் உண்டு! உயிருள்ள அளவும் அவரிடமே வேலை பார்க்க விரும்புகின்றேன். அதுதான் என் குறிக்கோள்" என்று புன்னகை தவழ கம்பாஸிட்டர் தட்சணாமூர்த்தி சொல்லக் கேட்டு என் உள்ளமே சிலிர்த்து விட்டது! தொழிலாளி—முதலாளி பரஸ்பர உறவின் முறைக்கும்கூட வழக்கம்போல தென்னகம் தான் வழிகாட்டியாக இருக்கிறது என்று எண்ண நம்முள்ளம் பெருமிதமடையத் தான் செய்கிறது.

வாழ்க இந்த தியாகமூர்த்தியான தட்சணாமூர்த்தி!

—'கௌதமன்'

தமிழ் நாட்டின் தலைசிறந்த சித்திரக்காரர்கள்

கலர், பிரஷ் வாங்கும் இடம்

உயர்தர, பெயிண்ட், எனாமல்
வார்னிஷ் முதலியவற்றிற்கு
சென்னையில் சிறந்த இடம்

★

ஸ்டார் மார்க்
பெயிண்டுகள் தயாரிப்பவர்கள்

சாந்தி அண்டு கம்பெனி

வெங்கடாசலமுதலி தெரு, சென்னை-3.

BALU BROS.

மக்கள் கவி

பெண்மை வாழ்க ! —சென்னை, சா. மணியரசன் எம். ஏ.

வண்ணமுகம் சின்னவிழி வளைந்தே எம்பி
வாவென்னும், சிலைப்புருவம் சிவந்து காணும்
கன்னலிதழ் கனியன்ன மெருகு பூண்டு
காதல்தரும், இளங்கன்னம் மின்னி மின்னிப்
புன்னகையாய் மலர்ந்தங்குப் புதுமை காட்டும்,
பொழில்முல்லை பல்கோவை உள்ளம் வாட்டும்,
பொன்னூர்ந்த நின்மேனி, இளமை ஆடும்
பொலிவென்னும் அவளுருவப் பெண்மை வாழ்க !

அலையலையாய்த் திரண்டீண்டி நீண்ட கூந்தல்,
அழகழகாய் அங்கேறி ஆடும் முல்லை,
கலையாகும் மென்னடையை ஒட்டி ஆடை
கலந்தாடிக் கவியாக்கும் வன்மை, காதல்
வலையாகும், கண்மூடிக் குருடன் போல
வாய்மூடி அதில்வீழும் அறிவின் உள்ளம்.
நிலையாய பேரின்பம் நிலைத்து வாழும்
நிலைக்களமாம் நெஞ்சீர்க்கும் பெண்மை வாழ்க !

கையாடும் வளையோசைக் கேற்ற தாளம்
காலாடும் சிலம்பங்கே போட்டு நிற்கும்.
மெய்யாடும் மெல்லாடை காற்றில் துள்ளி
மேலாட என்னுள்ளம் ஆடும் பின்னும்
கையாடும் நிலைக்கேற்ப இடையும் ஆடும்,
கவினாடும், காதாடும் அணிகள் ஆடும்.
மெய்யாட உணர்வாடும் உடலும் ஆடும்
மெல்லியவள் பெண்ணொளியே வாழ்க வாழ்க !

★

கனியாக் கன்னி!

(ஒத்தக்கடை சுந்தரபாண்டியன்)

மருவெதுவு மில்லாத, மதி முகத் தில் !
மணல்போலச், சிறுபருக்கள், முளைக்க, மார்பில்,
இருகமல அரும்புகள், எழும், பருவ,
இளமையுள எழிற்கன்னி எழுதித் தந்த
ஒருமுடங்கல் என்கள்ள உள்ளந் தன்னில்
உணர்ச்சியினைத் தூண்டிடவே உவகையுற்றேன்;
சிறுகடிதந் தெரிவித்த செய்திமட்டும்
சிந்தையினைக் கவர்ந்தின்பத் தேனைக் கொட்டும்

அரங்கம்

இன்றிரவு மணிஇரண்டு அடிக்கும்போது
என்னறையில் அவசியம்நீ இருக்க வேணும்
கன்னல்தனை விரும்புகின்ற கட்டெறும் பாய்க்
காத்திருப்பேன் நின்கன்னம் சுவைப் பதற்கு
தென்றலொடு தேநிலவில் தனிமை கொண்டு
தேனமுதம் கனியிதழில் ஏந்தி நிற்பேன்
என்றிருந்த முடங்கலினை இதழில் வைத்து
இச்சென்று முத்தமிட்டே னுளம் பூரித்து
சில்வண்டு ஙொய்யென்று சீறும் நேரம்
சிறுமங்கை எனைத்தேடிக் கதவி னோரம்
மெல்லவந் தென்மேலே சாய்ந்து கொண்டு
மெதுவான செவ்விதழைக் குவித்து ஏந்த
வெல்லமென அவளுதடை வெறியி னொடு
விதவிதமாய்ச் சுவைத்து வெற்றி கண்டேன்
மல்லுக்கு வந்தவள் போற்றமுவி யவள்
மருவியென் உடல்மீது புரண் டெழுந்தாள்.
குவிந்திருந்த விரிமார்புக் கும்பம் விம்ம
தூக்கிச் சென்று பஞ்சணைமேல் கிடத்தியங்கு
அவள்கேட்ட இன்பமெல்லை காட்டும் போது
இனிச்சகியேன் இதுவேண்டாம் போது மென்று
கடைவிழியில் கண்ணீரைத் தேக்கி நின்றாள்
கடிதத்தில் இதுதானே கேட்டா யென்றேன்
விடையளிக்க முடியாமல் விம்மி, விம்மி
வேதனையாய்க் கூறுகிறாள் வேல் விழியாள்
அப்பாதன் வைப்பாக வைத் திருக்கும்
அழகம்மை தனையழைத்து ஓர் பகலில்
தப்பாக நடந்துகொண்ட சல்லாபத்தை
சண்டாளி நான் கண்டு சபலமுற்று
இப்போது அனுபவித்த இன்னல்தன்னை
இன்பமெனப் பெற்றுவிட்டே னினி மேலென்றும்,
எப்போதும் இதுபற்றி நினைக்க மாட்டேன்
இதுஉறுதி இதுஉறுதி என்றுரைத்தாள்.

குறிப்பு : மலரப் போகும் மங்கை. ஆனாலும் அவள் கனியாத கனி ---உற்றார் உடலுறவு தூய்ப்பதை ஓர் நாள் கண்டதன் பலன், இனந்தெரியாத ஆசையுற்று இன்பம் தேடி, துன்பம் கண்டாள். அவள் மலர்ந்த பின்னும் மண இன் பத்தை வெறுத்தாள். அவள் கதைதான் இக் கவிதை.

மேனாட்டறிஞர் கண்ட தமிழகம்

பண்டைய தமிழகம் மிகப் பரந்தது. இன்று திராவிடக் குழு மொழிகளான தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு, ஆகிய ஐந்து மொழிகளும் பேசப்படும் பரந்த நிலம் முழுவதும் அன்று தமிழே ஆட்சி மொழியாகத் தனித்தியங்கியது. சேர நாட்டில் எட்டாம் நூற்றாண்டுவரை எழுதப் பெற்ற சாசனங்கள் தமிழிலேயே எழுதப் பெற்றுள்ளன.

—ஸ்மித்.

பட்டு மரத்தில் காய்க்கிறது என்று ரோமானியர்கள் எண்ணிக் கொண்டிருந்த காலத்தில் தமிழர்கள் பட்டு நெய்தலிலும் நுண்ணிய கைப்பொருள்கள் செய்வதிலும் சிறந்து விளங்கினர். உலகத்திலேயே சிறந்த வீரர்களாகவும், கைதேர்ந்த மாலுமிகளாகவும் தமிழர்கள் திகழ்ந்தனர். உலகிலே அவர்கள் ஓட்டிவந்த கலங்கள் தங்காத துறைமுகங்களே இல்லை எனலாம். எந்தத் துறைமுகத்திற்கு சென்றாலும், தமிழர்கள் கொண்டுவந்த முத்தும், பவளமும், அகிலும், மிளகும் தான் கொட்டிக் கிடக்கின்றன.

—பிளினி.

திராவிட மொழிகள் ஐந்தனுள் தமிழ்மொழிதான் வேறு எம் மொழியின் தொடர்புமின்றி தனித்தியங்கவல்ல செம்மொழி. உலக மொழிகளாகிய கிரேக்கம், இலத்தீன், எபிரேயம், வடமொழி போன்ற உயர் தனிச் செம்மொழிகளில் தமிழும் ஒன்று. தமிழில் உரைநடைப் பகுதி குறைவாக இருந்தாலும் அதில் உள்ள காவியங்களும் இலக்கியங்களும், உலகில் உள்ள எம் மொழி இலக்கியங்களுக்கும் குறைந்ததல்ல என்று நான் துணிந்து கூறுவேன். தமிழ் மொழியின் இலக்கண அமைப்பு உலகிலேயே சிறந்த அமைப்பு என்றால் அது உண்மை; வெறும் புகழ்ச்சி யில்லை.

—கால்டுவெல்.

நான் முதலில் பாமர மக்களிடம் தொடர்பு கொண்டு மதத்தை பரப்புவதற்காகவே தமிழ் கற்கத் துவங்கினேன். ஆனால் துவக்கத்திலேயே இனிமையும் எளிமையும் கொண்ட தமிழ் மொழி என்னை வெகுவாகக் கவர்ந்து விட்டது. உலகத்தின் தலை சிறந்த மொழி ஒன்றனைக் கற்கின்றோம் என்ற எண்ணம் உதித்தது. அன்றிலிருந்து தமிழைக் கற்பதிலும், தமிழ் இலக்கியங்களை ஆராய்ந்து அவற்றை ஆங்கில மொழியில் மொழி பெயர்ப்பதிலுமே என்னுடைய வாழ்நாளை செலவிடத் துணிந்தேன்.

—போப்.

நம் நாட்டுத் தியாகிகள்



கோவை ஜில்லாவில் சென்னிமலை என்ற ஊரில் 1904-ம் ஆண்டு குமாரசாமி பிறந்தார். உணர்ச்சி மிகுந்த இவர் 16-ம் வயது முதற்கொண்டே அன்னிய ஆடையை வெறுத்து, கதரைத் தவிர வேறு துணியை உடுத்துவதை தவிர்த்தார். 1932-ம் ஆண்டு சத்யாக்கிரகத்தில், மயிலை கச்சேரி ரோட்டில் குமாரசாமி உள்பட பல இளைஞர்கள் கையில் காங்கிரஸ் கொடியுடன் வந்து கொண்டிருந்தனர். அப்போது போலீசாரின் கண்மூடித்தனமான அடி ஒன்று பலமாக குமரன் தலையில் விழவே, அவருடைய உடல் மண்ணிலே சாய்ந்தது. ஆனால் அவர் கரத்திலே இருந்த விடுதலைக் கொடி மட்டும் தரையிலே சாயவில்லை. தன்னுடைய உயிர் மறையும்வரை கொடியை விடாது காத்த குமரனுடைய புகழ் ஓங்குக. அவருடைய தியாகம் வளர்க!

திருச்சி அருகே உள்ள வாகனேரியில் 1881-ம் ஆண்டு பிறந்தார் வ. வெ. சு. அய்யர். தென்னகம் ஈன்ற வீர விளக்கு. கலைக்குன்று. குமுறி வெடித்து ஆறி இறுகிப்போன எரிமலை. இங்கிலாந்தில் வீர சவர்க்கார் முதலியவர்களை 1907-ம்ஆண்டு சந்தித்ததின் விளைவால், மனதில் சுதந்திர உணர்ச்சி உண்டாகி, பாரத அன்னைக்கு பணியாற்ற முன்வந்தார்! திரு.வி. க. விற்குப் பின் அவரது 'தேசபக்தன்' பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்தார். அய்யர் தமிழிலே தனி ஆர்வம் கொண்டவர். ஆங்கிலத்தில் அபார அறிவு படைத்தவர். திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வள்ளுவரை உலகெங்கும் உலவச் செய்துவிட்டார். அய்யரின் வாழ்க்கை புதுமையும், புரட்சியும் நிறைந்தது. எனவே இவரை தென்னகத்தின் சவர்க்கார் என்றால் அது மிகையல்ல.

நம் நாட்டு வீரப் பெண்மணிகள்

விஜயலட்சுமி பண்டிட்

'ஏகலைவன்'

விடுதலை இயக்கம் இழைத்த பல நூறு நன்மைகளில், நாட்டில் மாதரார் வாழ்வில் வீரா வேசத்தையும், தியாக உணர்வையும், உண்டு பண்ணியதும் ஒன்றாகும். பல்லாயிரக்கணக்கான வீராங்கனைகளை விடுதலை இயக்கம் வாவென்றழைத்து, அவர்களுக்குத் தியாகக் கோட்டம் அமைத்துத் தந்தது—!

நாடெங்கனும், விடுதலைக் கிளர்ச்சி பொங்கியெழுந்த நேரத்திலே, தங்களின் இன்ப வாழ்வையும், இளமையையும் மறந்து தாயகம் விடுதலைபெற பிரிட்டானிய வெறியர்கள் காட்டிய 'காரக்கிரகத்தை'க் கனிச்சோலையென்றெண்ணி மகிழ்ந்து, அங்கே சென்று தங்களின் சுதந்திர கீதத்தை சிறைச்சாலையின் சுவர்களிலே செதுக்கி வைத்து விட்டு வந்த செல்வத் திருமகளிரின் எண்ணிக்கை கணக்கிலடங்கா! அவர் தம் வீரச் செயல்களோ ஏட்டிலடங்கா!!

தாயகம் விடுதலை பெற ஒரு குடும்பத்தின் முன்—பின் சந்ததிகளனைவரையுமே ஈடுபடுத்திய உலகின் புதுமை

யான குடும்பம் பண்டித நேருவின் குடும்ப மென்பதை எவருமே மறந்திட முடியாது!

மோதிலால் நேரு, ஜவகர்லால் நேரு, பண்டிட் ரஞ்சிட், விஜயலட்சுமி பண்டிட், கிருஷ்ணபாய் பண்டிட், கமலா நேரு, இந்திரா நேரு, பெரோஸ் காந்தி ஆகிய இவர்களனைவருமே ஒரே குடும்பம்-அளித்த் இணையில்லா நன்முத்துக்கள்தான். நாடு விடுதலை பெற உலகின் எந்தத் தனிக் குடும்பமும் இதுவரை செய்திராத தியாகத்தை பண்டித மோதிலாலின் குடும்பம் இந்தியத் தாய்க்கு அர்ப்பணித்திருப்பதை எவரும் மறந்துவிட முடியாது.

விஜயலட்சுமி பண்டிட், பண்டித நேருவின் சகோதரியார்! இன்றும் இந்தியாவின் புகழை, நன்மதிப்பை நிலைநாட்ட அரும்பாடு பட்டு வரும் மூதாட்டியார்! ஏறத்தாழ தங்களின் அறுபதாவது வயதை எட்டிப்பிடிக்க இருக்கும் அவ்வம்மையார் தன் பதினன்காம் ஆண்டிலிருந்தே விடுதலை இயக்கத்திலிருந்து அதை பெருமைப்படுத்தி வருவதென்பதும், ஒரு தனிப்பட்ட பெண்மணிக்கு 45 ஆண்டுக்கும் மேலான பொது வாழ்வு அனுபவமும், நற் பெயர் எடுக்கும் வாய்ப்பும்அதில்ஏற்படுவதென்பதும் இதுதான் முதல் தடவையாகும்!

விஜயலட்சுமி வீரர் கோட்டம் புகுந்த நேரம் நமது தாயகம் பொலிவிழந்து கிடந்த நேரம். நாட்டில் எங்கும், ஜலியன் வாலாபாக்குகளும், கல்கத்தா இருட்டறை போன்ற கொடுமையின் சாயல்களும் மல்கிக் கிடந்த நேரம்! ஆள்பவர் 'டயர்களாக' காட்சியளித்த நேரம். அந்த நேரத்திலேதான் விஜயலட்சுமியாரை விடுதலை இயக்கமும், சிறைக் கூடமும் வாவென்றழைத்தது! தந்தை மோதிலாலுடன் அன்று அவர் துவக்கிய தியாக வாழ்வு, இன்று தமையன் நேருவின் காலமெல்லாம் கூட சிறந்து பரந்து கிடக்கக் காணுகின்றோம்!

உப்புச் சத்தியாக்கிரகம், ஒத்துழையாமை இயக்கம், ஆகஸ்டு போராட்டம், என்று இப்படி விடுதலை இயக்கம் நடத்திய ஒவ்வொரு போராட்டத்தின் போதும் அம்மையார் தன் குடும்பத்தையும், சொந்த நலனையும் கொஞ்சமும் பாராமல், சிறைக்குள்ளே தள்ளப்பட்டதும் அதை அவர்கள்மகிழ்வு பொங்க ஏற்றதும் எவர் இதயத்தையும் ஆச்சரியத்தால், பெருமிதத்தால் தழுவிக்கொள்ளும் சம்பவமாகும்.

இன்றோ விஜயலட்சுமியார்; இந்தியாவின் பெரும்புகழை இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும், ரஷ்யாவிலும் ஏன் அகில ஐரோப்பாவிலும், கீழ்த் திசை நாடுகளிலும் கூட பரப்பும் பெரும்பணியில் ஈடுபட்டிருக்கிறார்! ஐக்கிய நாடுகளின் சபைக்குத் தலைவரா யிருந்து பெண் இனம் முழுமைக்கும் பெருமை தேடித் தந்த ஒரே பெண்மணியும் இவர் தான்.

விஜயலட்சுமியார் நம்மின் இதயத்திலே இடம் பெற்ற வீராங்கனைகளுள் ஒருவர். சிறந்தவர்கூட! அந்த மாதர் குலதியாகியை இன்னும் நாம் நம்மிடையே பெற்றிருப்பதிலே உள்ளபடியே பெருமை யடைகிறோம்.

வாழ்க வீரவனிதை

விஜயலட்சுமி !!

உங்கள் 'கலை' பொங்கல் மலர்

ஜனவரி மாதக் கலை இதழ் பொங்கல் சிறப்பிதழாக வெளிவரப் போகிறது என்ற செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

★ ஏராளமான வண்ண ஓவியங்கள்!

★ தமிழர் திருநாளான பொங்கலைப் பற்றி அறிஞர்களின் கருத்துக் குவியல்கள்!

★ இன்னும் எண்ணற்ற புதுமைகள்! அத்தனையும் நல்ல எழிலோவியங்கள்!

உங்கள் நண்பர்களுக்குத் தரக்கூடிய நல்ல பொங்கல் பரிசு. ஏராளமான பொருட் செலவில் அதிகமான பக்கங்களுடனும் வண்ணப் படங்களுடனும் தயாராகும் இந்த மலரின்

விலை ரூ. 1 தான்.

இப்பொழுதே பதிவு செய்து கொள்ள வேண்டும்.

சினிமா டைரி - 1959

சினிமாவை பற்றிய சரித்திரம்! நக்ஷத்திரங்களின் இயற்கை வர்ணப் படங்கள். சினிமா சோபித படம்; மற்றும், நடிகர்கள், நடிகைகள், கலைநுணுக்க வல்லுனர்கள், பற்றி முழு விபரங்களுடன், மிக உன்னத முறையில் வெளிவருகிறது.

300 பக்கங்களுக்குமேல்: விலை ரூ. 3/-
(தபால் சிலவு உள்பட ரூ 4/-)

முன் பணம் அனுப்பி பெயரை இப்போதே பதிவு செய்து கொள்ளவும்.

தயாரிப்பாளர்கள், வினியோகஸ்தர்கள், தியேட்டர் முதலாளிகள், நடிக நடிகர்கள் தங்கள் கம்பெனியின் முழு விபரங்களை அனுப்பினால், டைரியில் இலவசமாக பிரசுரிக்கப் படும்.

சுதர்ஸன் பப்ளிகேஷன்ஸ்

20, கல்லுக்காரன் தெரு :: சென்னை-4.





குறள் ஓவியங்கள்

பேராசிரியர்: க. அன்பழகன், எம். ஏ.



“ யான் நோக்குங் காலை நிலன்
நோக்கும் நோக்காக்கால்
தான்நோக்கி மெல்ல நகும் ”

உள்ளத்தைப் பறிகொடுத்த நிலையில், தான் கண்டு விழைந்த மங்கையின் அழகையே பருகி நின்ற இளைஞன், சிறிது தெளிவு பெறுகின்றான். அவளது உள்ளத்தில் தனக்கு இடமுண்டா என்று அறிய முனைகிறான். உள்ளத்தின் குறிப்பு முகத்தில், சிறப்பாகக் கண்ணில் தோன்றுமன்றோ! எனவே கண்களை நோக்குகின்றான்.

குறிப்பறிதலில் தலைவன் வெற்றி கண்டுவிட்டான். தலைவியோ, அவன் கொண்ட காதலை உணர்ந்தே, அவன்மீது காதல் கொண்டவள். எனவே- அவள் அவனைப்பார்த்து, அவன் அழகை வாரி விழுங்குகின்றாள். அதனைத் தலைவன் உணர்கின்றான். தன்னைக் கண்டு தலைவி களிப்பது தலைவனுக்கும் இன்பமாகிவிட்டது. என்றாலும் தலைவி நாணத்தால் தலைவன் தன்னைப் பார்க்கும்போது தலை குனிகிறாள். வேறு திசையில் பார்வையைச் செலுத்துகின்றாள். தலைவன் தனது பார்வையைத் திருப்பி இருப்பான் என்று தோன்றியதும் மெதுவாக அவனை நோக்கி மகிழ்கின்றாள். இதனால் அவளது விருப்பத்தைத் தெளிகின்றான் தலைவன். தலைவன், தலைவியின் குறிப்பறிந்த திறத்தையே இக்குறள்—தலைவனது கூற்றாக (கருத்தாக) விளக்குகின்றது.

நான் அவளை நோக்கும்போது, (நான் பார்ப்பதைக் கண்டு கொண்டு) என்னைப் பாராது குனிந்து நிலத்தை நோக்குவாள்; அதைக்கண்டு (அவளது குறிப்பறியும் வேட்கையால்) நான் வேறு பார்க்கும்போது அவள் என்னைப் பார்த்து மெதுவாகப் புன்முறுவலும் கொள்ளுவாள்.

அந்த புன்முறுவலில் காதல் பயிர் செழிக்கின்றது.



துன்பத்தையன்றி வேறு எதையும் அறியாத அவனுடைய வாழ்விலே, மாளிகை வாசிகளில் பலருக்கு கிடைக்காத ஒரு இன்பம், கோடிகோடியாகக் கொட்டிக் கொடுத்தாலும் கிடைப்பதற்கு அரிதான 'மழலை' இன்பம் மட்டும் இருக்கிறது.

கடும் உழைப்பால் களைத்துச் சோர்ந்து திரும்பியிருக்கும் அவன் எதிரில் அவனுடைய அருமைச் செல்வங்கள் குறு, குறு என்று தளர்நடை பயில்கிறார்கள். "அம்மா! அப்பா!" என்று மழலை பேசுகிறார்கள். மெதுவாக அவனைத் தொட்டுப் பார்க்கிறார்கள்.

அவ்வளவு தான் அவனுடைய சோர்வு எங்கோ ஓடி ஒளிந்து கொள்ளுகிறது. தம் மக்களை இழுத்து அணைத்துக் கொண்ட அவன், அவர்களுடன் கொஞ்சி மகிழத் துவங்குகிறான்.

"மக்கள் மெய்தீண்டல் உடற்கு
இன்பம் மற்று அவர் சொல்
கேட்டல் இன்பம் செவிக்கு"

என்று இதனை வள்ளுவர் அழகிய சொல்லோவிய மாக்கியுள்ளார்.

அவள் ஓர் இளங் கொடி; பருவத்தின் பூரணப் பொலிவும், துடிப்பும் அமைந்த இளம் மங்கை. இந்த சந்தன மேனியாள் ஒருநாள், அருவி ஒன்றிலே நீராடிக் கொண்டிருந்தாள்.

அப்பொழுது நீர் அருந்துவதற்காக அங்கு வந்த கவிரளைய காளை ஒருவன் தற்செயலாக இந்தக் கோமள வல்லியைக் கண்டு விடுகிறான்.

ஆனால் மங்கையோ, சலசலப்பு ஓசை கேட்டதுமே, மறைவிடத்தைத் தேடி ஓடி விடுகிறாள். இனம் தெரியாத ஒருவித குழப்பமும் அச்சமும் அவளைப் பற்றிக் கொள்ளுகின்றன. ஆனால் அவளுடைய கண்கள் மட்டும் அந்த ஆணழகனை மீண்டும் ஒரு முறை பார்த்து விடத் துடிக்கின்றன. இந்த அகப்பொருள்காட்சியே இங்கு அழகோவியமாகியுள்ளது.

முட்டையும் காதலும்

திருக்குறளார். வி. முனுசாமி

முட்டைகளில் இருவகை யுண்டு. பறவைகளைப் பெற்றுத் தருகின்ற முட்டைகள்—நிலத்தில் ஊர்வன முதலியவற்றைப் பெற்றுத்தருகின்ற முட்டைகள்—இங்கு நாம் குறிப்பது முதல்வகையான முட்டைகளைப் பற்றியதே யாகும்.

காதல் உலகம் மிகப் பெரியது. இது அனுபவ உண்மை. உலகம் போற்றும் உத்தமர்களை பெற்றுத் தருகின்ற இல்லற வாழ்வுக்கு வழிகாட்டியாக அமைந்தது காதல் வாழ்க்கைதான் என்பது புதிதானதொரு செய்தியல்ல. இந்த இல்லறம், நடத்தப்படுகின்ற நாயகன், நாயகி ஆகிய இருவர்களின் நல்வாழ்வில்தான் அமைந்து இருக்கிறது.

காமத்துப்பால் என்ற பகுதி, வள்ளுவர் வகுத்த மூன்று பகுதிகளில் மூன்றாவதாகும். காதலர் வாழ்க்கை—இல்லற வாழ்க்கை—என்பதாக இரண்டு பகுதிகளை வைத்துக் கொண்டு ஆசிரியர் காமத்துப்பாலினை செய்திருக்கின்றார். நாயகனுக்கும் நாயகிக்கும் ஒருமித்த உள்ளப் பாங்கு பொதிந்து கிடக்கும் காதல் கட்டுப்பாட்டினை விளக்க வந்த ஆசிரியர், உடம்பும் உயிரும் போல வாழ்கின்றார்கள்; என்பதாக குறிப்பிடுகின்றார். இந்த இடத்தில் விளக்கம் செய்துகொள்ள வேண்டிய உண்மை ஒன்று உண்டு.

''உடம்பும் உயிரும்போல நாயகியும் நானும் நட்பு கொண்டு வாழ்கின்றோம்''—என்பதாக அந்த நாயகன் வாயினால் வள்ளுவனார் சொல்லிக் காட்டுகின்றார்.

''உடம்போடு உயிரிடை
அன்ன மற்றுஅன்ன மடந்தை
யொடு எம்மிடை நட்பு.''

மேலே கண்ட குறட்பா நாயகனால் கூறப்படுவதாகும். நாயகியினை உடம்பாகவும் நாயகனை உயிராகவும் பேசப்படுகின்ற காரணம் என்ன? காதலர்களாக ஆவதற்கு முன்னால் தனித்த ஆணாகவும், தனித்த பெண்ணாகவும், அவர்கள் வாழ்ந்து வந்தனர். இருவரும் தனிப்பட்ட முறையில் உடம்பும், உயிரும் கொண்டவர்களாகத்தான் வாழ்ந்தனர் என்பது வெளிப்படை. என்றாலும் நாயகன் நாயகியர்களாக அவ்விருவரும் இணைக்கப்பட்ட பின்னர், இல்லறத்தில் வாழுங்கால் எம்முறையில் வாழக் கடமைப் பட்டவர்கள் என்பதுதான் அறிந்து கொள்ள வேண்டிய அருமையான கருத்தாகும்.

நாயகியானவுடனேயே அப்பெண்மணி தனது இன்னுயிரை நாயகனிடத்தில் ஒப்படைத்து விடுகின்றாள் என்பது பொருள்.

அதாவது நாயகனுடைய உயிரை காப்பாற்ற வேண்டிய பொறுப்பு, நாயகியினுடையது என்பதாயிற்று. நாயகன் என்ன செய்தான் என்ருல் தனது உடம்பினை நாயகியிடத்தில் ஒப்படைத்து விடுகின்ருன். எனவே நாயகனுடைய உடம்பினை காப்பாற்ற வேண்டிய பொறுப்பு நாயகியுடையது என்பதாயிற்று. ஆதலால் நாயகி உயிரற்ற உடம்பாளுள். நாயகன் உடம்பற்ற உயிராளுன். இவ்விருவரும், உயிரும் உடம்புமான-நாயகியும் நாயகனும்-நடத்துகிற இல்லறம் அவ்வளவு சிறப்பு வாய்ந்ததாகும். எனவேதான் உடம்போடு உயிரிடையன்ன—என்ற தொடரில் மேலே காட்டப்பட்ட குறட்பாவினை ஆரம்பித்தார் ஆசிரியர்.

இல்லற இன்பத்தில் உடம்புக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பினை வைத்துக்கொண்டு இன்ப வாழ்க்கையின் சாயலினை பிரிதோரிடத்தில் ஆசிரியர் வள்ளுவனுர் எங்ஙனம் விளக்குகின்ருர் என்பதனையும் காணுதல் வேண்டும்.

இணைந்து நின்ற இரு காதலர்களின்பிறப்பு, வளர்ப்பு, இடம், இவைகளைச் சிந்தித்துப் பார்க்கின்றபொழுது, யாதொரு சம்மந்தமும் இல்லாதவர்களாகக் காணப்படுகின்றனர். இல்லறமோ,அரிய இணைப்பினை உண்டாக்கித் தந்துவிட்டது. உலக வாழ்க்கையினை விட்டுப் பிரிகின்ற போது நாயகன் நாயகியினையோ அல்லது நாயகி நாயகனையோ விட்டுச் சென்று விடுகின்றனர். அவர்கள் இணைப்பு அவிழ்க்கப்பட்டது சிந்தனைக்கு உரிய இடம்.

உயிரினையும் உடம்பினையும் வைத்துக்கொண்டு மிக அழுத்தமானதொரு காதல் கட்டுப்பாட்டினை பேசி வைத்த ஆசிரியர், இணைப்பு அறுந்து, ஓடிவிடுகின்ற தன்மையுடையதுதான் உடம்புக்குமுள்ள தொடர்பு என்பதனை சுட்டிக் காட்டுகின்ருர்.

முட்டையினுள்ளிருக்கும் பறவைக் குஞ்சுக்கும், அந்த முட்டைக்கும் எவ்வளவு அழுத்தமான, பிரிக்க முடியாத தொடர்பு உண்டு என்பதனை நாம் விளக்கிக் கூறத் தேவையில்லை. அவ்வளவு நெருக்கமான தொடர்பு கொண்ட அதனுள்ளிருக்கும் குஞ்சும் வெவ்வேருகப் பிரிக்கப்பட்டு விடுகின்றன. பறக்கும் பக்குவம் காணப்பட்டதுமே முட்டையை நீக்கி வெளிக் கிளம்பி விடுகிறது அந்தப் பறவை.

"குடம்பை தனித்து ஒழிய
புள் பறந்தற்றே உடம்போடு
உயிரிடை நட்பு."

முற்றிலுமே வெவ்வேறுபட்ட கருத்தினை வைத்துக்கொண்டு நாம் குறித்துக் காட்டிய இரு குறட்பாக்களும் அமைந்திருக்கின்றன. என்ருலும் உடம்புக்கும், உயிருக்கும் உள்ள தொடர்பினை குறிப்பாகக் காட்டி மிக மிக நெருக்கமாக கருதப்படுகின்றவைகளும், பற்றற்றத் தன்மையில் பிரிந்து போதலும் இயல்பேயாகும் என்பது சிந்திக்கப்பட வேண்டியதாயிற்று. வாழ்க இந்த சிந்தனைச் சிற்பி திருவள்ளுவர்!

தமிழ் வளர்க்கும் பெரியார்கள்-7.

மண்ணுலகில் காந்திமகான் வழியும், குன்று
வளமார்ந்த செந்தமிழ்த்தேன் மொழியும் சொந்தக்
கண்ணெனவே எண்ணுபவர் இராம லிங்கம்
கவிவாணர் தம்முடைய மனமோ தங்கம்;
எண்ணரிய கருத்துக்கள் விதைத்துத் தேர்ந்த
இலக்கியத்தைப் பயிராக்கும் உழவர் ஏந்தல்
பண்ணமையும் அஞ்சலியால் காந்தி வாழ்த்துப்
பாமாலை சூட்டியவர் நாமம் வாழி!

எட்டையா நற்புதல்வர் நாட்டு மக்கள்
இதயத்தைக் கவர்கின்ற தமிழ்மு ழக்கும்
பாட்டையா என்று புகழ் படைத்து நிற்கும்
பண்பாளர் நாமக்கல் ராம லிங்கம்;
நாட்டுக்கு நல்லதையே தீட்டும் பேனா
நாயகர்தாம் தீயதெலாம் நயமாய்ச் சுட்டிக்
காட்டற்குக் கலங்காதார் கவிதை வேகம்
களங்[illegible]ரிலாத் தமிழ் மாண்பைக் காத்த மாக!

நாமக்கல் கவிஞர்
வெ.இராமலிங்கம்
பிள்ளை

"அல்லியப்பா"

ஓவியக் கலைஞர்கள்—7

ரூ ப ன் ஸ்

(1577—1640)

பாலு சகோதரர்கள்

கலைஞனின் கரங்களிலே திகழும் வண்ணத் தூரிகை வெறும் அழகையும் தோற்றத்தையும் மட்டும் சிருஷ்டித்து விடுவதோடு நின்று விடுவதில்லை. எண்ணற்ற எண்ணக் குவியல்களின் தூதுவனாக அவைகள் அமைவதை எவரே மறுக்க முடியும்!

இயற்கையின் விநோதங்கள், நாட்டின் புதுமைகள், அங்கு மலிந்து கிடக்கும் நலிவுகள், மனதைக் கவரும் புற வாழ்க்கையின் எண்ணிறந்த இரகசியங்கள், பக்தியின் மேன்மையை விளக்கும் பல நூறு சம்பவங்கள், ஆகிய எதையுமே அவர்கள் விடுவதில்லை. அத்தனையையும் கலைஞனின் வண்ணத் தூரிகை தீட்டி மகிழ்ந்தான பிறகேதான் அயர்வடைகிறது.

பீட்டர்பால் ரூபன்ஸ் - இத்தகைய எண்ணத் தூரிகையைக் கரங்களிலே ஏற்றிருந்த கலைஞன். நினைத்ததைத் தீட்டி மகிழ்ந்த பெருமையும், எண்ணியதை செய்துமுடித்த திருப்தியும், விரும்பியதை ஏற்று மனதார அனுபவித்த மகிழ்ச்சியையும் பெற்றிலங்கியவன்! இந்தத் துறையில் அவனுக்கினை அவனேதான். ஓவியக் கலைக்கே சிகரம் வைத்தாற்போலத் திகழும் ஆன்ட்வெர்ப்பொன் நகரம் தான் இவனையும் வளர்த்தது. பெருமை வாய்ந்த இத்தாலிய ஓவிய முறையும், அமைப்பும் தான் இவனை உலக ஓவியனாக்கிற்று!

மன்னர்களால் போற்றப்படுகின்ற அளவுக்கு, சில அரசர்களின் வெளிநாட்டுத் தூதுவனாக பணியாற்றுகின்ற அளவுக்குப் பெருமை பெற்றிருந்தான் ரூபன்ஸ்! தன்னை வளர்த்த ஆன்ட்வெர்ப் ஞானிகளின் மதாலயத்திலே அவன் தீட்டி வைத்த பொன்னான மத ஓவியம் ("The Desent from the Gross"—(1611-1614) இன்றும் உலகப் பிரசித்தி பெற்றது மட்டுமல்ல; அவனின் ஓவியத் திருப்பணிக்கே அதுதான் சிகரம்! அதற்குப் பிறகு பல நாடுகளிலே, அவன் தீட்டி வைத்த ஓவியங்கள் கணக்கிலடங்கா. பிரெஞ்சு நாட்டின் அரண்மனை அவன் வாழ்க்கைக்கே இன்பமளித்த பொன்னகம். அதனிலும் பல அருமையான வண்ண ஓவியங்களை அந் நாட்டு மன்னர் குலத்திற்கும், மாட்சிமைதங்கிய ராணியாரின் மகிழ்வுக்கும் என அவன் தீட்டி வைத்தான். இன்றும் அவைகள் பிரெஞ்சு நாட்டின் கலைக்கூடத்திலே திகழ்வதைக்



ஓவியர் ரூபன்ஸ்



ரூபன்ஸ் தீட்டிய ஓவியம் 'மூன்று அழகிகள்'

காணலாம். பிரெஞ்சு நாட்டு இளவரசியின் திருமணக் காட்சியை அவன் தீட்டி வைத்தது, ஓவிய இலக்கியத்திற்கே அவனளித்த அன்புப்பரிசாகும். அதுமட்டுமா?லண்டன் பொன்னகரிலே, முதலாம் சார்லஸ் மன்னனிடம் ராஜதூதுவனுகத் தங்க நேரிட்டபோது (1629-30) ரூபன்ஸ் தீட்டிய 'போரும் சமாதானமும்' இன்றும் லண்டனின் தேசீய கலேக் கூடத்திலே பெருமையுற்றுத் திகழ்கிறது.

ரூபன்ஸின் ஓவியத் திருப்பணி ஒப்புயர்வற்றது. அதை விட இனிமையானது அவன் வாழ்க்கை! ரூபன்ஸ் தீட்டிய மத ஓவியங்கள் பெரும்பாலான கிருஸ்துவ மதத்தினராலேயே போற்றப்படுவ தொன்ருகும்! அவனின் 'பாரீஸ் பொன்னகரின் தீர்ப்பு' என்ற பொன்னேவியம் அவனின் கை வண்ணத்தையும், அவன் உள்ளத்தில் பல நாட்களாக மறைந்து கிடந்த அபிலாஷைகளேயும் வெளிப்படுத்துவதாகும். இந்த ஓவியத்தின் அமைப்புக்கு, தன் இளம் மனைவியின் சாயலேயே பெரிதும் பயன்படுத்தி மகிழ்ந்ததாகச் சொல்லப் படுவதும் விந்தைதான்!

ரூபன்ஸிற்கு தன்னேடொத்த சக ஓவியர்களிடமும், தனக்கு வழிகாட்டிகளாக அமைந்த தனக்கு முன்பிருந்த ஓவியர்களிடமும், மதிப்பும் மரியாதையும் அதிகம். உலகின் உயர்ந்த ஓவியர்களான மைக்கேல் ஆஞ்சிலோ, டிடியன் போன்ருரின் ஓவிய அமைப்பை அவன் வியந்து பாராட்டுவான். அதைப்போலவே தன் சமகால ஓவியரிடமும் அவன் அன்பு பூண்டிருந்தான். தான் ஸ்பெயின்நாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்ய நேரிட்டபோது அந்நாட்டில் தலைசிறந்த ஓவியனும் 'வெலாஸ்குவெஸ்' என்ற ஓவியனேச் சந்தித்து அவனுடன் பல நாட்கள் தங்கியிருந்து, தங்கள் எண்ணங்களேயும் முறைகளேயும் அவர்கள் பரிமாறிக் கொண்டார்களாம்!

எனவே ரூபன்ஸ் தன்னேப் பொறுத்தமட்டில் மிக மிகத் திருப்தியான வாழ்க்கையையும் தேவையான—உயர்ந்த—ஓவியத் திருப்பணியையும் செய்து முடித்து மகிழ்ந்தவன்! அந்த பெருமிதத்தால் இன்றும் மக்கள் மத்தியில் மிகச் சிறந்த ஓவியனுக வாழாமல் வாழ்ந்து கொண்டிருப்பவன்!

வாழ்க ரூபன்ஸின் ஓவியப் பெரும்புகழ்!

அடிமை இந்தியாவின் உரிமைப் போராட்டத்தில் திலகர், காந்தியடிகள், சுபாஷ்போஸ் என்ற வழி வழி வந்த தலேவர்களே வாழ்த்தி வாழ்வளித்தது தமிழகம்—தமிழினம். விடுதலே பெற்ற இந்தியாவே! பகைவனே விரட்டிய பாரதமே! தமிழினத்தின் நன்றியை மறப்பாயோ! அதன் தாயகத்தின் உரிமையை மறுப்பாயோ! —ம. பொ. சி.

எட்வர்ட் ஜென்னர்

(1749-1823)

அம்மை குத்துதல்

விஞ்ஞான மேதைகள் உலகின் தெய்வங்கள்! மனித சமுதாயம் வாழ, தங்கள் உயிரை, உழைப்பை - வாழ்வை - அர்ப்பணித்த அவர்களின் சேவை உலகில் வாழும் மனித இதயங்கள் ஒவ்வொன்றிலும் மாசறத் தீட்டி வைக்கப்பட வேண்டியவையாகும்!

கடலின் ஆழத்தைக் கண்டுபிடித்த விஞ்ஞானியுண்டு! மனித எண்ணத்தின் படிவங்களைக் கண்டறிந்த விஞ்ஞானியுமுண்டு! மனித உற்பத்தி, மக்களின் வளர்ச்சி, அவர்களின் தேவை, அவர்களைப் பிடித்தாட்டும் கொடிய நோய்கள்—அது மனித உடலைத் தீண்டும் மார்க்கம், சூழ்நிலை—இத்தகைய நோய்களைப் போக்கும் வழி, ஆகியவைகளைக் கண்டறிவதிலேயே தங்களின் வாழ்நாளைக் கடத்திய மேதைகளுமுண்டு! இவர்களைத்தான் 'உலகின் உயர்ந்த பிரஜைகள்' என்று அறிவுலகம் அழைக்கிறது!

இத்தகைய உயர்ந்த பிரஜைகளில் ஒருவர்தான் எட்வர்ட் ஜென்னர். அம்மை நோயின் கோரத் தாக்குதலினின்றும், மனித சமுதாயத்தையே விடுவித்த மனிதகுல மாணிக்கமவர்! தம்மின் அரிய கண்டுபிடிப்பு பயன் விளைவிக்கும் தன்மையதா என்பதைப் பரிட்சிக்கத் தன்னிளம் குழவியையே முதன் முதல் பயன்படுத்திய பெருந் தியாகியவர்! எனவே தான் அவர் சேவையைப் போற்றுகிறோம்!

நம் உடலில் வைத்தியம் கற்றுக் கொள்ளும் டாக்டர்கள் உண்டு! நம் நல்வாழ்விற்காக மிருகங்களின் உடலகங்களை அறுத்துப் பரிசோதித்து, அதனின்றும் நமக்குப் பயன்படும் பல புதிய உண்மைகளைக் கண்டறியும் விஞ்ஞானிகளும் உண்டு! ஆனால் நமக்காக—நம் நல்வாழ்விற்காக—மனித குலத்தின் எதிர்காலத்திற்காக — தான் பெற்றெடுத்த இளம் மழலையின் உயிரையே பணயம் வைத்து, வெற்றி கண்டவர்களில் இவரேதான் முதல்வர் உயர்ந்தவரும்கூட!!

எட்வர்ட் ஜென்னர்-ஆங்கில நாடு தந்த புதுமையாளன். கி. பி. 1749-ல் 'பெர்க்கிளி' என்ற பெரு நகரில் தோன்றியவர். ஹண்டர் என்ற புகழ் வாய்ந்த பேரறிஞனின் அறிவகம் புகுந்து அங்கே கல்வி பயின்றவர். அம்மை நோயின் கோரத் தாக்குதலைக் காணச் சகியாது அதை அகற்றும் மார்க்கம் கண்டறிய 1776-லிருந்து இடையறுது சுமார் 25 ஆண்டுகள் உழைத்து, இறுதி



யில் உலகமே வியக்கும் வண் ணம் வெற்றி கண்டவர்! சக வைத்தியர்களின் கேலியையும் கிண்டலேயும் தாங்காமல் தாங் கிக் கொண்டு, இறுதியில் அவர்கள் தலை குனியும்படி, உலக நாடுகள் அனைத்துமே, அவர் உயிர் வாழுகின்ற போதே அவர் முறையைப் பயன் படுத்திப் பலனடையக் கண்டார். பிறகே தான் உயிர் விட்டார் ஜென்னர்!

தன்னின் 20 ஆண்டுக் கால நிறையுழைப்பின் பயனுய் கொடிய அம்மை நோய்க்கு ஓர் முற்றுப் புள்ளி வைத்துக் காட்டி விட்டார் ஜென்னர்...! 1796-ல், முதன் முதல் தன் அற் புதக் கண்டுபிடிப்பை உலகிற்கு வெளியிட்டுக் காட்டினுர் ஜென்னர்! தன் கண்டுபிடிப் பின் உண்மைச் சக்தியினையும், பலனையும் கண்டறிய, தன் இளம் மகனுக்கே 'அம்மை குத்தி'க் காட்டி வெற்றி கண்டார்! பல கடின வாதப் பிரதிவாதங்களுக்கும், கேலிக்கும், கிண்டலுக்கும் பிறகு அவரின் முறை உலகனைத் தும் ஏற்றுக் கொள்ளப் பட்டு, பாராட்டப்பட்டது!

உலகையே திணரடித்த நெப்போலியன்; ஆங்கில நாட்டினருக்குப் பயங்கர வை ரியாகத் திகழ்ந்த நெப்போலி யன், ஜென்னரின் மனித குல சேவையைப் பாராட்டிய தோடு (அவர் ஆங்கிலேயராக இருந்தும்) அவரின் அம்மை குத்தும் இயக்கம் தன் நாட்டில் பரவ நல்ல ஆக்க மளித்தானென்ருல் ஜென்ன ரின் சேவை எவ்வளவு அப்பழுக்கற்றது 'என்று எண் ணிப் பாருங்கள்! அதுமட்டுமா? ஜென்னரின் கையெழுத்திட்ட கடிதத்திற்கு உலகெங்கணும், குறிப்பாக நெப்போலியனிடத் தில் எத்தகைய செல்வாக்கு இருந்தது என்பதை எண்ணும் போது அவரின் தியாக உணர்வு நம்மின் இதயத்தையே தழுவிக் கொள்ளுகிறது!! ஆங்கில வீரர் கள் சிலர் பிரான்ஸிலே சிறை பட்டுக் கிடந்தார்கள். மா வீரன் நெப்போலியன் தன் இயக்கத்தை ஆதரிக்கிருன் என் பதை அறிந்த ஜென்னர் அவ னுக்கு ஓர் மனு செய்து கொண் டிருந்தார், அவ்வீரர்களை சிறை விடுக்கும்படி. காதலி ஜோஸப் பைன் மூலமாகச் சென்ற இம் மனு முதலில் மறுக்கப்பட்ட தாயினும், "ஜென்னர் இதை அனுப்பினுர்!" என்று இறுதியில் சொல்லிக் கேட்டதும் மறு கணமே அவர்களைச் சிறைவிடுத் தான் நெப்போலியன் என்ருல், ஜென்னர் எந்த அளவுக்கு உலக மா வீரர்களால் கூட மதிக்கப்பட்டார் என்று எண் ணிப் பாருங்கள்!

இத்தகைய மகா மேதை ஜென்னர், படிப்படியான தன் ஆராய்ச்சியினுல் 1823-ல் தான் இறப்பதற்கு முன்பு வரை 'தன் முறையிலே'யே பல நூதன முன்னேற்ற எண்ணங்களையும், அமைப்புக்களையும் அமைத்துக் காட்டி, அதை உலகின் பொதுச் சொத்தாகவும் ஆக்கி வைத்து விட்டு மறைந்தார்! ஆனுல் அவரின் பெரும் புகழ்; அழிக்க முடியாத மனித குல சேவை; இவ் வையம் உள்ளள வும் நிலைத்து நிற்கத்தான் செய்யும்! வாழ்க ஜென்னரின் சேவை !!

—'நண்பன்,'



உலக மக்களை ரட்சிப்பதற்காக
தாவீதன் நகரத்தில் கிருஸ்துநாத
ராகிய இரட்சகர் பிறந்தார்.

பாலகனாகிய ஏசுநாதர் தன்னுடைய
12-ஆவது வயதில் தேவாலயத்தில்
செவி கொடுத்தும், அவர்களைவின
வியுமிருந்தார். அவருக்கு செவிதந்தி
ருந்த எல்லோரும் அவருடைய ஞான
த்தையும், மறுமொழிகளையும் கேட்டு
அதிசயித்து வியந்தனர்.



நஸரேத் என்ற ஊரில் ஏசுநாதர்
தனது 30 வயது வரையில்
தாய் தந்தையர்களுக்குக்கீழ்ப்
படிந்து பணிபுரிந்து வந்தார்.

சமாரிய இனப் பெண்ணிடம் ஏசு
நாதர் தாகத்திற்காக தண்ணீர் கேட்க
அவள் மறுக்கிறாள். ஆகவே, அவர் இத்
தண்ணீரைக்குடித்தவனும் மறுபடியும்
தாகமடைவான்... ஆனால் நான் கொடுக்கும்
தண்ணீர் நித்திய ஜீவிதம் கொடுக்கும்.

ஏசுநாதர் ஞானஸ்நானம் பெறுகை
யில் பரமண்டலங்கள் அவருக்கு
திறக்கப்பட்டதுமன்றி "என்குமாரன்
இவரே....! இவர் பெயரில் பூரண
பிரியமாய் இருக்கிறேன்" என்ற தேவ
குரலும் ஒலித்தது.

ஒரு சமயம் சைத்தான் ஒன்று ஏசுவை
மலையின் உச்சிக்கு கொண்டு சென்று,
கீழே உள்ள நகரங்களைஎல்லாம்
உனக்குச்சொந்தமாக்குகிறேன்.
நீ என்னை வணங்குகிறாயா என்று
வினவும் காட்சி.



ஏசுநாதர் சிமோனென்ற செம்படவரைப்
பார்த்து, மீன்பிடிக்க உங்கள்வலை
களை வீசுங்கள் என்றார். இரவெல்லாம்
பிரயாசப்பட்டிருந்தும் ஒன்றும் அகப்பட
வில்லை. உமது வார்த்தையின்படி செய்வோம்
என்று வலைவீசியவுடன் ஏராளமான மீன்கள்
சிக்கின.

ஏசுநாதரும் வாவென்று கூறவே
இராயப்பர் படகினின்றும் இறங்கி
சமுத்திரத்தில் நடந்து செல்ல உடனே
தண்ணீரில் மூழ்கவும் தொடங்கினார்
இதையறிந்த ஏசுநாதர் தன்கரத்தை
நீட்டி அவரைப்பிடித்து காப்பாற்றினார்

எருசலேனில் பிரவேசித்தம் ஏசுவை திரளான மக்கள் தங்கள் ஆடை களை வழியிலே விரித்து வரவேற்று 'ஓசான்ன' என்று ஆர்ப்பரித் தார்கள்.

தேவாலயத்தில் வியாபாரிகள் விற்பனை செய்வதைக் கண்டி த்து "என் பிதாவின் ஆலயத்தை வியாபார வீடாகச் செய்யலாகாது" என்று கூறுகிறார்.

ஏசுநாதர் பாடுபேவதற்கு முந்தின இரவு அவரும், அவருடைய 12 சீடர்களும் கடைசி இராப்போ சனத்திற்கு பந்தியில் அமர்ந்தார் கள்.

ஏசுநாதர் ஜெத்செமனி என்னும் பூங்காவில்தான் அனுபவிக்கப் போகின்ற பாடுகளை முன்கூட்டிய சம்மனசு மூலம் அறிந்து இரத்த வேர்வையை சிந்துகிறார்.

ஏசுநாதர் நீதிமானென்று 'பிலாத்து'
அரசனுக்குத் தெரிந்தும் அவரைக்
கொல்ல மனமின்றி கற்றூணில்
கட்டியடிக்கின்றார்



தான் தேவனால் அனுப்பப்பட்ட தேவ
குமாரன் என்று கூறியது யூதர்களுக்குச்
சம்மதமாகவில்லையாதலால், அவர்
கள் ஏசுவை தேவதுவேசி என்றுமுடிவு
செய்து சிலுவையில் அறைந்தார்கள்

ஏசுநாதர் இறந்த மூன்றும் நாள்
மீண்டும் உயிர் பெற்று ஜோதி
வடிவமானார். இக்காட்சியைக்
கண்ட காவலர்கள் அதிசயித்து
நடுங்கினர்

இன்றும் எல்லோர் இதயத்
திலும் வாழும் ஏசுநாதரின்
அறிவுரைகளைப் பின்பற்றி
மக்கள் வாழ்வார்களாக.



ஆசிரியர் கருமுத்து மாணிக்க வாசகனர்

தமிழ் நாட்டின் தற்கால பாரி வள்ளல் கருமுத்து தியாக ராச செட்டியாரின் தவப்புதல்வர். தமிழ் நாடு என்று நம் நாட்டிற்குப் பெயர் இடப்படாவிட்டாலும் 'தமிழ் நாடு' என்ற பெயரிலே அழகிய நாள் இதழ் ஒன்றை நடத்தி வரும் தமிழ்ச் சான்ருேர். கலைச் சொற்களைக் கூட தமிழ்ச் சொற்களாகவே வெளியிடும் இந்த ஒப்பற்ற ஏட்டின் மூலம் திரு. மாணிக்க வாசகனர் தமிழிற்கும், தமிழ் மக்களுக்கும் சேவை செய்து வருகிருர்.

ஆசிரியர் ராம்னுத்

திரையுலகச் செய்திகளை திரட்டித் தருவதற்காக பதினுறு ஆண்டுகளுக்கு முன் பேசும் படம் என்ற அழகிய சினிமா ஏடு கண்ட மேலாளர்.

தமிழ் நாட்டு மக்களின் இதயத்தில் இடம் பெற்றிருக்கின்ற ஐயரவர்கள் கன்னல் தமிழில் அல்லாது, தெலுங்கிலும் ஒரு பத்திரிகை நடத்துவதோடு, அழகு மிகுந்த பல புத்தகங்களையும் வெளியிட்டு வருகிருர்.



ஆசிரியர் மு. கருணுநிதி.

ஆரூர் தந்த அடலேறு. திரைக்கதை வசனம் தீட்டுவதில் தனக்கென ஒரு புதுப் பாதை அமைத்துக் கொண்ட எழுத்து மன்னன். கேளாரும் வேட்ப மொழியும் நல்ல சொல்லேருழவன். மாணவருலகத்திற்கு மகத்தான சேவை செய்வதற்காக, முரசொலிக்குப் பின் முத்தாரம் என்ற அழகிய இலக்கிய ஏட்டை நடத்தி வரும் மறு மலர்ச்சி எழுத்தாளர்.

கல்லிலே வடித்த கட்டழகு

தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான்

ஏன் அந்த அழகும் செல்வமும் நிறைந்த லக்ஷ்மிக்கு வாய்த்த மணவாளன் விஷ்ணுவும் நல்ல கருப்பில் அழகன் தானே. லக்ஷிய புருஷனுக காவியத்தில் உருவாயிருக்கும் ராமன் நீலமேக ஸ்யாமள வண்ணன், ஏன்? காதற் கடவுள் காமனும், கண்டோர் மயங்கும் கட்டழகு படைத்த அந்த அருச்சுனனும்—நல்ல கறுப்பு நிறத்தவர் என்று தானே நமது காப்பியங்கள் கூறுகின்றன. ஆதலால்தானே என்னவோ, அழகு, எழில், வனப்பு, கவர்ச்சியை எல்லாம் கலை உருவில் காட்ட நம் நாட்டுச் சிற்பிகள் கருங்கல்லையே தேடி எடுத்திருக்கிருர்கள். வெள்ளை சலவைக் கல்லில் உருவாகும் சிலைகளைவிட, நல்ல கருங்கல்லில் உருவாகும் சிலைகள் மிகவும் அழகு வாய்ந்தவை என்பதை யாரும் எளிதிலேயே தெரிந்து கொள்ளலாமே!

அழகு நிறைந்த பெண்களை அருங்கலை விநோதர்களாக சிற்பிகள் நல்ல சிலை வடிவில் எத்தனை எத்தனையோ கோணங்களில் உருவாக்கி யிருக்கிருர்கள். அப்படிப்பட்ட அழகி ஒருத்தியின் உருவத்தையே பார்க்கிறீர்கள் பக்கத்திலே. 'பொங்கி வரும் நிலவினிலே கனவிது கண்டேன்—வயது பதினுறு இருக்கும் இள வயது மங்கை' என்று அன்று பாரதி பாடினனே, அந்த அழகி இவள் தான் போலும். எடுப்பான முகமும் அதற்கேற்ற முழுமதியன்ன முகமும், வளிப்பான உடலும், ஆலிலையன்ன வயிறும் உடையவளாய் காண்பவர் உள்ளத்தில் ஒரு உணர்ச்சியை எழுப்புகிருள். வலக்கையில் தாமரை, இடக்கையை தொங்க விடுவதிலே ஒரு லாவகம், தலையை முடித்துக் கொண்டை போட்டுக் கொள்வதிலே ஒரு ஒய்யாரம் எல்லாம் அவள் அழகை இன்னும் அழகு செய்கின்றன. அவள் அணிந்திருக்கும் அணிகளும் பணிகளும் அவள் பெரிய இடத்துப் பெண் என்பதைப் பறை சாற்றுகின்றன. இந்த அழகே உருவாம் அணங்கு, வட ஆற்காடு மாவட்டத்திலே தலைநகரான வேலூருக்கு மேற்கே பதினைந்து மைல் தொலைவில் உள்ள பள்ளி கொண்டை என்ற ஊரிலே, வட அரங்கன் சந்நிதியிலே, கேட்பாரற்று ஒரு ஒதுக்குபுறமான மூலையிலே நின்று கொண்டிருக்கிருள். சூடிக் கொடுத்த சுடர்க் கொடியான ஆண்டாளின் திருஉருவமாக இருக்கலாம். இருட்டறையில் ஒதுங்கி நாணி நிற்கும் நங்கையை கலை உலகத்திற்கு அறிமுகப் படுத்துவதன் மூலமாக, அமைதியான அழகு என்ன என்பதை கலா ரஸிகர்கள் தெரிந்து கொள்ளலாம் அல்லவா?

எழிலுக்கு விளக்கம் கூறுகின்ற போது தாமரை மலரை மலரச் செய்யும் சூரிய ஒளியைப் போல

எது மனிதனது உள்ளத்தை விரியச் செய்கிறதோ அதுதான் எழில் என்று கூறினேன். அந்த எழிலாடும் ஏந்திழை ஒருத்தியையே பார்க்கிறீர்கள் பக்கத்திலே. ஒரு அரசிளங்குமரியாக இவர் இருக்க வேண்டும். தலை அலங்காரம், உடை அலங்காரம் எல்லாம் பிரமாதமாக இருக்கிறது. அதிலும் நடனம் ஆடப் புறப்படும் நிலையில் ஆடம்பரமாகவே அணிகள் அணிந்து, சிலம்பு புலம்ப மேகலை புரள அவள் அடி பெயர்த்து நிற்கிறுள். கண்களிலே ஒளி வீசும் அழகு, முகத்திலே இருக்கும் சாந்தி, மார்பிலே தவழும் முத்தாரம் எல்லாம் இவளை ஓர் உயிர் பெற்று உலவும் பாவையாகவே காட்டுகின்றன. நம் உள்ளம் எல்லாம் மலர்கிறது இவள் எழிலைக் கண்டு. நம் உடல் எல்லாம் இழைகிறது இவள் நடையைக் கண்டு. இந்த எழிலாடும் ஏந்திழை இருப்பது திருநெல்வேலியிலே நெலலையபபர் கோயிலிலே. நாயக்க மன்னர்கள் கட்டிய கோயிலில் பெண் வடிவங்களுக்கு — அழகுத் தெய்வங்களுக்கு — குறை ஏது?

இந்த வனப்பு இருக்கிறதே — அது சொல்லால் விளக்க முடியாதது ஒன்று. ஆடையும் அணியும் அதிகமாக அணிந்தால் வனப்பை விளக்காது, மறைக்கவே செய்யும். வனிதையர் வனப்பை அவர்கள் அங்கங்களிலேதான் காண வேண்டும் என்றாலும் — ஒவ்வொரு அங்கங்கமாக பார்த்துப் பார்த்து அளவிட்டுவிட முடியாது. ஒவ்வொரு அங்கமும் லக்ஷணமாக அமைந்து அந்த முழு உருவத்திற்கும் ஒரு அழகு தரவேண்டும். அப்படி அமையும் அழகே மனிதனது உள்ளத்தை (இரும்பைக் காந்தம் தம் பக்கம் இழுப்பதுபோல்)இழுக்கும் வனப்பாகும். அவ்விதம் நிறைந்த வனப்புடைய வனிதையரையே ஒருவருக்கு இருவராய் பார்க்கிறீர்கள் பக்கத்தில் உள்ள படத்தில். இருவரும் தன்னையும் தாங்க இயலாத நிலையிலும் துயில் ஒன்றைத் தாங்கி நிற்கிறுர்கள். ஒருத்தியின் பின்னே ஒருத்தி ஒளியும் நிலையில்தான் எவ்வளவு நேர்த்தியாக இருக்கிறது. நேரே நம்மைப் பார்க்காமல், ஒருக்கலாக பார்ப்பதுபோல் நடிப்பதில் தான் எத்தனை வனப்பு! இந்த வனப்புடைய வனிதையரைக் காண தஞ்சைக் தலைக்கூடத்திற்கே போகவேணும். அங்கு சிற்ப வடிவில் நடக்கும் நாடகம்



" கவர்ச்சி தரும் கன்னி "
ஸ்ரீரங்கம்

ஒன்றையும் காணவேணும். பிக்ஷா டனருகப் புறப்படும் சிவனைத் தொடர்ந்து செல்லும் ஏழு ரிஷி பத்தினிகளில் இருவரே இவர்கள். கதையை மறக்கலாம். இக் கட்டழகிகளின் வனப்பை மறக்க இயலாது. அந்த வனப்பு உங்கள் உள்ளங்களை அவர்கள் பக்கம் காந்தம் இழுப்பதுபோல கவர்ந்தால் அதற்கு நான் பொறுப்பாளியே அல்ல. உங்கள் உள்ளத்தை இரும்பாக விடாமல் கல்லாக மாற்றிக் கொள்ளுங்கள். அதுவே அங்கிருந்து தப்பி வெளியே வர வழி.

அழகு, எழில், வனப்பு இவைகளினின்றும் மனிதன் கொஞ்சம் முயன்ருனுல் தப்பித்துக் கொள்ளலாம். ஆனுல் இந்தக் கவர்ச்சி என்ற அம்சம் இருக்கிறதே அதிலிருந்து தப்புவது எளிதல்ல. விட்டிலை தன் பக்கம் இழுத்து அதனை அதன் காலடியிலே விழுந்து மயங்கச் செய்யும் சுடர் விளக்கினைப் போலவே இந்தப் பெண்ணின் கவர்ச்சி மனிதனை தன் பக்கவில் இழுத்து மடியச் செய்கிறது. அந்தக் கவர்ச்சி அந்தப் பெண்ணின் கண்ணின் ஒளியில் இருக்கலாம்; அதரங்களில் தழுவும் புன்னகையில் இருக்கலாம்; விம்மிப் புடைத்த தனங்களில் இருக்கலாம்; இல்லை துவளும் இடையில் இருக்கலாம். எப்படியோ இந்தக் கவர்ச்சியில் சிக்குண்டு தன் வயமிழந்து விடுகிருன் மனிதன். அப்படி மனிதனுக்கு கவர்ச்சி தரும் கன்னி ஒருத்தியையே காண்கிறீர்கள் பக்த்திலே. ஏதோ வீணை மீட்டி இன்னிசை பாடத்தான் அவள் எழுந்து நிற்கிருள். அளகபாரம் ஒரு பக்கம் இழுக்க, அவள் தலை சாய்ந்து ஒயிலாக நிற்கிருள். உடலோ இன்னிசைக் கேற்பத் துவண்டு கொடுக்கிறது. இத்தனைக்கும் இடையில்,

யான்நோக்கும் காலை நிலம்
நோக்கும் நோக்காக்கால்
தான்நோக்கி மெல்ல நகும்

என்று அன்று வள்ளுவர் சொன்ருரே அந்த அணங்கே உயிர் பெற்று வந்தவள் போல் குனிந்த தலை நிமிராமலேயே புன்னகை புரிகிருள். அந்தப் புன்னகைக்கே அடிமையாகிருன், கவர்ச்சியுறும் மனிதன். அவ்வளவுதான்! இனி மேல் அவன் அவளது தாசானுதாசன்தான். இந்தக் கன்னி, கண்ணனைச் சுற்றும் கோபியரில் ஒருத்தியாக ஸ்ரீரங்கத்தில் வேணுகோபாலனைச் சுற்றி கட்டிய மண்டபத்தில் நின்றுக் கொண்டிருக்கிருள். கவர்ச்சி தரும் கன்னியே கோபாலனது இசையில் கவர்ச்சி உருகிருள் என்பது கற்பனை.

இப்படிக் கல்லிலே வடிக்கும் கட்டழகை — நான்கு கோணத்திலே நான்கு பெண்கள் — ஆம்! கருங்கல்லில் உருவான சிற்ப வடிவங்கள் மூலம் காண முடிகிறது நம்மால். தமிழ்நாட்டில் சிற்பக் கலை அன்று எவ்வளவு சிறந்திருந்தது என்பதற்கு இச் சிலா உருவங்களும், இதைப்போல் தமிழ் நாடு முழுவதும் நிறைந்திருக்கும் எண்ணிறந்த வடிவங்களுமே தக்க சான்று. (முற்றும்)

கேள்வி :— தமிழர் சமூகத்தைப் பொறுத்தவரை என்ன சீர்திருத்தம் வேண்டும் என்று விரும்புகிறீர்கள்?

பதில் :— பேச்சாளர்கள் எல்லாம் செயலாளர்களாக மாறவேண்டிய சீர்திருத்தம் முதலில் தேவை. காரணம் மலையளவு பேசுவதைவிட கடுகளவு செய்வது நல்லது என்பது எனது கருத்து.

—கி. ஆ. பெ. விசுவநாதம்.

தமிழ் - ஒரு வான விளக்கு!

மயிலை சண்முகசுந்தரம்

(சென்ற மாதத் தொடர்ச்சி)

மூவாயிரம் ஆண்டுகளாக தமிழுக்கு எவ்வளவோ ஆபத்துக்கள் ஏற்பட்டு இருக்கின்றன! பேச்சு வழக்கற்ற சம்ஸ்கிருதம் தமிழோடு மோதியிருக்கிறது. ஆனாலும் சிதைந்திருக்கிறது. படையெடுப்பாளரின் ஒவ்வொரு மொழியும், நாகரிகமும், நம் தாய்மொழியோடு மோதியெழுந்திருக்கிறது. ஆனாலும் தமிழ் பிழைத்திருக்கிறது! பாரசீகமும், கிரேக்கமும், முகலாயமும், டச்சும், போர்ச்சுகலும், பிரெஞ்சும், ஆங்கிலமும், இந்தியும் தமிழோடு மோதியெழுந்திருக்கின்றன; என்றாலும் தமிழ் இன்றும் வெற்றிக் களிப்புடன் தான் பவனி வந்துகொண்டிருக்கிறது. அதுதான் அதற்குள்ள தனிச் சிறப்பு. உலகில் எம்மொழிக்குமில்லாத சிறப்புச் செல்வமும் அதுதான்.

உலகில், ஒரு நாட்டை அழித்தொழித்து அதன் எல்லைகளை அடிமை கொள்ள வேண்டுமென்றால், முதலில் சிதைக்கப்பட வேண்டியது அந்நாட்டின் மொழிதான்; அது சிதைந்தால், அந்நாடு தானாக அழிந்துவிடும் – வீழ்ந்து விடும் – இந்த இலக்கணம் அறிந்தவர்கள் உலகின் அத்தனை படையெடுப்பாளர்களும். பிரிட்டானியா நாடு ரோமானியர்களால் அடிமை கொள்ளப்பட்டபோது ரோமானிய நாகரிகமும், மொழியுந்தான் அங்கே பரவியது. அதைப்போலத்தான் நம்மிந்திய துணைக் கண்டமும், பல்வேறு மொழிகளால்] நிரம்பி வழிந்திருக்கிறது! ஆரியர்கள் படையெடுத்த போது, ஆரியம்–பாரசீகர்களும், கிரேக்கர்களும் வந்த போது பாரசீகமும், கிரேக்கமும் – முகலாயர் வந்தபோது முகலாயம், டச்சுக்காரரும், போர்த்துக்கீஸியரும், பிரெஞ்சுக்காரரும், வெள்ளையரும் வந்த போது முறையே டச்சு மொழியும், போர்த்துக்கீஸிய மொழியும், பிரெஞ்சு மொழியும், ஆங்கில மொழியும்-இறுதியாக வடவர் ஆளும்போது இந்தி மொழியும்-நம்மைப் பல்வேறு கோணங்களிலே யிருந்தும் தாக்கியழித்த வண்ணம்தான் வந்திருக்கிறது என்றாலும், நாமும் நமதருமைத் தமிழும் அழியவில்லை. ஒரு நாட்டைச் சிதைத்தொழிக்க, முதலில் அந்நாட்டின் மொழியைக் கொன்றுவிடு, (If you want to kill a nation, first kill its Language) என்ற தந்திர வாக்கியம் தமிழகத்தைப் பொறுத்த மட்டில் பலிக்கவில்லை! எனவே எவ்வளவு மாண்புடையது தமிழ் மொழி என்று எண்ணிப் பாருங்கள்.

இக்காரணம் பற்றித்தான்,

"பல்லுயிரும், பலவுலகும், படைத்தளித்துத்
துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள் முன்
இருந்தபடி
இருப்பதுபோல,
கன்னடமும், களிதெலுங்கும்,
கவின்மலையாளமும் துளுவும்
உன்னுதரத்துதித் தெழுந்தே
ஒன்றுபல வாயிடினும்

"ஆரியம்போல் உலகவழக்கழிந்
தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து
செயல்மறந்து வாழ்த்ததுமே"

என்று பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள் வாயார வாழ்த்தியிருக்கிறார்கள்!

ஆக, தமிழ் மொழியை நாம் வாழ்த்தி, போற்றி வணங்குவது நமது கடமை என்பது ஒருபுறமிருக்க, மேலைநாட்டார் போற்றி வாழ்த்தியிருப்பதை நம்மாலே மறக்க முடியவில்லை! தமிழுக்கு அழியாத புகழ் தேடுவது அவர்கள் தந்த அமுத வாக்கியங்கள் தான்! அவை அனைத்தையும் இங்கு ஒரே அடியாக தொகுத்துக் குறிப்பிடுவது இயலாத காரியம்தான். ஆனாலும், தமிழை வாழ்த்திய மேலைநாட்டுப் பேரறிஞர்களின் பெயர்களையாவது நாம் தெரிந்து கொள்ளுதல் மிக மிக அவசியமாகும்!

தமிழ் வாழ்த்திய இத்தகைய பேரறிஞர்களான, கால்டுவெல், தெமர்லே, ஸ்மித், பார்னெட் பெர்சிவெல், ரேனே, ராபர்ட்ஸன், ஜி. யூ. போப், வின்சன் போன்ற பெரியார்களின் பெயர்களை நம்மாலே மறக்க முடியவில்லை.

திருக்குறளும், சிலப்பதிகாரமும், சங்க நூல்களும், தொல்காப்பியமும் நம்மிடையே இருக்கும் வரையில், தமிழின் பெருமையும், தமிழமுதின் இனிமையும் எவராலும் மாற்றிவிட முடியாது. ஆனால், இவைகளை வைத்தே இனியும் புகழ் பாடிக் கொண்டிருப்பதைவிட, மேலும் மேலும் புதிய இலக்கியங்களை உருவாக்குவதும் நமது நீங்காத கடமையும் பிறப்புரிமையுமாகும். புதிய தமிழ் இலக்கியங்கள் மேலும் மேலும் உருவாக வகைசெய்தல் வேண்டும். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் வரிகள் குறிப்பிடுவதைப் போல, "எளிய நடையில் தமிழ் நூல் எழுதிடவும் வேண்டும், இலக்கண நூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்" – "செந்தமிழைச் செழுந் தமிழாய்ச் செய்வதும் வேண்டும். எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லை யென்றால் இங்குள்ள எல்லாரும் நாணிடவும் வேண்டும்" என்ற உயர் பொருளை மனதில் கொண்டு தமிழ்ப் பணியாற்ற வேண்டும் நாமெல்லாம். அப்போதுதான் 'தமிழ்ப்புவி' தனிப் புவியாகும்! தமிழர் வாழ்வு மணங்கமழ்ந்ததாகும்! (முற்றும்)

கம்பர் தமிழ் மொழிக்குக் கலைக் கோயில் கட்டியவர். இளங்கோ தமிழகத் திற்கே ஒரு கலைக் கோயில் கட்டியவர். வள்ளுவர் தமிழ் மக்களின் பண்புக்கு ஒரு கலைக் கோயில் கட்டியவர். கம்பராமாயணத்தை விடத் தமிழ் சுவையுடையதும் சிலப்பதிகாரத்தை விட தமிழகத்தைப் படம் பிடித்துக் காட்டுவதும் திருக்குறளைப் போன்று தமிழன் பண்பை நிலை நிறுத்துவதுமான இலக்கியங்கள் வேறில்லை. பொதுவாக இம் மூவரும் தமிழ் மக்களாற் போற்றப்பட வேண்டியவர்களே. ஆயினும் மக்கள் ஒழுக்கத்தை வலியுறுத்தி உலகிற்கு மறை தந்துதவிய வள்ளுவனைத் தமிழ் மக்களே யன்றி உலகப் பொது மக்கள் அனைவருமே அதிகம் போற்றக் கடமைப்பட்டவர்கள்.

—கி. ஆ. பெ. விசுவநாதம்.

சினிமாவின் கதை

பா. கலைச்செழியன்.

லூமிரி சகோதரர்கள் (Lumiere Brothers) என்பவர்தான் முதன் முதலில் சினிமாப் படத்துடன் இசைத்தட்டை இயக்க வைத்து முதன் முதலில் பேசும் படத்தை உருவாக்குவதற்கான வழியில் ஈடுபட்டனர். எனவே பேசும் படத்திற்கான கால் கோள் விழா நடத்தியது லூமிரி சகோதரர்களே யாகும். டாக்கியின் முதல் தந்தையர் என்று கூட கூறலாம். பிரஞ்சு தேசத்தில் முதன் முதலாக சலனப் படம் காட்டப்பட்டது 1895ம் ஆண்டில்தான். பிறகு லூமிரி சகோதரர்களின் முயற்சியால் பிரான்ஸில் சினிமாப் படம் பார்க்கும் கொட்டகைகள் அநேகம் தோன்றியபோதிலும், பின்னர் ஏற்பட்ட ஒரு சம்பவத்தால் பிரான்ஸ் தேசத்தில் சினிமாப் படங்களை தடை செய்ய வேண்டியதாயிற்று. 1897ம் ஆண்டில் பாரிசிலுள்ள சாரிட்டி மார்க்கெட் என்ற இடத்தில் சினிமாப் படம் காண்பிக்கும் வேளையில் எதிர்பாராத விதமாக தீப்பிடித்துக் கொண்டு ஏராளமான சேதம் விளைந்தது. சுமார் நூறு பேர் தீ விபத்தில் மாண்டனர். சாரிட்டி மார்க்கெட்டே அழிந்து விட்டது. எனவே சினிமா என்றாலே மக்களிடையே எங்கே தீப்பிடித்துக் கொள்ளுமோ என்ற கிலி ஏற்பட்டு விட்டது. அது மட்டுமின்றி திரையிலே தோன்றும் உருவங்களை சாத்தானின் கூத்து என்று எண்ணினர். சினிமாவை வெறுப்பதன் அறிகுறியாக கருப்புடை அணிந்தனர்.

இந்த நிகழ்ச்சியின் விளைவால் பிரான்ஸில் சினிமாப் படம் காண்பிப்பதே ஒரு குற்றமென்ற வகையில் தடைச் சட்டம் ஏற்பட்டு விட்டது. மற்றைய நாடுகளிலும் தடைகளேற்படாவிடினும், சினிமாவின் வளர்ச்சி மந்தமாகவே வளர ஆரம்பித்தது. மேலும் ஒலிப் படங்கள் வெளி வருவதற்கான வகையில் சலனப் படங்களின் கதை அமைப்பு அக் காலத்தில் தோன்றவில்லை யென்றே கூறலாம். ஏனெனில் அப்போது வெளி வந்துள்ள படங்களில் ஒருகதையை மையமாக வைத்துப் படங்கள் உற்பத்திச் செய்யப்பட வில்லை. வெறும் தந்திரக் காட்சிகளையும், திடுக்கிடும் சம்பவங்களையுமே காண்பித்துக் கொண்டிருந்தனர். ஓடும் ரயில், வேகமாகச் செல்லும் குதிரை, சாத்தானின் கூத்து, அதிசயக் காட்சிகள் ஆகியவைகளே சினிமாப் படத்தில் வரும் நிகழ்ச்சிகளாக இருந்தன. படம் பார்ப்பவர்களுக்கு திரையில் உருவங்கள் குதிப்பதைப் பார்ப்பதே ஒரு வேடிக்கையாகவும், அதிசயமாகவுமிருந்தது. ஆகவே கதையைப் பற்றிய அக்கரையில்லாமலிருந்தது. அதுமட்டுமின்றி பதினைந்து நிமிடங்களுக்கு மேல் படம் ஓடினால் ஏதோ கனத்தைச் சுமப்பது போன்ற, பொறுமையில்லாதிருந்த காலம் அது.

ஜியார்ஜஸ் மேலிஸ் (Georges-Melies) என்பவர் 'சாத்தானின்

அதி விரைவில் வெளிவரவிருக்கும் டி. என். ஆர். புரொடக்ஷன்ஸாரின் "மின்னல் விரலில்" சந்தியா ரஞ்சனைக் கொஞ்சும் ஓர் உல்லாசக் காட்சி.

குறும்பு', 'சந்திரனுக்கு யாத்திரை', 'துருவ வெற்றி' என்பது போன்ற துணுக்குகள் கொண்ட துண்டுப் படங்களை எடுத்து வெளியிட்டார். பின்னர் தான் ஒரு கதையை வைத்து முழுப் படமாக வெளிவரும் நிலை பிறந்தது. 1898ம் ஆண்டில் இதற்கான முயற்சிகள் தொடங்கிய போதிலும், 1903ம் ஆண்டில் தான் முழு நீளப் படக் கதை வெளிவருவதற்கு சாத்தியமாயிற்று. ஏதாவது ஒரு ஓடும் பொருளை மையமாக வைத்துப் பின்னப்பட்ட கதை வேண்டுமல்லவா? ஆகவே முதன் முதலில் வெளியான படக் கதை யானது 'ரயிலில் பெரிய களவு' (The Great Train-Robbery) என்ற பெயரில், 1903ம் ஆண்டில் எட்வின்ஸ். எஸ். போர்ட்டர் என்பவர் படமாக வெளியிட்டார்.

'பெரில்ஸ் ஆப் பாலின்ஸ்' 'ஓநாயின் கூட்டம்' போன்ற திடுக்கிடும் சம்பவங்கள் கொண்ட வீர தீரச் செயல்கள் கொண்ட படங்கள் 'ரயில் கொள்ளை'யை அடுத்து வெளி வந்தன.

மேற் கூறிய படங்கள் அனைத்தும் பேசாப் படங்களின் வரிசையில் தான் நிற்கின்றன. பேசும் படத்திற்கான முயற்சிகள் முன்னர் லூமிரி சகோதரர்கள், டிக்கன்ஸன், பிரௌன் போன்றவர்கள் வெளியிடுவதற்கான வகைகள் செய்யப்பட்ட போதிலும், அம்முறையில் அநேக குறைகள் இருந்ததனல், பெரும்பாலும் மௌனப் படங்களாகவே வெளியிடப் பட்டது. இந்த நிலையை மாற்ற விரும்பினர் ஒரு அறிஞர். மிகத் துல்லியமான வகையில் ஒலியையும் பதிவு செய்து பேசும் படம் வெளியிடுவதற்கான வழி வகைகளை — போனேகிராபின் உதவியின்றி ஒலிப்பதிவை ஒளிப்பதிவு செய்யும் முறையில் மாற்றியமைக்க முயன்றவர் யூஜின் அகஸ்டின் லாஸ்டே (Eugene Augestin Lauste) என்பவராகும். (தொடரும்)

4

"குற்றச் சாட்டுகள் அத்தனையும் உண்மை!—ஆனால், இவைகளையெல்லாம் குற்றங்களாக நான் மதிக்கவில்லை!— இறை செலுத்தவில்லை: செலுத்தக் கூடாது என்பதால்தான்! பேட்டி காணவில்லை: அது எம் மரபுக்கு இழுக்கு என்பதால்தான்! பலர் கொல்லப்பட்டிருக்கின்றனர்; அது போர்க்களத்தின் விதிமுறை! படுகளத்தில் ஒப்பாரியில்லை!! பாஞ்சாலங்குறிச்சி என் இதய சாம்ராஜ்யம்—அதன் பரந்த எல்லைகள் எம் முன்னோரின் உரிமைத் தாயகம்! அதை நான் காத்ததிலே குற்றமில்லை!! கர்ஜித்தெழுகின்ற சிங்கத்திற்குக் 'கானகம்' சொந்தமில்லை யென்றால் — 'பாஞ்சாலங்குறிச்சி' எனக்கும் சொந்தமில்லைதான்! சிறகடித்துப் பறக்கும் புள்ளினங்களுக்கு 'வானம்' சொந்தமில்லையென்றால்,—இந்தப் பாளையங்களெல்லாம் எனக்கும் சொந்தமில்லைதான்! மின்னுகின்ற தாரகைக்கும், ஒளிவிடும் குளிர் மதிக்கும், இந்நீல வானமும், வையகமும் சொந்தமில்லை யென்றால், எனக்கும் இத் தென் பாண்டிய மண்டலம் சொந்தமில்லை தான்! ஆனால் இவைகளெல்லாம், அனைத்திற்கும் சொந்தமென்று ஒப்புக்கொள்கின்றபோது—இயற்கையின் பாற்பட்ட, என் 'பிறப்புரிமை' மட்டும் எப்படிக் குற்றமாகும்? எனவே, நான் குற்றவாளியல்ல—நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட வேண்டியவன்!"

இப்படித்தான் பேசினான் பாண்டியன்! ஆனால், கிடைத்த தண்டனை என்ன தெரியுமா? தூக்கு மேடை!!

ஆம்! நீதி பேசியோனை பரங்கி தூக்கிலிடக் கட்டளை யிட்டான்! இது எதிர்பார்த்ததுதான்!! தொண்டைமான் களிக்க, எட்டையபுரம் புன்முறுவல் புரிய, புளிய மரத்தருகே போய் நின்றான் கட்டபொம்மு! தூக்குக் கயிறை முத்தமிட்டான்!!

"தாயகமே! என் சேவைக்காக, எனக்கு நீ அளிக்கும் அன்புப் பரிசு இதுவானால், இதை நான் தலை வணங்கி ஏற்றுக்கொள்ளுகிறேன்! இப் பொன்னாட்டைக் காத்தது குற்றமானால்—இப்புகழ் நாட்டின் எல்லையை, நாடோடிகள், மிதிக்கக் கூடாது என்று சூளுரைத்துப் போராடி

யது குற்றமானுல் — அத்தகைய பெருங் குற்றவாளியாகவே தான் உயிர் விட ஆசைப்படுகிறேன் !''

'' அன்புத் தமிழ் நாடே ! புகழ் வாய்ந்த நெடுந்தரையே ! ஆழி சூழ் மறவர் வீடே ! அழியாத திரு இடமே ! தமிழ் கமழும் வள நாடே ! நீ ஏனின்று கோழையாகி விட்டாய் ? தார் புனைந்து பாராண்ட உன் மறவர் வீரத்தை நீ ஏனின்று பாழ்படுத்தி விட்டாய் ? ஈழத்தைத் துளைத்த பெரு நாடே ! கடாரத்தை வென்ற தமிழ்ப் புவியே ! நீ ஏனின்று உன் வீரத்தைப் புதுக்கோட்டையான் காலடியில் கிடத்தி விட்டுக் கோழையாகி விட்டாய் ? குமுறுகின்ற பெருங்கடலில் முத்து உண்டு !—ஒளி வீசும் ஆழ் கடலில் பவழம் உண்டு !—ஆனுல், தாவித் தீண்டும் ' விஷநாகம் ' ஏனே அங்கு ! வெடித்தெழும் எரிமலையின் ' ஜுவாலை ' நேர்த்தி தான் ! ஆனுல், விளைவு என்ன ? பொன் கொழிக்கும் தமிழ் நாட்டில் 'வைரம்' உண்டு ! ஆனுல், புல்லுருவிக் குழாங்கற்கள் ஏனே இங்கு ?'

' ரகுநாதத் தொண்டைமான், எம்மை வருந்தி அழைத்தான்— நயந்து பேசினுன்—குழைந்து உபசரித்தான் ! நம்பிய நாங்கள் பூரித்துப் போனேம், அவன் புது உறவு கண்டு ! அவன் செயலில் ஓர் அழகு கண்டோம் ! ஆனுல், இன்றுதான் தெரிந்து கொண்டோம் அது 'எரிமலை—ஜுவாலை ' என்று ! படமெடுத்தாடும் நாகத்தை வண்ணச் சரமென்று, மனமார நம்பி விட்டோம் ! அதன் விளைவு இன்று தூக்கு மேடையிலே இருக்கிறேம் ! இன்னும் சில விஞடிகளில் பிணமாக உங்களெதிரிலே வீழப் போகிறேம் !! உள்ளபடியே தொண்டைமானுக்கு நாங்கள் உயிருடன் உலவுவது, அச்சமாகவும், வேதனையாகவு மிருந்திருந்தால், அவன் எம்மைக் குத்திக் கொன்று விட்டிருக்கலாம், நித்திரை புரியும்போதே ! எவரேனும் கேட்டாலும், சொல்லியிருக்கலாம்—தாயகம் இழந்த 'பொம்மு' மேலும்மேலும், அகதியாய் சுற்றித் திரிந்து துயருறுவதைக் காணச் சகியாது தான், அவனை நான் அன்பு உள்ளத்தால், கொன்று விட்டேன் ' என்று ! மக்களின் அனுதாபங்களாகிலும், கிடைத்திருக்கும் இதோ நிற்கும் மகானுபாவனுக்கு ! ஆனுல், எம்மை, மாற்றானுக்கல்லவா காட்டிக் கொடுத்து கைக்கூலி பெருமளவுக்கு இழிந்தவனுகி விட்டான், இந்தச் சிறுமதியாளன் ! நாடு ஏற்குமா இதை ? ஏற்கலாமா இத்தகையவர்களை ? எனக்காகவா நான் போரிட்டேன்? என் சொந்த சுகத்திற்காகவா நான் காடு சுற்றும் அகதியானேன்? எனக்கென்று இருந்திருந்தால் பாஞ்சாலங் குறிச்சியோடு என் வாழ்வே முடிந்து விட்டிருக்குமே ! வெள்ளையர்களை ' பொது எதிரி ' என்று நான் கருதிய காரணத்தினுலே தான், நாடெங்கும் சுற்றித் திரிந்தாகிலும், ஒரு 'கூட்டு முன்னணி' அமைத்து இவர்களை வீழ்த்த வேண்டுமென்று அரும்பாடு பட்டேன் ! அகில தமிழகமும் என் தனிக்குரல் கேட்டு பொங்கியெழும் என்று மனமார நம்பியிருந்தேன்—ஆனுல், ஏமாந்தேன் ! இவ்வேமாற்றத்தை, அன்றே நானறிந்திருந்தால் பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டையின் பெரும் வாயில்களருகே, வீழ்ந்தாகிலும் பிணமாகியிருப்பேன் ! இறுதி வரைப் போரிட்டு நானும் என் வீரர் திலகங்களும் ரத்தச் சேற்றிலே புதையுண்டுவிட்டாகிலுமிருப்போம் ! தனியொருவன் போரிட்டதைக் கண்டு, தமிழக

மாகிலும் ஒரு சொட்டுக் கண்ணீருடன், இவ் வேதனையைச் சகித்துக் கொண்டாகிலு மிருந்திருக்கும் ! ஆனல், அந்தச் சாவுதான் எனக்குக் கிடைக்க வில்லை !! இருந்தாலும் பரவாயில்லை ! இப்படிச் சாவதிலும் ஒரு மகத்துவம் இருக்கத்தான் செய்கிறது ! விஜய ரகுநாதத் தொண்டைமானே, நானிப்படிச் சாகா விட்டால் யார் நினைக்கப் போகிருர்கள் ? கடைசி ஒரு தமிழன் இருக்கும் வரையில், இத்தகைய துரோக பரம்பரையினரின் திருவுருவம், அவர்களின் மனக்கண் முன் தோன்ருமல் போகுமா ? அப்போதாகிலும் நினைக்க மாட்டார்களா ?—விடுதலை வீரன் இறுதியில் நாதியற்றவனுகத் தூக்கலிடப் பட்டான்—அவனை யொத்த குறுநில மன்னர்களெதிரிலேயே—அதுவும் அவர்களிலொருவனலேயே காட்டிக் கொடுக்கப்பட்டு—என்று! அதொன்றே போதும் ! நான் நிம்மதியாக உயிர் விட !!

போய் வருகிறேன் !—விடை பெற்றுக் கொள்கிறேன்! பொங்கியெழும் இளைஞர் கூட்டம், துடி துடிக்கும்போதே, சாவென்னும் 'புகழமுதை' வாரிக் குடித்திடுகின்றேன் ! கலங்கும் மக்களின் கண்ணீர் உலரா முன்பே, இந்த இறுதிச் சாக்காட்டின் தனிப் பிணமாய் பொன்றி விடுகின்றேன் ! கோழையுள்ளம் கொண்ட சந்தர்ப்பவாதிகளும், கொடும் நினைப்புடைய தொண்டைமான்களும் இங்கிருந்து அகலா முன்பே, வீறு கொண்ட தமிழ் மகனுய்—அவர்களெதிரிலேயே பலிபீடத்தில் சாய்ந்து விடுகிறேன் ! அப்போதாகிலும் அறியட்டு மவர்கள் சுயமரியாதை எது வென்று ! தன் மானம் எப்படிப்பட்டதென்று ! விடை பெற்றுக் கொள்ளுகிறேன்! எதிர் காலத்தின் 'சோகச் சித்திரமாய், என்றுமே இப் புனித மண்ணிலே உலவிக் கொண்டிருப்பேன் என்ற நம்பிக்கையோடே விடை பெற்றுக் கொள்ளுகிறேன்! போய் வருகிறேன் !!

இப்படித்தான் கரம் கூப்பி வீழ்ந்தான் கட்டபொம்மு ! கயத்தாறு அந்த மா வீரனின் சடலத்தை வாரி அணைத்துக் கொண்டது !! நினைத்தாலே நெஞ்சம் புழுங்கும், இந்த வேதனைச் சம்பவத்தை எப்படித்தான் சகித்துக் கொண்டதோ அந்த புகழ் நிலம்!! ஓங்கி வளர்ந்திருந்த புளிய மரம்—சுற்றியிருந்த வீரர் கூட்டம்—சூழ்ந்திருந்த பாளையத்தார் —ஒதுங்கியிருந்த எட்டையபுரம்—பதுங்கிக் கொண்ட புதுக் கோட்டை—இதன் மத்தியிலே வீர பாண்டியன் ! அவன் கழுத்திலே இறுக்கப்பட்ட கயறு—அவன் உள்ளத்திலே பொங்கியெழுந்த வேதனை உணர்ச்சிகள்—அவன் வாயினின்றும் 'இடியோசையென' உருண்டோடிய வார்த்தைக் கூட்டங்கள்—அவைகளிலே தெறித்தெழுந்த உணர்ச்சிப் பிரவாகம்—அவன் துடித்து வீழ்ந்த இறுதி நிலை—ஆகிய இவைகளை நீங்கள் தான் ஒரு கணம் நினைத்துப் பாருங்களேன் ! இந்த 'உடல் சிலிர்க்கும் காட்சிகளை' நீங்களும் தான் ஒரு முறை உங்களின் மனக்கண் முன்னல் நிறுத்திப் பாருங்களேன்......!

கண்களிலே நீர் வழிந்தோடுகிறதா ?......துடைத்துக் கொள்ளுங்கள் !! நெஞ்சம் குமுறுகிறதா ?......பொறுத்துக் கொள்ளுங்கள் ! என்ன செய்யலாம் ? நமக்கிருக்கும் இந்த ஆவேசமும்—அன்புள்ளமும்—அன்று தொண்டைமான்களுக்கும், எட்டையபுரங்களுக்கும், இருந்திருந்தால்—இந்தத் துணைக் கண்டத்தின் சரித்திரமே வேருகி யிருக்குமே ! இருந்

தாலும் பரவாயில்லை! இன்று வெள்ளையனை விரட்டிய நிலையில் தான் வாழுகிறோம்! இன்னும் நம் புகழைத் தனித்திருந்து பேச கொஞ்ச நாட்கள்தான்பிடிக்கும்!!

நம்மைப் பொறுத்த வரையில் கட்டபொம்முவை நாம் என்றென்றும் மறக்கவே மாட்டோம்! உலகெங்கணும் நிகழ்ந்த விடுதலைப் போர்களையும்—அங்கு தனித்திருந்து போரிட்ட மாவீரர்களையும் இவ்வையம் நினைக்கும்போதெல்லாம், வீர பாண்டியனின் திருவுருவமும் நம் மனக்கண் முன் தோன்றி மறையாமலிருக்க முடியாது! கிரேக்க நாட்டைக் காக்கப் போரிட்ட லியோனிதாசும்—அவன் பொன்றாத நிலைக்களமாம் 'தர்மா போலே'வும் — கிரீஸின் விடுதலை மலரிலே அழியாத வண்ண ஓவியமாக இன்றும் இடம் பெற்றிருப்பதைப் போல, தமிழகத்தின் புகழேட்டிலே கட்டபொம்முவும் — பாஞ்சாலங்குறிச்சியும் இடம் பெறத்தான் செய்வார்கள்!! தாயகம் காத்த பிரான்ஸின் செல்வ மகள் ஜோனும் (Joan of Arc) அவளிறுதியில், வெள்ளையரால், தீயிட்டுக் கொளுத்தப்பட்ட சிதைக் கோலமும், எப்படி பிரஞ்சு மக்களின் இதயத் திரையின் 'சோகச் சித்திரமாக' விளங்குமோ—அதைப்போல, பாஞ்சாலங்குறிச்சியின் அருமைக் காவலன்—வீரபாண்டியனும், அவன் தூக்கில் தொங்கிய 'கயத்தாற்றின்' தூக்கு மேடையும்—நம்மின் இதய பீடத்தினின்றும், என்றென்றும் மறையவே மறையாது! இந்த நெஞ்சுருக்கும் காட்சியும் — நினைப்பும் நிச்சயம் மகுடம் புனைந்து நிற்குமென்பதில் ஒரு சிறிதும் ஐயமிருக்க முடியாது! வாழ்க வீர பாண்டியன்!! வளர்க இத் தமிழ் புவி!!!

(முற்றும்)

அடுத்த இதழ் முதல் கட்டபொம்மு காலத்திலிருந்த வீரர்களின் வரலாறுகள் தொடர்ந்து வரும்.

உதய சூரியன்

உலகமிசை உணர்வெழுப்பிக் கீழ்த்திசையின் மீதில்
உதித்து விட்டான் செங்கதிரோன் ; தகத்தகாயம் பார் !
விலகிற்றுக் காரிருள் தான் ; பறந்ததுபார் அயர்வு ;
விண்ணிலெலாம்பொன்னொளியை ஏற்றுகின்றான் அடடா !
மலையும் எழிற் பெருங்கடலின் அமுதப்ர வாகம் !
மேலெல்லாம் விழி அள்ளும் ஒளியும் ப்ரவாகம் !
நலம் செய்தான் ; ஒளி முகத்தைக் காட்டி விட்டான், காட்டி
நடத்துகின்றான் தூக்கமதில் ஆழ்ந்திருந்த உலகை !

போட்டோ : எம். ஏ. கான், சென்னை-2. —பாரதிதாசன்.



"ஊடல் நேரம்"   போட்டோ : என். யாகராஜன், பூம்புகார்.

பொங்கலுக்காக இரு கட்டுரைகளுக்கு பரிசு அளிக்கப்படும். இதில் யாரையும் தாக்கி எழுதிய கட்டுரையை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

மேனாட்டு நடிகரும் நம் நாட்டு நடிகரும்—1

மேனாட்டு நடிகருக்கு நம் நாட்டு நடிகர் எவ்விதத்திலும் தாழ்ந்தவர் அல்லர்"

பிரபல ஹாலிவுட் நடிகர் கிர்க் டக்லாஸின் இயற்கைத் தோற்றம். கீழிருப்பது அவர், 'ஹோமரின் ஓடிஸிக்காக' மேக்கப் செய்து கொண்ட காட்சி.

பிரபல தென்னிந்திய நடிகர் எம். ஆர். ராதாவின் இயற்கைத் தோற்றம். கீழிருப்பது அவர், ' இரத்தக் கண்ணீரு 'க்காக மேக்கப் செய்து கொண்ட காட்சி.



மேல கோபுரம்



கீழ கோபுரம்



தெற்கு கோபுரம்



வடக்கு கோபுரம்

மதுரை மீனாட்சி அம்மன் கோவில். நான்கு கோபுரங்களையும் ஒரே சமயத்தில் தரிசனம் செய்யுங்கள்.

போட்டோ: N. கிருஷ்ணன்

ரவி
பிலிம்ஸ்
அளிக்கும்
பணம்
பத்தும்
செய்யும்
கதை, வசனம்.
A.L.நாராயணன்
டைரக்ஷன்.
ஜம்பணா
சங்கீதம்.
வேதா
அஸோஸியேட் டைரக்ஷன்.
M.விஸ்வம்
கேமரா.
காமல்
BALU BROS.
தயாரிப்பு.
R.கல்யாணராமன்

தமிழகத்தின் பெருமை!

இலக்கியம்

காவியம் பாடிய கம்பன்—வாழ்க்கை ஓவியம் தீட்டிய வள்ளுவர்—அறம் உரைத்த ஔவை—அன்பின் திறம் பரப்பிய இராமலிங்கர்... இவர்கள் என்றும் இருப்பவர்கள்



வீரம்

தூக்கிலே ஏற்றப்பட்டதால் கட்டபொம்மன் நாட்டின் புகழைத் தூக்கி நிறுத்தினுன்! அவனைக் கொன்றுவிட்டதாக மகிழ்ந்தனர் வெள்ளையர்கள். ஆனால் நடந்ததென்ன? மங்கிக் கிடந்த நாட்டின் தன்மானச் சுடரைத் தன் மரண நெய் ஊற்றிப் பொங்கி எரியச் செய்தான்.

தியாகம்

பாட்டால் முரசு கொட்டினுர் பாரதியார். தமிழ்மானம் நிலைநாட்டி கப்பல் ஓட்டினுர் சிதம்பரனுர்...... கண்ட மக்கள் நாட்டை மீட்க ஒன்று கூடினர்—வென்று பாடினர்

வணருபபு! அறிஞர்கழுவு

.... சின்ன விஷயமல்ல ....

கேள்வி :

(1) மது விலக்கை இந்தியா பூராவிலும் நடை முறைக்கு கொண்டு வந்தால் என்ன? தமிழ் நாட்டு அரசியல் மேதை ராஜாஜி அவர்கள் துவக்கிவைத்த இந்த நற்பணி ஏன் குமரி முதல் இமயம் வரையில் அமுலில் இருத்தலாகாது? ஒரு ஊரில் மட்டும் மதுவைத் தடை செய்து விட்டு பக்கத்து ஊரில் அது பெரும் அளவிற்கு வளர வாய்ப் பளிப்பது முறையா? இப்படிச் செய்யப்பட்ட அரைகுறை மது விலக்கால் மதுவருந்துவோர் தொகை குறைந்ததா?

இல்லை. நிச்சயமாக இல்லை. அரைகுறை மதுவிலக்கால் 'கள் ளச் சந்தையில்' மதுவின் விலை ஒன்றிற்கு இரண்டாகப் பெருகி யதே தவிர, மதுவருந்துவோரின் தொகை எள்ளளவும் குறைய வில்லை. மது விலக்குப் பகுதி யில் இருப்போர், மதுவிலக்கு அமுலில் இல்லாத அண்டை ஊருக்கு விடுமுறை நாட்களிலே யாத்திரை செல்வது போலச் சென்று மதுவரக்கனை தெரிசித்து விட்டுத்தான் திரும்புகிறார்கள்.

மது 'சேர்ந்தாரைக் கொல்லி' என்பது தெரிந்திருந்தும்; மது அருந்துவதால் மனிதன் மிருக மாகி விடுவதுடன் யானை, தன் தலையிலேயே மண்ணை வாரிப் போட்டுக் கொள்ளுவது போல, தன்னைத்தானே அழித்துக் கொள்ளுகிறான் என்பது தெரிந் திருந்தும்அரசாங்கம்சிலருக்குமட் டும் ஏன் சலுகை தரவேண்டும்?

(2) கிரேக்க நாட்டிற்கு, பிரிட்டானியநாட்டுக்கு, அமெரிக் காவுக்குத் தொடர்ச்சி கெடாத கால வரையரையுடன் சரித்திரங் களுண்டு. ஆனால் 5000 ஆண்டு களாக கலையும் இலக்கியமும் வளர்த்து உலகிற்கே நாகரி கம் கற்றுக் கொடுத்த தாகப் பூரிப்படைகின்ற தென்ன கத்திற்கு — தமிழகத்திற்கு தொடர்பு கெடாத—காலவரை யறையுடன் கூடிய-எல்லா சரித ஆசிரியர்களாலும் ஏற்றுக் கொள் ளக் கூடிய ஓர் சரித்திர முண்டா? இல்லையென்றால் ஏன் எழுதப்படவில்லை?

(3) வடக்கு—தெற்கு விவாதம் கூடாது என்கிறார்கள். ஆனால் ஸ்டாம்புகள் வெளியிடுத லிலும் அவர்கள் செய்யும் 'எடக்கை' நம்மாலே பொறுக்க முடிவதில்லை.வடநாட்டுத்தலைவர் களையும் பேச்சாளர்களையுமேஅதி லே பொறித்து, நம்மவர்களைப் புறக்கணிப்பது ஏன்? நாமென்ன அவ்வளவு தாழ்ந்தவர்களா?

பதில் :

(1) அரசாங்க விருந்துகளில் மதுவகைகள் ஏன் பரிமாறப்படு கின்றன? பிறநாட்டுக்காரர்கள் வந்தால் மதுவைத் தானா அவர் களுக்கு விருந்துணவாக வைக்க வேண்டும்? தமிழ் நாட்டில் இருந்து சீமைக்குச் செல்லும் தலைவர்களுக்கு அங்கு இட்டிலி யும் சட்டினியுமா விருந்து வைக் கிறார்கள்? இல்லை, வட நாட்டில் இருந்து செல்பவர்களுக்கு,

............சிந்திக்க வேண்டிய விஷயம்............

சப்பாத்தியும்,பூரியுமாஉணவாகத் தருகிருர்கள்? இல்லையே! அவரவர் நாட்டு உணவைத்தானே நம் நாட்டுத் தலைவர்களுக்குத் தருகிருர்கள். நாம் மட்டும் ஏன் அவர்கள் உணவான மதுவை நம் நாட்டில் நடத்தப்படும் விருந்துகளில் பரிமாற வேண்டும்?

அடிமைத் தளையில் இருந்து விடுதலை பெற்ருேமே தவிர; இன்னும் அடிமை மனப்பான்மை நம்மிடமிருந்து மாறவில்லை. காந்தியடிகள் இன்று உயிருடன் இருந்திருந்தால் தன்னைத் தேடி வரும் மேனுட்டார்களுக்கு, தாம் உண்ணுகின்ற உணவைத்தான்-மாளிகையிலேகூட அல்ல, தன்னுடைய மண் குடிசையில், அவர்களை அழைத்து வந்தே தந்திருப்பார். மதுவைக் கனவிலே கூட கருதியிருக்க மாட்டார்.

உலகிலேயே இந்திய நாடு ஒன்றுதான் மது அருந்தாத நாடு என்று பாராட்டப்படும் நாள் என்ருேளா அந்நாள்தான் இந்தியாவின் பொன் நாள்.

(2) உலகினுக்கே நாகரிக பொற்சிகரமமைத்த பெரு நாடுகளில் தென்னகமும் ஒன்று.5000 ஆண்டுகளின் பெருமையைஉள்ளடக்கியது. ஆனுல்,அதற்குத்தான் அனைவரும் விவாதமின்றி ஏற்றுக் கொள்ளும் ஒரு முறையான சரிதம் காலவரையறைகளுடன், தொடர்பு கெடாமல் இருக்கவில்லை. சரிதம் எழுத வேண்டிய காலத்தை,தெய்வீகத்திருப்பணிக்கென்றே செலவழித்து, இடைக்காலமெல்லாம் இகத்திற்கும்,பரத்திற்கும் பாதை அமைப்பதில் தம்மையே மறந்து விட்டிருந்ததால், சரித்திரங்கள் மலியவேண்டிய இடத்திலே காவியமும், கற்பனையும் மலியலாயிற்று...!! சேர சோழ பாண்டிய, பல்லவர் பெருமை பேச வேண்டிய நேரத்தை, விக்கிரமாதித்தனும், வேதாளமும், பட்டியும் அபகரித்துக் கொண்டனர். எனவேதான் ஓர் இனத்தின் இதயமான சரித்திரமே மறைக்கப்பட்டு, அதை முறையாகத் தொகுத்து எழுதும் முயற்சியே புறக்கணிக்கப்பட்டு விட்டது!

(3) பிபின் சந்திரபால் நல்ல தியாகி அவரைப் போட்டிருக்கிருர்கள்; ஒப்புக் கொள்ளுகிருேம். ஆனுல், அதே நேரத்தில் தென்னகத்தில் தியாகிகளில்லாமலா போய் விட்டார்கள். வா. ஊ. சி. இல்லையா? கட்டபொம்மனில்லையா? கவிஞர்களில் கம்பனில்லையா? வள்ளுவனில்லையா? இவர்களையெல்லாம் ஏன் புறக்கணிக்க வேண்டும்? இவர்களையும் அதிலே சேர்த்துக் கொண்டால் இந்தியத் தபால் இலாகாவின் கௌரவம் உலகின் முன் குறைந்தா போய் விடும்? வங்காளம், மாராட்டியம் இதுபோன்ற கொடுமைகளைத் தாங்கிக் கொள்வதில்லை. ஆனுல், கட்சிகளால் சிதறிக் கிடக்கும் துர்பாக்கியத் தமிழகம்தான் இதை இன்னும் தாங்கிக்கொள்ள வேண்டியிருக்கிறது!

உழைப்பால் உயர்ந்தவர்

ஸர். சி. வி. ராமன்

உழைக்கும் எவரையும் உயர்த்திடும் பண்பைப் பெற்றிருப்பதால் மட்டுமே, உழைப்பின் சக்தியை இன்று உலகமே மதித்துப் போற்றுகிறது! உழைக்கக் கற்றுக் கொண்டவர்கள் எவரும் உயரக் கற்றுக் கொண்டவர்களாவார்கள்! உழைப்பும் உண்மையும் கலந்ததுதான் உயர்வு! இந்த உயர்வு ஸர். சி. வி. ராமனை நாடிவந்ததென்றால் அதற்குக் காரணம் அவரின் ஆர்வம் குன்றாத உழைப்புத்தான்!

ஸர். சி. வி. ராமனவர்கள் இன்று இந்திய விஞ்ஞானிகளின் தலைவராகக் கருதப்படுபவர். இந்திய விஞ்ஞான மேதைகளில் அவருக்கு அளிக்கப்படும் தனிச் சிறப்பு இன்று இந்தியா முழுவதிலும் வேறெவருக்குமே அளிக்கப்படுவதில்லை. அந்த அளவுக்கு உயர்ந்தவராகக் கருதப்படுகின்றார் ஸர். சி. வி. ராமன் அவர்கள்!

இராமனவர்கள் கி. பி. 1888-ம் ஆண்டில் பிறந்து இன்று வரை உலகின், புகழ் மணக்கும் விஞ்ஞானிகளில் ஒருவராக வாழுகிறார். அவரின் தளராத உழைப்பின் மேன்மையால் தன் 13-வது வயதில் எப். ஏ. யையும் 20 வயதிற்குள் எம். ஏ. யையும், விஞ்ஞானத்தை முக்கியமாகக் கொண்டு தேறிவந்தவரென்றால் அவரின் ஆர்வம் எந்த அளவிற்கு இருந்ததென்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்! அவர் மனம் எப்படியும் தானொரு விஞ்ஞானியாக ஆகவேண்டுமென்ற ஒரே ஆர்வத்தால் நிரப்பப்பட்டிருந்ததால், விரைவிலேயே தனக்குக் கிடைத்த அரசாங்க வேலையை உதறித்தள்ளினார். கல்கத்தா விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகம் அவரை இருகரம் நீட்டி வரவேற்றது. அதுமுதல் படிப்படியாக அவர் புகழ் பரவலாயிற்று! விரைவில் கல்கத்தா விஞ்ஞானக் கழகத்தின் தலைவராகவும், பிறகு இலண்டன் நகரின் 'ராஜ சபை'யின் (Rayal Society) அங்கத்தினராகவும் ஆனார். இதன் காரணமாக 1924-ல் உலகம் சுற்றி, உலகின் விஞ்ஞானக் கழகங்களுடன் தொடர்பு கொள்ளத் தொடங்கினார். இலண்டன், கனடா அமெரிக்கா, நார்வே, ஸ்வீடன் ஜெர்மனி, டென்மார்க் முதலிய நாடுகளில் அவர் சுற்றுப் பிரயாணம் நிகழ்த்தியபோது கிடைத்த அனுபவங்கள் மிகவும் ஏராளமானதாகும். அந்த அனுபவம் அவருக்கு 1930-ல் முதன்முதல் நோபல் பரிசொன்றையும் பெற்றுத் தந்தது!

மேலை நாட்டு விஞ்ஞானிகளான மைக்கேல்ஸன், ருதர்போர்ட் போன்றவர்களுடன் ஒப்பிட்டுப் பேசப்படவேண்டிய தகுதியும் திறமையும் பெற்ற இராமனவர்கள், இன்று உலக விஞ்ஞானிகள் பெரும்பாலோரின் நன்மதிப்பையும் பாராட்டுதலையும் பெற்றவராவார் - இந்த பெரும் பாக்கியத்திற்கும் பேற்றினுக்கும் காரணம், அவரின் நிறைவு குன்றாத பெரும் உழைப்புத்தான். அது மட்டுமல்ல; இன்றைய விஞ்ஞான உலகம் ராமனின் கண்டுபிடிப்புக்களை கண்ணியமாக ஏற்றுப் போற்றி மதிப்பதொன்றே அவர் பெருமையறியும் ஆதாரமாகும்!

வாழ்க இந்த உழைப்பால் உயர்ந்த விஞ்ஞான வித்தகர்!!!

இந்தியாவிலேயே சிறந்த அறிவாளிகளைத் தமிழகம் பெற்றளித்திருக்கிறது. அதிலும் தஞ்சை மாவட்டத்திலிருந்து வெளிவந்த அறிவாளிகள் அதிகம். அதற்கு நமது அகில உலகப்புகழ் ஸர். சி. வி ராமன் அவர்களும் நல்லதோர் எடுத்துக் காட்டு.

வித்துவான் : வே. இலட்சுமணன்

காட்சி 16

பிலத்தின் வெளிப்புறம்

மணிவீரன் உள்ளேயிருந்து வெளியே வருகிருன். பிலக் காவலனிடம் அதிகார ஆணவத்துடன் கட்டளை இடுகிருன்.

மணி :—வம்பு பேசாமல் கவனமாகப் பார்த்துக் கொள். சிற்பியின் சித்தம் மாறும் வரையில், அவன் என் எண்ணத்தின் எதிரொலியாக உருமாறும் வரையில் இங்கேதான் இருப்பான். பட்சியைப் பறக்கவிட்டு விடாதே! எச்சரிக்கை!

பிலக்காவலன் :— கவலைப் படாதீங்க ஐயா! என் ஆயுட் காலத்திலே ஒருத்தன் என்னை ஏமாத்தி ஓடிப்போனதாக சரித்திரமே கிடையாது.

மணி :—உம்! ஜாக்ரதை!

மணிவீரன் வெளியே நிற்கும் குதிரையின் மீது தாவி ஏறிக் கொண்டு போகிருன். அவன் போனதும்...

பி. கா. :-(துணைக்காவலரிடம்) மல்லவர்மர் தீக்கொள்ளி யென்ருல் - இந்த மணிவீரன் அதைத் தூண்டிவிடும் நச்சுக் காற்று! நெருப்புடன் சேர்ந்த காற்று நாட்டையே நிர்மூலம் செய்யப் பார்க்கிறது! ஆனல் இந்த நிலை வளரக் கூடாது! நாம் அதற்கு உடந்தையாக ஒரு நாளும் இருக்கக் கூடாது.

து. கா.:—இருக்கமாட்டோம். இறக்கும்வரை எதிர்ப்போம். சமயம் கிடைக்கும் வரை காத்திருந்து-சரியான சந்தர்ப்பத்தில் ஆழமான குழி பறித்து - அதிலே முதல் பலியாக இந்த மணிவீரனைத் தள்ளுவோம். அந்த நாள் வரும்வரை...

பி. கா. :—சரி திரும்பவும் வந்து விடப் போகிருன். இரைந்து பேசாதே. இந்தப் பிலத்தின் ஒவ்வொரு சுவருக்கும் காது இருக்கிறது! பேசாமல் செய்கையில் காட்ட வேண்டும் நாம்! போங்கள்! போய் வேலையைக் கவனியுங்கள்!

போகிருர்கள்.

காட்சி 17

சந்திரகாந்தியின் வீட்டுத்தோட்டம்

மணிவீரன் வருகிருன். அவன் பரியிலிருந்து கீழே இறங்கியதும் தயாராக

இருக்கும் ஒருவன் அவனிடம் தகவல்கூறுகிறான். அவன் பெயர் பொய் விளம்பி.

பொ. வி. :—ஐயா! வாங்க. இங்கேதான் அந்த அழகு தேவதையைப் பார்த்தேன்.

(மணிவீரன் முன்னே அடியெடுத்து வைக்கிறான்.)

பொ. வி.:—அங்கே போகாதிங்க. மறைஞ்சு நின்றுதான் கவனிக்கணும். நேரிலே பார்த்தால் அது மறைஞ்சு போயிடும்.

மணி:— (புரியாமல் வினாக் குறியை எழுப்பிப் பார்க்கிறான்.)

பொ. வி.:— ஆமாங்க அனிச்சப்பூ கூட மோந்தால்தான் குழையுங்க! இந்த தேவதை பார்த்தாலே குழைஞ்சு போயிடுது!

(காலடி சப்தம் கேட்கவே மணிவீரனைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டு)

வாங்க, வாங்க! அது வராப்போல இருக்கு! அதுக்குத் தெரியாம, பின்னாலேயே போய் 'லபக்' குன்னு பின்னலைப் பிடிச்சுஇழுத்து நிறுத்திடறேன். அப்புறமா நீங்க என்ன வேணுமானாலும் பேசிக்கிடுங்க!

[வடிவு வருகிறாள். தோட்டத்துப் பூஞ்செடிகளிலிருந்து பூக்களைப் பறித்துப் போடுகிறாள். பொய் விளம்பி அவள் அறியாதவாறு பின்புறமாகச் சென்று அவளது பின்னலைப் பிடித்து விடுகிறான். அவள் சட்டென்று திரும்பி ...]

வடிவு:—விடு பின்னலை! யார் நீ! ஏன் வம்புக்கு வர்றே!

பொ. வி.:—விட மாட்டேன்! ஹூம்! விடமாட்டேன்!

வடிவு:—ஏய்! நீ என்ன பைத்தியமா? பின்னலைப் பிடிச்சிழுக்கறே! உனக்கு என்ன வேணும் சொல்லு. விஷயத்தைச் சொல்லாமல் இப்படிச் செய்யறியே!



சந்திரகாந்தி

பொ. வி.:— அப்ப சரி ஓடி மறைஞ்சுட மாட்டியே! நான் பேசி முடிக்கிற மட்டும் நகராமல் இங்கேயே இருப்பியா!

வடிவு:—உம். விடு பின்னலை!

[பொய் விளம்பி தளர்த்தி விடுகிறான். சட்டென்று திரும்பும் வடிவு நீண்ட கொடியொன்றைக் கையிலெடுத்துக் கொண்டு]

வடிவு:—மரியாதையாகப் போயிடு! இல்லையானா உன்னை நாலு பேரு முன்னாலே காட்டிக் கொடுத்து அவமானப்படுத்திடுவேன். உம். போ. இங்கிருந்து.

பொ.வி.: — ஏம்மா! இது தான் நாணயமா? நான் தான் கேக்கறேன், இது நாணயமான்னு! பேசி முடிக்கிற மட்டும் இருக்கிற

துன்னுதானே நமக்குள்ளே ஒப்பந்தம்!..

வடிவு:—போடா மந்தம்!—ஒப்பந்தமாம் ஒப்பந்தம்! உனக்கு மூளைக் கோளாறுபோல இருக்கு! போயி வைத்தியரைப் பாரு!

[பொய் விளம்பி அவளைப் பிடிக்க முற்படுகிறான். அவள் ஓடுகிறாள். அவன் விரட்டுகிறான். அவள் ஓடி வரும் வழியில், எதிரில் வந்து நின்று இரு கைகளையும் விரித்து வழி மறிக்கிறான் மணிவீரன்...... அவள் திகைத்து நிற்கிறாள். பொய் விளம்பி பக்கத்தில்வந்து நிற்கிறான்.]

மணி:— பயப்படாதே! நான் உன்னைத் தேடி வரவில்லை!

வடிவு: — அப்படியென்றால் என் வழியில் ஏன் குறுக்கிடுறீங்க?

அருள்நந்தி

மணி:— ஒரு முக்கியமான தகவல் தெரிய வேண்டும். சிற்பி லலிதாலயரிடம் நடனம் பயிலும் அந்தப் பெண் யார்? அவள் பெயர் என்ன? அவள் இருக்குமிடம் எது? இந்த விவரம் தெரியவேண்டும்!

வடிவு:—(யோசிக்கிறாள். பிறகு) ஏன்? எதற்காக?

மணி:— எல்லாம் நன்மைக்குத்தான். அந்தப் பெண்ணுக்கு அதிர்ஷ்டம் அடிக்கப் போகிறது!

வடிவு:—அதிர்ஷ்டமா? என்ன அதிர்ஷ்டம்?

மணி:—இந்த நாட்டு இளவரசரின் நெஞ்சிலே இடம்பெற்று விட்டாள் அவள்! சேற்றிலே பிறந்த அந்தச் செந்தாமரை இளவரசரின் இதயத்திலே மலரப் போகிறது! காற்றிலே பறந்தலைந்த அந்தத் தோட்டத்துப் பூ கடி மணம் கமழப் போகிறது மாளிகை உப்பரிகையில்!!

வடிவு:—ஓகோ! அப்படியா? ஆனால் மலரின் வேட்கை பற்றி நீங்க அறியவே தேவையில்லையா? நீங்கள் தீர்மானித்து விட்டால் போதுமா?

மணி:— கரும்பு தின்னக் கசக்குமா என்ன? மாளிகையின் சுகபோகம் காலடியில் வந்து காத்திருக்கும் போது, வேண்டாம்! என்று உதறி யெறியும் ஒரு பெண் இந்த உலகம் பிறந்தநாள்தொட்டுப் பிறந்ததில்லை!

வடிவு:— அப்படிச் சொல்லிடாதீங்க! அந்தப் பெண் அபூர்வமான இனத்தைச்சேர்ந்தவள்

மணி:—அப்போது, உனக்கு அவளைத் தெரியுமென்று சொல்லு.

வடிவு:—தெரிந்துதான் பேசுகிறேன். புரிந்துகொண்டு போங்கள்! அவள் இலட்சிய வாழ்க்கை வாழ விரும்பும் ஒரு தனிப் பிறவி! உங்கள் இளவரசரின் இச்சை மொழிகள் அவளுக்கு எட்டிக்காய் போல! அவள் தின்ன விரும்பும் கரும்பு 'கலை'! அவள் பருக விரும்பும் ரசச்சாறு 'கலை'!

மணி:—தவறாகப் பேசுகிறாய்! இளவரசரை அவள் ஒருமுறை கண்டால் தலைவணங்கி விடுவாள்!

இது நிச்சயம். அதை நான் பார்த்துக் கொள்ளுகிறேன். நீ விவரத்தை மட்டும் சொன்னால் போதும்!

வடிவு:—அது எப்படி? நடக்க முடியாத ஒரு காரியத்தில் வீணாக ஏன் நீங்க தலைப்பட வேண்டும்!

மணி :—முடிவைப் பற்றி நமக்குள் அபிப்ராய பேதம் இருக்கிறது! ஆனால் அதற்காக உனக்குத் தெரிந்த உண்மையை ஏன் நீ மறைக்கிறாய்!...

வடிவு :—வீணான விபரீதங்கள் நேர வேண்டாம் என்பதற்குத் தான்!

மணி :—அப்போது என்வேண்டுகோளை ஏற்கப் போவதில்லையா!

வடிவு :—மன்னிக்கணும்என்னை! போங்க...

மணி :—நான் கட்டளையிடுகிறேன்! சொல் வாயா,மாட்டாயா!

வடிவு :—முடியாது.

மணி :—உன்னைச் சிறையில் தள்ளுவேன்.

வடிவு :—அந்த முடிவை நான் எப்போதோ யூகித்து ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன்.

மணி :—மரணம் வரையில் தண்டனை கிடைக்க நேரும்!

வடிவு :—என் வாழ்வை வெறுத்து விட்டேன், என் தோழியின் வாழ்வுக்காக!

மணி :—என்ன இறுமாப்பு உனக்கு! பொய் விளம்பி! பிடித்து இழுத்து வா இவளை!

[அவன் அவளைத் தீண்டப்போக]

வடிவு :—தொடாதே என்னை! நானே வருகிறேன்!

[போகின்றனர். உள்ளேயிருந்து மல்லியின் குரல் கேட்கிறது.]

மல்லி :—வடிவு! வடிவு!

[குரல் அருகில் வருகிறது. மல்லியும் வருகிறாள். வடிவின் நிலைமையைக் கவனிக்கிறாள்.]

மல்லி :—யார் நீங்கள்! விடுங்கள் இவளை!

மணி:—நீ யார் கேட்க! போ!உன் வேலையைப் பார்த்துக் கொண்டு!

மல்லி :—ஐயோ! வடிவு! நீ என்ன தவறு செய்தே! ஏன் உன்னை இழுத்துக்கொண்டு போறாங்க!

வடிவு :—கவலைப்படாதீங்க அம்மா! நான் ஒரு தவறும்செய்யலே! ஒரு நல்ல காரியத்துக்காக நான் என்னைத் தியாகம்செய்யறேன்! இதுதான் உண்மையான சமாசாரம்.

மணிவீரன்

[இழுத்துப் போகிறார்கள்]

மல்லி :—கொஞ்ச இருங்க ஐயா! (உள்ளே பார்த்தபடி) சந்திரா! சந்திரா! ஏ சந்திர காந்தீ ...!

வடிவு :—கூப்பிடாதீங்க அம்மா! அவளைக் கூப்பிடாதீங்க!

[மணிவீரன் யோசித்துத் தயங்கி நிற்கிறான் - இதற்குள் சந்திர காந்தி வரு

கிருள்]- மணிவீரன் அவளைப் பார்த்ததும் ஒரு கணம் ஊன்றிய பார்வையுடன் நிற்கிருன்.]

மணி :—தேடிவந்த புதையல் இதுதான்! நான் நாடிவந்த செல்வம் இதுதான்! பொய் விளம்பி! விடு அவளை!

சந்திரா :—(வடிவைத் தழுவிக்கொண்டு) என்ன இதெல்லாம்? (மணிவீரனைப் பார்த்து) ஏன் ஐயா! உமக்கு வேறு வேலை கிடையாதா?

மணி :—கிடையாது. உங்களை இரு கண்களாலும் கண்டு, "உங்களைக் கண்டு பிடித்து விட்டேன்'' என்ற ஒரு வார்த்தையை, இந்த நாட்டு இளவரசர் மல்ல வர்மரிடம் கூறுகிறவரையிலும் வேறு வேலை கிடையாது.

சந்திரா :—சரி போங்கள் இங்கிருந்து.

மல்லி :—இரு சந்திரா. அவசரப்படாதே. ஐயா! மல்லவர்மர் என் பெண்ணை எதற்காகத் தேடுகிருர்?

மணி : — ஓ! உங்கள் பெண்தானு இந்தப் பூங்கொடியாள்! சந்திரகாந்தி என்ற பெயரிலேயே என்ன கவர்ச்சி! உருவமும் பெயரும் பொருத்தமாக அமைந்திருப்பதை நான் முதன்முதலாக இன்றுதான் பார்க்கிறேன்.

மல்லி :—விவரத்தைச் சொல்லுங்கள்.

மணி : — நான் சொல்லு முன்பு ஒரு வாக்குறுதி வாங்கிக் கொள்ள விரும்புகிறேன். நீங்கள் ''தானுக வருகிற ஐசுவரியத்தை'' உதறித் தள்ளக்கூடாது.

மல்லி :—அப்படி யாரும் செய்ய மாட்டார்கள்! சொல்லுங்கள்.

மணி :—மல்லவர்ம இளவரசரின் நெஞ்சிலே மகத்தான இடம் பெற்றவள் உங்கள் மகள்! பூவைத் தேடி வண்டு அலைகிறது! வண்டின் இன்னிசையில் மயங்காமல் இந்தப் பூ ஓடி வந்துவிட்டது! அப்படியும் வண்டு மறக்கவில்லை! என்னைத் தூதனுப்பியது!

மல்லி:—ஓ! அப்படியா! (சந்திரா, வடிவு இருவரையும் பார்த்து) நீங்கள் போங்கள்!

[போகிருர்கள். போனபின் மணி வீரனிடம்.]

அவருக்கு என் மகள் மீது உண்மையான காதல் இருக்குமானுல் எனக்கு அதில் தடையே இல்லை. ராஜ வம்சத்தில் என் செல்வி கலந்து வாழ்வதைவிட வேறு பாக்கியம் எனக்குக் கிடையாது.

மணி:—நீங்களே நேரில் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்! அவ்வளவுதானே! சரி! எப்பொழுது அவர் வந்தால் உங்களைப் பார்க்கலாம்!

மல்லி :—இன்று இரவு!..

மணி:—தயாராக இருங்கள்! கட்டாயம் அழைத்து வருகிறேன்.

[போகிருன்.]

(தொடரும்)

தென்னகத்தின்
சிறந்த ஸ்தாபனம்

பிளாக்குகள்

என்றுலே

நியூடோன்

ஞாபகம்தான் வரும்.

மூவர்ண, இருவர்ண மற்றும் எல்லா
வித லைன் ஆப்டோன் பிளாக்கு
களுக்கு சிறந்த இடம்

நியூடோன் அன் கோ.,
வாலாஜா ரோட், சென்னை-2.

நல்ல பாடம்

பெரியோர் வாக்கு:

"வாள்முனையே வலிமை யுடையது" என்றான் நெப்போலியன். நாமுனையே வலிமை யுடையது என்றான் நாவலன். பேனு முனையே வலிமை யுடையது என்றான் வால்டேர். அறிவு முனையே வலிமை யுடையது என்றான் ஷா. இவை அனைத்தையும் மறுத்து ஒழுக்க முனையே வலிமை யுடையது என்றார் வள்ளுவர். ஒழுக்கமற்றவனுடைய வாளோ, நாவோ, பேனுவோ, அறிவோ வலிமை பெருது. பெற்ருலும் உயர்வு பெருது" என்பது தமிழறிஞர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களின் பொன் மொழி.

ஒழுக்கம் உயர்ந்தது. அதனுற்ருன் தெள்ளு தமிழ்ப் புலவன் வள்ளுவர் "ஒழுக்கம் விழுப்பம் தரலான், ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்ருர். அத்தகைய ஒழுக்கத்திற்கு அமைதியும், அடக்கமும், அறிவாற்றலும் தேவை. அதாவது "அடக்கம் அமரருள் உய்க்கும்; அடங்காமை ஆரிருள் உய்த்துவிடும்" என்கிருர் வள்ளுவர்.

அமைதியும் அடக்கமும்:

அதோ அங்கு ஊர்ந்து செல்லும் ஆமை — அமைதியின் இருப்பிடம் — அடக்கத்தின் உருவம் — ஆற்றலின் எடுத்துக் காட்டு — நமக்கு, அடக்கமுடைமையையும் ஆற்றலுக்குரிய வழியையும் சொல்லாமலே போதிக்கிறது. "Slow and steady wins the race" என்ற முதுமொழி "முயலும் ஆமையும்" என்ற சிறுவர் சிறு கதையால் நன்கு விளங்கும்.

அதாவது அமைதி, ஆற்றலுக்கு அறிகுறி. ஆற்றல் இருப்பின் அங்கு அமைதியும் அறிவொளியும் மின்னும். அந்த ஆமை நம்மை நோக்கி,

"உலக மக்களே! வாழ்க்கை நிலையான தல்ல. வாழ்க்கையில் குறை குடங்கள் கூத்தாடுகின்றன; ஆனால் ஆடம்பரம் அழிவுக்கு அறிகுறி. நிறை குடங்கள் தளும்பாது. வீண் பெருமை வேண்டாம்; பொறுமை வேண்டும், ஆரவாரம் வேண்டாம்; அமைதி கொள்ளுங்கள். சோர்வு வேண்டாம்; ஆற்றல் வேண்டும். வலிமை வேண்டும். "நாளை நாளை என்பீராயின் எப்போதாவது கூற்றுவன் வருவான்.. ஆகவே நான் இதோ புறப்பட்டுவிட்டேன். விழிமின்! எழுமின்!! என்று கூறுவது போலத் தோன்றுகிறது.

எனவேதான் "ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின், எழுமையும் ஏமாப் புடைத்து" என்று வள்ளுவர் ஆமையின் வாழ்க்கையை தம் முப்பாலிலேபாராட்டுகின்றார்.

போட்டி வேண்டாம்; நன்றி வேண்டும்!

வாழ்க்கையில் மனிதனுக்கு அமைதியோடு நன்றி மனப்பான்மையும் வேண்டும்; என்று இங்கு அமர்ந்திருக்கும் நன்றியின் சின்னங்கள் — நாய்க்குட்டிகள் சுட்டிக்காட்டுகின்றன. நாய் நன்றியுள்ள பிராணி 'நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்லது அன்றே மறப்பது நன்று." என்ற வள்ளுவரின் கூற்றைத் தவறாது மதித்து வாழும் உயிர், இவ்வுலகில் நாய் ஒன்றுதான்.

அதனாற்றான் கவி பாரதியார் "வாலைக் குழைத்துவரும் நாய்தான்—அது, மனிதனுக்குத் தோழனடி பாப்பா" என்று போற்றுகின்றார்.

சொல்லால் வடிக்கமுடியாத அன்பை, நாய் தன் நாவால் நம்மை வருடிக் காட்டுகிறது. நாவால் கூறமுடியாத நன்றியைத் தன் வாலைக் குழைத்துக் கூறுகிறது. மகிழ்ச்சியைத் தன் வாயால் சொல்லிப் பிறரை வரவேற்க முடியவில்லையே என்று வருந்தாது, தன் வாலை ஆட்டிப் பிறரை வரவேற்கிறது.

இங்கு நம்மை நோக்கிக் கொண்டிருக்கும் நாய்க் குட்டிகள் வெறித்து நோக்குகின்றன; அஞ்சுகின்றன. உலகம் வஞ்சகம், பொறாமை, சூது நிறைந்ததாக இருக்குமோ என்றுஎண்ணுகின்றனவோ? உலகில் மக்களுக்குள்ளே ஏற்றத் தாழ்வுகளும், போட்டிப் பூசல்களும் நிலவுகிறதே என்று வருந்துகின்றனவோ? நாளை நாமும் வயிற்றுக் கொடுமை தீர்வதற்குப் பிச்சைக்காரர்களுடன் வீதிகளிலே போட்டியிடவேண்டுமே என்று இப்பொழுதே அஞ்சுகின்றனவோ? என்ன செய்வது?

நாட்டில் தீவினை அழிந்து நல்வினை முகிழ்க்கும் நாள் — அமைதி நிலவும் நன்னாள் எந்நாளோ?

வாழையடி வாழையாய்...

சின்னப்பாவும் — சிவாஜியும்

ஓவியன் : அ. சீனு.

மேலை நாட்டிலே பெயரும் புகழும் படைத்த பல நடிகர்கள் உண்டு. ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையில் திசை முழுவதும் புகழ் மணம் பரப்பியவர்களாக காட்சி தருவர்.

வாள் வீச வேண்டுமென்ருல் 'எரால் பிளின்,' வனிதையருடன் கொஞ்சிப் பேசும் காதல் நடிப்பிற்கு என்ருல் 'டக்ளஸ் பர்பாங்ஸ்,' சோக நடிப் பென்ருல் 'பால்முனி,' பார்ப்பவரை மருளச் செய்யும் வில்லன் நடிப்பிற் கென்ருல் 'ஆர்சான் வெல்ஸ்' என்று ஒவ்வொரு துறை நடிப்பிற்கும் ஒவ் வொருவர் நுண்மான் நுழைபுலம் படைத் தவர்களாகக் காட்சி தருவர்.

ஆனல் தமிழகத்திலோ வீரம்; காதல்; சோகம்; வில்லன் ஆகிய இவை அனைத் தும் ஒருவரிடமே தஞ்சம் புகுந்து கொண்டிருக்கும் பெருமையைக் காணு கின்ருேம்.

ஹாலிவுட் நடிகர்களாலும் செய்ய இயலாத இந்த சாதனையை செய்து காட்டியவர்தான் மறைந்த நம்முடைய நடிக வேந்தர் பி. யூ. சின்னப்பா.

அவருடைய காலத்திலே, தமிழ்த் திரையுலகின் முடிசூடா மன்னர் அவர் தான். 'உத்தம புத்திரனில்' அவர் இடு கின்ற வாட்போரும்; 'ஆரியமாலாவில்' அவருடைய காதல் நடிப்பும்; கண்ணகி யிலே, 'மானமெல்லாம் போனபின்னே' என்று பாடிக் கொண்டு வருகையில் அவருடைய சோக நடிப்பும்; 'கிருஷ்ண பக்தியில்' 'செங்கமலம் என்ற தாசி; அவள் சீரங்க சேத்திரவாசி' என்று பஜனை செய்யும்போது அவர் வெளியிடு கின்ற வில்லன் நடிப்பும்; 'மங்கையர்க் கரசியில்,' அத்தாணி மண்டபத்தில் அவர் பொழிகின்ற வசன மழையும் நம் நெஞ்சை விட்டு என்றும் அகலாத நடிப்புச் செல்வங்களாகும்.

மறைந்த அந்த மேதை நடிப்பில் மட்டுமின்றி நாணயத்திலும் தலை சிறந்த வராகக் காட்சி தருகிருர். இறந்தபோது அவர் யாருக்கும் கடனளி அல்ல, கலை யுலகில் காணக் கிடைக்காத இது ஒன்றே அவருடைய பெருமையை விளக்குவதற்குப் போதிய சான்ருகும்.

இவரை ஒப்பந்தம் செய்து விட்டால் தம்முடைய பொறுப்பில் பாதி குறையும் என்று, அக்கால படமுதலாளிகள் எண்ணும் அளவிற்குத் தாமே பொறுப் பை ஏற்றுக்கொண்டு திறம்பட நடிக்கும் பண்பாளர் இவர். காலம் தாழ்ந்து படப்பிடிப்பிற்கு வருவதோ, அல்லது படப்பிடிப்பை ரத்து செய்வதோ இவ ரிடம் இல்லாததொன்று.

வேறு கட்சிகளின் துணையேதுமின்றி தன்னுடைய நடிப்புத் திறன் ஒன்றிலே லேயே புகழ் படைத்த இந்த உண்மைக் கலைஞர் இறந்தபோது நாமெல்லாம் துயர வெள்ளத்திலே ஆழ்ந்தோம். இத் தகைய கலைஞரை—நல்லதொரு நடிப் புச் செல்வரை; இனி நாம் காணப் போகின்ருேமா? என்று ஏக்கக் கண் ணீர் வடித்தோம்.

நம்முடைய கண்ணீரைத் துடைப்பது போல'நடிகர் திலகம்' சிவாஜி கணேசன் திரைவானிலே சுடர்விட்டு புகழ்ஒளி பரப்பத் துவங்கினர். படத்திற்கு படம், காட்சிக்குக் காட்சி புதுப் புது மெரு குடன் காட்சி தரும் சிவாஜி, சின்னப்பா வைவிட; ஏன்? இன்றைய உலக நடிகர் கள் அனைவரிலுமே சிறந்த நடிகராகத் திகழ்கின்ருர்.

ஏன் என்ருல் இன்றைய உலகின் தலை சிறந்த நடிகர்கள் மூவர். ஒருவர் சோக நடிப்பில் சிறந்தவரான மர்லன் பிராண்டோ; மற்ருெருவர் காதல் நடிப் பில் சிறந்தவரான ஸ்டுவர்ட்டு கிரேஞ் சர்; வேறு ஒருவர் வீர நடிப்பில் சிறந்த வரான யல்ப்ரனர்.



ஆனால் நம்முடைய ‘நடிகர் திலகமோ, இம் மூவகை நடிப்பும் கைவரப் பெற்ற வித்தகராகக் காட்சித் தருகிறார்.

‘முதல் தேதி’யில் அவர் காட்டுகின்ற சோகமும்; ‘புதையலில்’ அவர்காட்டுகின்ற காதலும், ‘மனோகராவில் அவர் காட்டுகின்ற வீரமும் உலகத்தில் உள்ள நடிகர்களில் வேறு யாராலும் காட்ட இயலாத ஒன்று என்றால் அது உண்மை. வெறும் புகழ்ச்சியில்லை.

சின்னப்பாவைப் போன்றே சிவாஜி கணேசனும் படத்தயாரிப்பாளர்களை விட, தானே அதிகப் பொறுப்பை எடுத்துக் கொள்ளுபவர். கடமையே உருவமான இவர் தயாரிப்பாளர்களுக்குத் தொல்லை தரும் கலையை அறியாதவர்.

6 மணிக்கு படப்பிடிப்பு என்றால் 5-50 க்கு எல்லாம் அவருடைய கார் படத் தயாரிப்பு நிலையத்திற்குள் நுழைந்துவிடும். ஒரு முறை வசன ஏட்டை, புரட்டி விட்டு நடிப்பதற்குத் தயாராகி விட்டால் அங்கு அழகு தமிழ் பவனி வரத் துவங்கி விடும். இரண்டாவது ‘டேக்’கிற்கு இடம் இல்லாதபடி ‘முதல்டேக்’கிலேயே, முதல்தரமாக நடித்துவிடும் பிறவிக் கலைஞர் அவர்.

மறைந்த மேதை சின்னப்பாவைப் போன்றே நம்முடைய சிவாஜியும் கட்சிகளின் துணை எதுமின்றி தம்முடைய நடிப்பு ஆற்றல் ஒன்றினாலேயே புகழ் பெருபவர்.

பணம் இருக்கும்போது ‘ஓகோ’ என்று வாழ்ந்து விட்டு பணம் தீர்ந்ததும் பெட்டிப் பாம்பாகி, வாழ்க்கையின் இறுதிக் காலத்தில் அல்லல்பட்டு; ஆற்றாது அழுதவர்களை மனதில் கொண்டு, வாழ்க்கையில் என்றும் ஒரே அளவாக வாழ்ந்து வந்தார் பி. யூ. சின்னப்பா. அதே போன்று நம்முடைய நடிகர் திலகமும் ஒரே அளவான வாழ்வை வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வருகிறார். இதே போன்று அவர் தம் வாழ்நாள் முழுவதும் இருப்பார்; இருக்க வேண்டுமென்பது நம்முடைய ஆவல். வாங்குகின்ற பணத்திற்கு பழுதில்லாமல் நடிக்க வேண்டும் என்ற கடமையும், தன்னைத் தூற்றுகின்றவர்களுக்கும் நன்மை செய்யும் கண்ணியமும்; கலைத்துறையில் அன்றி வேறு துறைகளில் ஈடுபட்டு நடிப்பாற்றலைக் குலைத்துக் கொள்ளாத கட்டுப்பாடும் இவரிடம்தான் உண்மையில் குடி கொண்டுள்ளன.

எல்லா வழியிலும் சின்னப்பாவின் வழித் தோன்றலான இவர் சின்னப்பா விட்டுச் சென்ற சில பணிகளை ஏற்று நடத்த முன் வருதல் வேண்டும். கன்னல் தமிழ்ப் படங்களில் வெற்றி முழக்கமிடுவதுடன்; களி தெலுங்கு பேசி, தெலுங்குப்பட மொன்றிலும், கவின் மலையாளம் மொழிந்து மலையாளப் பட மொன்றிலும்; கன்னடம் உச்சரித்து கன்னடப் பட மொன்றிலும் நடித்து அகில திராவிடப் புகழ் பெறுதல் வேண்டும். இந்திப்பட மொன்றில் நடித்து வடநாட்டு மமதையாளர்களுக்கு தமிழர்களின் சிறப்பை உணர்த்துவதுடன் அகில இந்தியப் புகழ் அடைதல் வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக உலகப் பொதுமொழியான ஆங்கிலம் பேசி (முயன்றால் முடியாதது எதுவுமில்லை) ஆங்கிலப் படம் ஒன்றில் நடித்து ‘ஆஸ்கர் பரிசு’ பெறுவதுடன் அகில உலகப் புகழ் படைத்த உலக நடிகராதல் வேண்டும். அடுத்து மற்றொன்றையும் நாடும், நாட்டு மக்களும் அவரிடமிருந்து எதிர்பார்க்கிறார்கள். பிருதிவிராஜைப் போன்று நடிகர் திலகம் அவர்களும் தம்முடைய செல்வத்திருமதலைகளில் ஒன்றை வாழையடி வாழையாக, ஒப்பற்ற நடிகராக்கி விடுதல் வேண்டும். கலைத் தாய்க்கு அவர் செய்ய வேண்டிய சேவையும், கடமையும் இதுதான்.

பின்னர் ஓய்வு பெற்று; வாழ்க்கை இன்பங்களை அனுபவித்து; தான் சிறுவயதில் பட்ட தொல்லைகளையும்; துயரங்களையும் நினைவில் கொண்டு, திறமை இருந்தும் முன்னுக்கு வர வாய்ப்பற்று தவிக்கும் ஏழைக் கலைஞர்களை முன்னணிக்கு கொண்டு வரும் நடிப்புக் கல்லூரி ஒன்றை நிறுவுதல் வேண்டும்.

தமிழ்த் தாய் தன்னுடைய தவப்புதல்வர்களில் ஒருவரான சிவாஜி கணேசனிடம் இதைத்தான் எதிர்பார்க்கிறாள். தமிழர்கள் அந்த இலட்சியக் கனவு நனவாகும் நாள் வெகு தூரத்தில் இல்லை என்றும் நம்புகின்றார்கள்.

Printed by D. Rathinavelu at Sri Bharathi Press, Choolai, Madras-7. Published by Artist A. BALU for Balu Bros' Publications, 131, Thayar Sahib St., Madras-2. and Edited by Artist A. SEENU.

பொங்கல் வெளியீடு
ஆர். எஸ். ஆர். மூவிடோன்
தர்ம பத்தினி
நடிகர்கள்: பாலையா • நம்பியார் • நாகய்யா • D. பாலசுப்ரமணியம்
சகஸ்ரநாமம் • ஜமுனா • சௌகார் ஜானகி • இலங்கேஸ்வரன் மனோகர்
டைரக்ஷன் சங்கீதம் கதை, வசனம் காமிரா ஸ்டுடியோ
V. கிருஷ்ணன் • வேதா • கலைமணி B.A. (HONS) • C.R. சீதாபதி • பிலிம்சென்டர்
WORLD NEGATIVE RIGHTS CONTROLLED BY : SIVAKUMAR FILMS
NO. 18. 4th. MAIN ROAD, GANDHI NAGAR, MADRAS-20.
BALU BROS

கலை
REGD NO. M. 7033
டிசம்பர்...58 • 75 காசு
ஸ்ரீ புரொடக்ஷன்ஸ்...
நல்ல தீரபபு
டைரக்ஷன்:
T. பிரகாஷ்ராவ்
திரைக்கதை, வசனம்:
முரசொலி மாறன் M.A.
ராஜ்ஸ்ரீ ரிலீஸ்
தயாரிப்பு: சுந்தர்லால் நஹாதா
BALU BROS